

# மக்கள் பாடும் பாட்டு

வானவில் கே.ரவி

# மக்கள் பாடும் பாட்டு

**வானவில் கே. ரவி**

புதிய இலக்கு புதிய தடம்

**நிவேதிதா பதிப்பகம்**

10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை,
விருகம்பாக்கம், சென்னை 600 092.
89393 87276 / 89393 87296
**email : nivethithapathippagam1999@gmail.com**

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | மக்கள் பாடும் பாட்டு |
| ஆசிரியர் | : | வானவில் கே. ரவி© |
| பொருள் | : | கவிதை |
| முதற் பதிப்பு | : | 2021 |
| அளவு | : | டெம்மி |
| தயாரிப்பு | : | நிவேதிதா பதிப்பகம்<br>10/3, வெங்கடேஷ் நகர் பிரதான சாலை, விருகம்பாக்கம்,<br>சென்னை - 600 092.<br>கைபேசி : 89393 87276 / 96 |
| ஒளியச்சு | : | வி. தனலட்சுமி |
| அட்டைப் படம் | : | சக்தி கிரியேட்டர்ஸ் |
| அச்சாக்கம் | : | விஷ்வா பிரிண்ட்ஸ், சென்னை-2. |
| பக்கங்கள் | : | 286 |
| விலை | : | **ரூ. 250** |

| | | |
|---|---|---|
| Title | : | Makkal Paadum Pattu |
| Author | : | Vanavil K. Ravi© |
| Subject | : | Poems |
| First Edition | : | 2021 |
| Size | : | Demmy |
| Published by | : | Nivethitha Pathippagam,<br>10/3, Venkatesh Nagar Main Road,<br>Virugambakkam, Chennai & 600 092.<br>Mobile No : 89393 87276 / 96 |
| Typeset by | : | V. Dhanalakshmi |
| Wrapper Desings | : | Shakhi Creators |
| Printed at | : | Viswa Prints, Chennai & 2. |
| Pages | : | 286 |
| Price | : | **Rs. 250** |

# பதிப்புரை

**கவிஞர் வானவில் ரவி**

*பெயருக்கு ஏற்றாற்போல பலவண்ணப் பரிமாணங்களைக் கொண்ட எழுத்தாளர். கவிச்சக்ரவர்த்தி கம்பன், மகாகவி பாரதியார், தெய்வப் புலவர் திருவள்ளுவர் உள்ளிட்ட தமிழின் அனைத்து கொடைகளையும் ஆய்ந்தறிந்து கட்டுரைகள், கவிதைகள் பல வடித்தவர்.*

*அவரது முந்தைய நூலான 'கானல் நீரைக் கடந்து' எனும் நூல் தமிழ் இலக்கிய உலகில் சிறப்பானதோர் இடத்தைப் பிடித்தது.*

*தொடர்ந்து அவரது வாழ்க்கைப் பயணத்தை மையமாகக் கொண்ட 'காற்று வாங்கப் போனேன்', ஆங்கிலத்தில் வெளியான பாடல்களடங்கிய* 'A Spark A Petal...', *'சொன்னதும் சொல்லாததும்' மற்றும் 'அணையாத சுடரேற்றுவேன்' என்ற கவிதைத் தொகுதி ஆகியவற்றைப் பதிப்பித்த பெரும் பேறு நிவேதிதா பதிப்பகத்திற்குக் கிடைத்தமைக்கு மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.*

*'மக்கள் பாடும் பாட்டு' என்கிற பாடல்களடங்கிய இத் தொகுதி தமிழ் இலக்கிய வரலாற்றில் நிகரற்ற ஓர் இடத்தைப் பிடிக்கும் என்பதில் ஐயமில்லை.*

**தேவகி இராமலிங்கம்**
*நிவேதிதா பதிப்பகம்*

முன்னுரை

# உலகமே இறைவனின் இசைவடிவம்

ஐந்து அல்லது ஆறு வயதிலேயே, இசைப்பாடல்களால் மிகவும் கவரப் பட்டேன். “மதுமதி” என்ற ஹிந்தி படத்தை முதன்முறையாகத் திருச்சியில் பார்த்த போது, ஒரு சிறிய மௌனத்திற்குப் பிறகு, “சுஹானா சஃபர் அவுர்” என்று திலிப்குமார் மூலமாக முகேஷ் பாடுவதைக் கேட்டுக் கிறங்கிப் போனேன். பதின்மூன்று வயதில், என் அக்கா, அதாவது, பெரியப்பாவின் மகள் கமலாவுக்கு இசைப்பாடலாகவே ஒரு கடிதம் எழுதினேன். “குழந்தையும் தெய்வமும்” என்ற படத்தில் இடம்பெற்ற, “அன்புள்ள மான்விழியே” என்ற பாடலின் மெட்டில், “அன்புள்ள சோதரியே ஆசையில் ஒருகடிதம்; இசையுடன் வருகிறதே – அதை – எழுதுவதென் இதயம்” என்று இசைப்பாடலாகவே அக்கடிதம் அமைந்தது.

இப்படித்தான் இசையுடனான என் இலக்கியப் பயணம் தொடங்கியது. இயக்குநர் கே.சுப்பிரமணியம் அவர்களுடைய மகளான நீலு அக்கா தந்த ஊக்கத்தால், நான் புகுமுக வகுப்புப் பயிலும் போது, “பாதுகா பட்டாபிஷேகம்” என்ற நாட்டிய நாடகத்துக்கு இசைப்பாடல் எழுதித் தந்த அனுபவம் என் இசைப்பயணத்திற்கு நல்ல தடமமைத்துத் தந்தது. என் இசையார்வத்தை மேலும் செப்பனிட்டு வளர்த்த என் இனிய நண்பர் வ.வே.சு. அவர்களை என் இசைப்பயணத்தின் வழிகாட்டியாகவே கருதுகிறேன். ஷோபனாவின் வீணை, இசைப்பாடல் எழுதும் என் முயற்சிக்கு மேலும் ஊக்கமளித்தது.

இந்தத் தொகுப்பில் இருப்பவையெல்லாமே இசையுடன் உதித்த பாடல்கள். மெட்டுக்குப் பாடலா, பாடலுக்கு மெட்டா என்ற விவாதத்தில் நான் சிக்கிக் கொண்டதில்லை. என் பாடல்கள் அனைத்துமே, (ஒன்றிரண்டைத் தவிர), மெட்டோடு பிறந்த பாடல்கள். என் மனம் பாடியதையே நான் பிறகு தாளில் எழுதுவேன். சில பாடல்கள் என்னுள் தோன்றிப் பலமுறை நண்பர்கள் வட்டத்தில் நான் பாடிய பிறகே எழுத்து வடிவில் ஏடேறின. இன்னும் எழுதப் படாமலேயே, என் இதயம் முணுமுணுத்துக் கொண்டிருக்கும் பாடல்களும் உண்டு. துண்டுக் காகிதங்களிலும், தைக்கப்பட்ட கோப்புகளிலும் எழுதிவைத்த இசைப்பாடல்கள் ஆயிரத்துக்கு மேல் இருந்தாலும், முகநூலில் நான் பதிவுசெய்த சில பாடல்கள் மட்டுமே இந்நூலில் இடம்பெறுகின்றன. முகநூலில் பதியப்பட்ட போதே தட்டச்சு செய்யப்பட்டு, நூலில் இடம்பெறத் தயாராக இப்பாடல்கள் இருந்தன என்பதைத் தவிர, இதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. மற்ற பாடல்களையும் தட்டச்சு செய்து மேலும் சில தொகுதிகள் வெளியிட இறைவன் அருள்செய்வான் என்று நம்புகிறேன்.

வயல்புறத்திலும், தொழிற்கூடங்களிலும், வீடுகளிலும், கல்விக் கூடங்களிலும், மேடைகளிலுமாகப் பலவகையான மக்கள் பாடும் பாடல்களின் வடிவில் நான் மனம் பறிகொடுத்தவன்.

“அம்பா மனம் கனிந்துனது கடைக்கண் பார்” என்ற பாபநாசம் சிவன் அவர்களின் பாடலை எம்.கே.டி. பாடக் கேட்டு எவ்வளவு பரவசம் அடைந்தேனோ, அதே அளவு, “ஏரிக்கரையின் மேலே” என்ற கவி கா.மு.ஷெரீஃப் பாடலையும், “மணப்பாறை மாடுகட்டி” என்ற மருதகாசியின் பாடலையும், டி.எம்.எஸ். பாடக் கேட்டுப் பரவசம் அடைந்தேன்.

“ஓ துனியா கே ரக்வாலே” என்று நௌஷத் இசையில் தர்பாரி கானடா ராகத்தில் முஹமத் ரஃபி பாடியதை ரசித்தது போலவே, “If I can dream of a better land where all my brothers walk hand in hand” என்று எல்விஸ் பிரஸ்லியும், “When I was sixteen I fell in Love” என்று க்ளிஃப் ரிச்சர்டும் பாடிய பாடல்களை ரசித்தேன்.

மிகவும் எளிமையான, பேச்சு வழக்கு நடையில் பாடப்படும் பாடல்களில் எனக்கு ஈர்ப்பு அதிகம். கொத்தமங்கலம் சுப்புவும், மருதகாசியும், இசைக்கவி ரமணனும் இந்த வேட்கையை

என்னுள் மேலும் வளர்த்தார்கள்.

முறையாக சங்கீதம் பயிலாத குறையையும், சுருதியுடன் இயைந்து பாடமுடியாமல் என் குரல்நாண்களில் இருந்த குறையையும் மீறி எனக்கு இசையில் உள்ள அளவு கடந்த காதலே, என் வளர்ப்புத் தந்தை ஆர்.கல்யாணராமன் தயாரித்த “ஸ்பரிசம்”, “ராஜா நீ வாழ்க” என்ற இரண்டு திரைப்படங்களுக்கும், “ஆதித்திய ஹ்ருதயம்”, “அமரத்வனி” (இரு தொகுதிகள்), “தெய்வகானாம்ருதம்” போன்ற சில இசைப்பேழைகளுக்கும் இசையமைக்க என்னைத் தூண்டியது. இப்பொழுது, “The Bard of Love” என்ற ஆங்கில இசைப்பாடல் பேழை (ஆல்பம்) ஒன்றை நானே அத்தனைப் பாடல்களையும் பாடி, வெளியிடும் அதீத துணிச்சலையும் இசையின் மேலுள்ள காதலே தந்தது.

பாரதி பாடிய ஒவ்வொரு வரியும் உண்மையே என்றாலும், ஒரு வரி எனக்கு இப்பொழுது ஒரு பேருண்மையாகவே தோன்றுகிறது:

“பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா”.

இதில் உள்ள பாடல்கள் நீங்கள் படிப்பதற்கு மட்டுமில்லை; பாடுவதற்கும் ஆகும். எத்தனை ஆண்டுகளானாலும் இந்தப் பாடல்கள் பாடப்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

என் இசைப்பயணத்தின் தொடக்க காலத்தில் என்னுடன் சேர்ந்து, இசையென்ற ஆச்சரியத்தைக் குழலூதியும், தாளமிட்டும் ஆராதித்த “காளிதாஸ்” என்ற என் உடன்பிறந்த தம்பிக்கு, இந்த இசைப்பாடல் தொகுப்பைக் காணிக்கையாக்குகிறேன்.

# உள்ளே...


| | | |
|---|---|---|
| *1.* | கூடச் சேர்ந்து பாட... | *15* |
| *2.* | காற்றுப் பல்லக்கிலே... | *16* |
| *3.* | எப்பொழுதோ கேட்ட இசை | *17* |
| *4.* | மனம் | *18* |
| *5.* | கடிதமும் கவிதையும் | *19* |
| *6.* | யார் பாதச் சுவடுகளோ! | *20* |
| *7.* | கனவு வாங்கலியோ, சாமீ! | *21* |
| *8.* | நெருப்பு – இன்னும் நெருங்கு | *22* |
| *9.* | அருந்த, அருந்த... | *23* |
| *10.* | செந்தழலில் வீணை... | *24* |
| *11.* | பாபா சேவடிகள் துணையே | *25* |
| *12.* | பட்டணத்துச் சாமி வந்து பற்றவைத்த தீ | *26* |
| *13.* | சுழலச் சுழல... | *27* |
| *14.* | யாரடி இந்த மாமுனி | *28* |
| *15.* | தென்றலில்லை, உன் அன்பு முகம் | *29* |
| *16.* | வேண்டுதல் | *30* |
| *17.* | வானமானவன் | *31* |
| *18.* | ஞானப் பெண்ணே | *32* |
| *19.* | பனித்துளியோ வாழ்க்கை | *33* |
| *20.* | அண்ணாச்சி பழனியிலே | *34* |
| *21.* | மழை மேகமா? மலர்தூவுமா! | *36* |
| *22.* | பாடணும் நான் பாடணும் | *37* |
| *23.* | பூவுக்கொரு பாடல் | *38* |
| *24.* | இசையிலே அசையலாம் | *39* |
| *25.* | உன் கண்ணுக்கு மையெழுத... | *40* |
| *26.* | உனக்கும் எனக்கும் | *41* |
| *27.* | யார் செய்த ஓசைகள்.... | *42* |
| *28.* | புத்தம் புது மலர் போல் | *43* |

29. பாடல் செய்த பாதை 44
30. ஜனனி, ஜனனி, ஜனனி! 45
31. ஒரே முத்தம் 47
32. காதல், காதல், காதல் 48
33. காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம் 49
34. கவிதை எழுத வா – காற்றே! 50
35. கடற்கரை மணலுல... 51
36. சித்திரத்துத் தாமரை 52
37. நெஞ்சுக்குள்ள பாடலுண்டு 53
38. காத்தாயீ ஓ காத்தாயீ 54
39. பூ மலர்வது போல் 55
40. நெய்யபிஷேகம் ஜமாய்கிறே! 56
41. சங்கீதம் பாடுகின்றேன் 57
42. சின்ன சின்ன பாதம் வைத்து... 59
43. பாடிப் பாடித் தொழுதும் 60
44. எப்படி எப்படித் தீண்டுவதோ! 61
45. புன்னகைத்தாலே புவியதிரும் 62
46. மழைக்கூத்தாடு மகமாயி 63
47. காற்றும் – தென்னையிளங் கீற்றும் 64
48. வெண்ணிலா மிதக்கும் வழி 65
49. வாழ்த்தப் பிறந்தவன் 66
50. மரப்பாச்சி பொம்மைகள் 67
51. ஏனிந்த மௌனம் 68
52. உன்னையொரு மலராய் மாற்றுகிறேன் 69
53. சேவிப்போர்க்கு ஆனந்த மூர்த்தி 70
54. கண்ணோடு கண் என்றாலும் 71
55. மழைத்தாளம் கேட்டு... 72
56. குரு வணக்கம் 73
57. கவிதை வண்டி 74
58. ஊழல் பெருச்சாளி 75
59. காகிதமா, ஆயுதமா? 76

60. கோப நெருப்பு 77
61. டாம் – ஜெர்ரி 78
62. தேர்தல் நேரம் 79
63. நாட்டைக் காக்கும் கையாலே 80
64. பட்டாம்பூச்சி 81
65. இல்லையானவன் 82
66. அந்த மழைத்துளி 83
67. நீ என்றாலும் நிஜம் 84
68. பேய்மழை 85
69. மாடு நம்ம சாமிடா டோய் 86
70. கேட்டு வாங்கிப் போட்ட பாட்டு 87
71. கோவம் வருதா? 88
72. யாரோட பாட்டு? 90
73. காசுக்கா ஓட்டு? 91
74. கண்ணைத் தொறந்த ராசாத்தி 92
75. அது, அந்தக் காலம் 94
76. சாவி எங்கே? 95
77. உங்க வக்கீல்! 96
78. மக்களைப் பாடும் வாயால்... 98
79. ஏமாத்தாதீங்க 99
80. ஓட்டும் நானே! 100
81. வாங்கையா, வேட்பாளர் ஐயா! 101
82. எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் 103
83. அவர் ஜெயித்து விட்டால்...? 104
84. மானத்தோடு வாழ்ந்திடுவோம் 105
85. தேர்தலோடு முடிந்து விடாது 106
86. கனவினிலே வந்து கவிதைப்படி 107
87. புறப்படு மச்சான் 108
88. இறுதி விண்ணப்பம் – 1 109
89. இறுதி விண்ணப்பம் – 2 111
90. உனக்கேன் ஊர் கவலை? 112
91. மரியாதை எந்நாளும் கொறயாதவன் 113

92. இருவேறு உலகத்து இயற்கை 114
93. சாராயப் பிரச்சினைக்குப் பேராயம்! 116
94. துட்டுக்குப் பாடலே 117
95. புதுச்சேரி வாத்தியாரு 118
96. கிட்டப்பாவோட கிண்கிணிக் குரல்! 119
97. காணாமப் போனாரா கொத்தனாரு? 120
98. தோன்றாத் துணை 121
99. எல்லாரும் மனுசங்கதான் 122
100. எத்துணையும் பேதமில்லை 124
101. பலே ரங்கநாதா 125
102. முன்னோர்கள் யார்? 126
103. கண்ணுல ஒத்திக்கணும் 127
104. நான் அந்தணன் 128
105. கண்ணில் வளரும் சித்திரம்போல்... 129
106. தமிழ்க்குமரி ஆண்டாள் 130
107. நாதசுர மன்னன் 131
108. ஜதி பல்லக்கு 132
109. இன்றிந்தக் கணமே 133
110. எல்லாருக்கும் நான் நண்பனுங்க! 134
111. அரசியல் கூத்து 135
112. விடுதி ஆட்டம் 136
113. நிலா, நிலா 137
114. தமிழ்நாடு, தமிழ்நாடாம் 138
115. உறவைச் சொல்லி கேக்காதே ஓட்டு 139
116. எங்கே போனீங்க, இந்தியரே! 140
117. ஒருவரை ஒருவர் 142
118. மாடி மேல மாடி கட்டி 143
119. விலை போக மாட்டோம் 144
120. உண்மையைப் பாடுகிறேன் 145
121. பனிச்சரிவில் சிவப்பு ரத்தம்..! 146
122. பொறுமைக்கும் எல்லையுண்டு 147
123. நம்ம நாடு 148

124. நானா பாடுகிறேன்! 149
125. நடுத்தெருவில் பாடுகிறேன் 150
126. தெருப்பாடகன் 152
127. நம்ம தேசங்க 153
128. என் பாட்டு முடியாது! 155
129. அட்றா சக்கே 156
130. மாதா சரஸ்வதியே! 157
131. வானம் நீ, நான் பறவை 158
132. எல்லாருக்கும் மார்கழி! 159
133. வாக்காளரே, வாக்காளரே! 160
134. வேட்பாளரே, வேட்பாளரே! 161
135. மன்னன் பிறந்து விட்டான்! 162
136. எழுந்திராய், நிலா! 163
137. நீதியின் குரல் 164
138. தமிழ் தமிழ் தமிழ்... 165
139. இனிமையான தமிழிலே... 166
140. எல்லாரும் நண்பர்களே! 167
141. களவாட வந்தாயோ கதிரேசா? 168
142. தேசம் இந்த தேசம் 169
143. நெஞ்சின் நிழல் 170
144. மனம், யாரை மிகத் தேடுமோ 171
145. உனக்காகவே... 172
146. ந்யாயத்தப் பேசு புள்ளே! 173
147. கூடுவிட்டுப் போன பின்னும்... 175
148. தெக்கத்திக் காத்துல.... 176
149. நடந்தாய் வாழி காவேரி 177
150. பாட்டுக் கேக்க நேரமில்லையா? 179
151. ரசம் போன கண்ணாடி 181
152. மனக் கதவைத் தட்டும் விரல் நான் 182
153. புதுப்புதுப் பொழுதுகள் புலர்ந்திடுமாம் 183
154. நடந்து செல்கிறோம்... 184
155. என் குருநாதன் 185

156. கவிதையாக வா! 186
157. அமர கவிதை 188
158. நானா வைத்தேன் இந்த நெருப்பை 189
159. நான் பாட்டாளி 190
160. எல்லாம் அவனே 192
161. தெய்வத்தில் பேதம் இல்லை 193
162. காதலியே ஓ காதலியே 194
163. நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்! 195
164. என்னையள்ளித் தின்றவள் 196
165. மலரட்டும் கவியே 197
166. பாரில் அதிசயம் பாரதி 198
167. நீயாகி மறைகின்றேன் 199
168. பாட்டிசைத்தால்... 200
169. மதுராபுரித் தாய் 201
170. கேட்காத பாடல் 202
171. பல்லக்கில் பாரதி 203
172. நம் தெய்வங்கள் 204
173. தீபாவளி உரையாடல் 205
174. தீபம் நீதானே! 207
175. சுப்பு போட்ட பொங்கல் 208
176. செல்பேசி என் தோழி 209
177. எத்தனை நாட்கள் காத்திருப்பானோ? 210
178. வீதிக்கு வீதி பாடுவோமே 211
179. நானேதான் அவளோ! 212
180. தேசிகன் யாரோ! 213
181. நேரமில்லையோ? 214
182. என்னென்னவோ சொல்லிப் பார்த்தேன்... 215
183. என்றும் முட்டாளுங்க... 216
184. கோஷத்தை நம்பாதே! 217
185. தமிழில் வாழ்த்துகிறேன் 218
186. ப்ரேமையின் வடிவம் 219
187. யாருக்கு யார் சொந்தம்? 220

188. டிஸ்னி உலகம்! 222
189. எங்கும் கண்ணன் 224
190. செல்ஃபோனால் 225
191. முற்றும் இழக்கும் மனத்துணிவு 226
192. ஆசிரியர்க்கே நம் முதல் வணக்கம் 227
193. வாடகை தருவாயா? 228
194. சிவப்பு முக்காடு... 229
195. ஏழு பிறவிகளும் மராமரம் 230
196. பழைய சுவடியில் 231
197. ஞானத் தோணி 232
198. சித்திரப் பெண்ணே 233
199. பாரதி தேசம் 234
200. நான் என்றும் குழந்தை 236
201. முகில்வண்ணம் 237
202. வட்ட நிலாத் தோசை 238
203. தந்தமுத்தம் ஒவ்வொன்றும் தாமரைப்பூ 239
204. நான் அழைத்தா நீ வரவேண்டும்? 240
205. பாரதி வீரம்! 241
206. மற்றும் ஓர் ஆண்டா? 242
207. த்யானம் 243
208. தினம்தோறும் படைக்கின்றேன் 244
209. மந்திரத் தமிழ் 245
210. கணநேர அமைதி 247
211. பெருவுடையார் 248
212. ஆலாபனை எதற்கு? 249
213. சனங்க பேசும் பாஷை 251
214. மக்கள் பாடும் பாட்டு 252
215. கலையட்டும் உன்மௌனம் 253
216. உள்ளம் மலராகத் தொழுவேன் 254
217. தச்சன் மகனே 255
218. கரைப்பதுதான் கவிதை 256
219. மனுசங்களா மாறணும் 257

220. இணைந்து வசிக்கிறேன் 259
221. சங்கீத சாம்ராஜ்ய மன்னவராம் 260
222. சாராய பரணி 261
223. நங்கையுன் கன்னங்களில் 262
224. தொடர்கதையாய் வளர்நிழலா 263
225. நீயா, நீல வானமா! 264
226. அடக்கம் அமரருள் உய்க்கும் 265
227. சிறுவர் இசை: 1 266
228. சிறுவர் இசை 2 267
229. சிறுவர் இசை: 3 268
230. சிறுவர் இசை : 4 269
231. சிறுவர் இசை : 5 270
232. சிறுவர் இசை: 6 271
233. சிறுவர் இசை: 7 272
234. சிறுவர் இசை: 8 273
235. சிறுவர் இசை: 9 274
236. சிறுவர் இசை: 10 275
237. சிறுவர் இசை: 11 276
238. யார் பாடும் பாடல் 277
239. தேன்மாரி பொழியும் 278
240. உயிர்ப்பூவில் ஊறும் அமுதம் 279
241. தோகைமயில் ஒண்ணு 280
242. என்னை எழுதிடும் கவிதையே 281
243. எல்லாருக்கும் பாடுறேன் 282

## 1. கூடச் சேர்ந்து பாட...

(இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் இசைக்கவி ரமணன் தொலைப்பேசியில் என்னைத் தொடர்பு கொண்டு பொதிகை தொலைக்காட்சியில் அவன் நடத்தி வந்த 'கொஞ்சம் தேநீர் கொஞ்சம் கவிதை' என்ற நிகழ்ச்சியில் நான் வந்து கலந்து கொள்ள வேண்டும் என்று அழைத்தான். நான் சற்றுத் தயங்கியதும், 'நீ சும்மா வந்து என் பக்கத்துல உக்காரு, என் கூடச் சேந்து கவிதை சொல்லு, மத்ததெல்லாம் நான் பாத்துக்கறேன்' என்றான். சம்மதித்து விட்டு நான் என் வீட்டுத் தோட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது வந்தது இந்தப் பாடல். என் கூடச் சேந்து பாட அந்த இறைவனையே அழைக்கும் பாடலாக இது முடிந்தது.)

கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன் - ஒரு
கோணச் சிந்து பாடச் சொல்லி மேடை யமைச்சேன் - எங்
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன்

தேடித் தேடி... தேடித் தேடி
தேடித் தேடித் தேடிக் கிட்டே காலம் கழிச்சேன் - நீ
தேவையில்ல என்றும் சில நேரம் நெனச்சேன்
நாடி நரம்பெல்லாம் உயிர் ஓசை எழுப்பும்
நாதத்துல ஒன்னக் கொஞ்சங் கண்டு புடிச்சேன்
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன்

என்ன வேஷம் போட்டுக் கிட்டு வந்து நிப்பாயோ - நீ
எங்க ஊரு ராசாவோ சீமை சிப்பாயோ
சிங்கம் புலி ஏறி வந்து சண்டை செய்வாயோ - என்
சின்ன சின்ன வார்த்தைகளச் சூடிக் கொள்வாயோ
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன்

பாட்டுக்கென்ன அர்த்த மென்று பண்டிதர்கள் தர்க்கம் செய்யப்
பாட்டுக் குள்ளே பாதம் வைத்து வந்தாய் நீயும் பைய பைய
பாட்டுக் கேத்த தாளம் என்று மேளம் கொட்டும் வானம்
வானம் பூமி ஒண்ணாச் சேரும் த்யானம் இந்த கானம்
த்யானம் இந்த கானம் த்யானம் இந்த கானம்

கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன் - ஒரு
கோணச் சிந்து பாடச் சொல்லி மேடை யமைச்சேன் - எங்
கூடச் சேந்து பாடத் தானே ஒன்ன அழச்சேன்

*2013*

## உ. காற்றுப் பல்லக்கிலே...

**(அன்று கார்த்திகைத் திருநாள். காற்றையே பல்லக்காக்கி அதிலேறி அமர்ந்துகொண்டு, மயிலைக் கபாலி கோயில் திருவிழாவில் சப்பரங்களில் போகும் அறுபத்து மூவரைப்போல் தீபங்கள் போகும் அந்த அதியற்புதக் காட்சி, இல்லை, தரிசனம், இன்று நினைத்தாலும் மெய்சிலிர்க்கிறது.)**

காற்றுப் பல்லக்கிலே - செல்லும்
கார்த்திகைத் தீபங்களே - உங்கள்
காதல் வனப்புகள் ஆடிக் களித்திட
ராகங்கள் நான்தருவேன் - இனிய
ராகங்கள் நான்தருவேன்

நேற்று நினைவுகளில் - துள்ளும்
நெஞ்சத் துடிப்புகளே - நீங்கள்
நேர்வந்தென் கண்முன் நின்று சிலிர்த்திடத்
தேகங்கள் நான்தருவேன் - புதிய
தேகங்கள் நான்தருவேன் (காற்றுப் பல்லக்கிலே)

முதிராத மகரந்தப் புதிரோடு தவம்செய்யும்
மொட்டுக்க ளுக்கொரு பாட்டிசைப்பேன் - அந்த
மௌனத்தின் வாசலை மோதித் திறக்கும் - பனி
முத்துக்க ளுக்கொரு பாட்டிசைப்பேன் (காற்றுப் பல்லக்கிலே)

புரியாத கதியோடு சுகமான ஜதியோடு
நதியாக வந்தாலும் நான்பாடுவேன் - இன்னும்
புலராத பொழுதுக்குப் புகைபோடும் மார்கழிப்
பனியாக வந்தாலும் பாட்டிசைப்பேன் (காற்றுப் பல்லக்கிலே)

முடியாத பாட்டுக்கு முதலாக என்னுயிரை
முழுதாக நான்தந்து விளையாடுவேன் - அந்தப்
பாட்டுக்குக் கருவாகிப் பண்ணென்ற உருவாகிப்
பாரெங்கும் காற்றாகப் பறந்தோடுவேன் (காற்றுப் பல்லக்கிலே)

*1977*

## 3. எப்பொழுதோ கேட்ட இசை

எப்பொழுதோ கேட்ட இசை
எப்பொழுதோ பார்த்த முகம்
எப்பொழுதோ செய்த பிழை
எப்பொழுதோ கண்ட சுகம்
இப்பொழுதுக் கேனிந்தக் கனவு - எங்கும்
இல்லாத பொருளோடு உறவு

அலைகளில் தோன்றும் குமிழிகள் போலே
அகந்தையில் தோன்றும் நினைவுகளைக்
கற்பனையாலே அற்புதமாகக்
கட்டிவைத்தாலும் நிற்பதுண்டோ
இப்பொழுதுக் கேனிந்தக் கனவு - எங்கும்
இல்லாத பொருளோடு உறவு

நிகழ்ச்சிகள் என்றே பெயர் கொடுத்தாலும்
சரித்திரம் என்றே வடித்து வைத்தாலும்
சுகமளித்தனவும் துயர் கொடுத்தனவும்
தோற்றம் இழந்தன தோற்றன யாவும்

இப்பொழுதுக் கேனிந்தக் கனவு - எங்கும்
இல்லாத பொருளோடு உறவு

புலன்களின் வழியே புகுந்தன எல்லாம்
புகைந்து கொண்டிருக்கும் வேளையிலே - ஒரு
புதிர்த்துளி பிறக்கும் புதுக்குரல் கொடுக்கும்
அதைக் கவிதையென் றழைக்குமென் நெஞ்சம் - என்
அனுபவமே அது வளர்ந்திடும் மஞ்சம்

எப்பொழுதோ கேட்ட இசை
எப்பொழுதோ பார்த்த முகம்
எப்பொழுதோ செய்த பிழை எப்பொழுதோ கண்ட சுகம்
எப்பொழுதும் என்னோடு வாழும் - என்
இதயத்தின் இசையோடு சேரும்

*01.10.1977*

## 4. மனம்

ஏதேதோ எண்ணிப் பார்க்கும்
எங்கெங்கோ பறந்து போகும்
தீதாகும் நன்றுமாகும்
திடுக்கென்று நின்று போகும் (ஏதேதோ)

தன்முடிவைத் தானே எண்ணித்
தனக்குள்ளே குமைந்து கொள்ளும்
பார்வைக்குள் ஒளிந்து கொள்ளும்
பாட்டாக வரைந்து தள்ளும் (ஏதேதோ)

தானற்ற பொருள்களுக்குள்
தானாக நுழைந்து கொண்டு
ஞானத்தைத் தேடுகின்ற
நாடகம் நடிப்பதுண்டு
தன்னையே கூறு போட்டுத்
தத்துவப் போர் நடத்திப்
பன்மையை வென்றதாக
பாவனை செய்வதுண்டு (ஏதேதோ)

*1978*

## 5. கடிதமும் கவிதையும்

(இந்தப் பாடலுக்கு ஒரு வரலாறு உண்டு. 35 ஆண்டுகளுக்கு முன், இசைக்கவி ரமணன் பங்களூரில் இருந்த போது, எனக்கு நீண்ட கடிதங்கள் சில போட்டிருந்தான். நான் கடிதம் எழுதுவதில் கொஞ்சம், இல்லை ரொம்பவே சோம்பேறி. பதிலே போடவில்லை. ரமணன் அதற்கு வருத்தப்பட்ட போது, கடிதமாக எழுத நினைத்துக் கவிதையாக எழுதி முடித்தேன். அதை உடனே ரமணனுக்குத் தொலைப்பேசியில் பாடியும் காட்டினேன். அதிலிருந்து அவன் என்னிடம் கடிதம் எதிர்பார்ப்பதில்லை, எங்கேயாவது மீண்டும் தொலைப் பேசியில் பாடிவிடுவேனோ என்ற அச்சம் காரணமாக....!)

கடிதம் எழுதும் வழக்கமில்லை
கவிதை எழுத முடியும் - வெறும்
சேதி கேட்க ஜீவன் இல்லை
தேம்பி அழத் தெரியும் - மனம்
தேம்பி அழத் தெரியும்

(கடிதம்)

முடிவு கூட புலப்படாத பாதை யிந்த வாழ்க்கை - இதில்
அன்பு நட்பு காதல் பாசம் அளவிலாத சேர்க்கை

(கடிதம்)

ஒரு கணத்தில் உருவமெய்தி ஒரு கணத்தில் மறையும் - மனம்
உலகம் என்றும் யுகங்கள் என்றும் உருவகங்கள் புனையும்

(கடிதம்)

வானமிங்கு மழைபொழிந்து வாழ்த்துகின்ற போதும் - இருள்
வடிவமொன்று மின்னலாய் ஒளி வழங்குகின்ற போதும் - இனிய
கானம் ஒன்று கவிதையாகக் காதில் வந்து மோதும் - உன்
ஞாபகத்தை உறுதி செய்யப் பாடலொன்று போதும்

(கடிதம்)

*03.08.1978*

## 6. யார் பாதச் சுவடுகளோ!

**(ஒரு முன்னிரவு நேரத்தில், மகாபலிபுரம் கடற்கரையில் இருந்தபோது, மின்சாரத் தடையால் எல்லா விளக்குகளும் அணைந்தன. வானத்திலே, அதுவரை பார்த்திராத அளவு, மிக நெருக்கமாக நட்சத்திரக் குவியல், அள்ளிக் கொட்டினாற்போல்... !)**

யார்பாதச் சுவடுகளோ யாருடைய கனவுகளோ
யார்வீட்டுத் தோட்டத்திலே பூத்தமணிச் சிதறல்களோ

யாருமற்ற பாழ்வெளியில் அம்மானை ஆடுவதார்
கண்சிமிட்டும் மலர்களிலே பொன்மாலை சூடுவதார்
வேருமில்லை நாருமில்லை விண்மலர்கள் வாடவில்லை
வேதத்துடன் பிறந்தவொளி இன்னும்வந்து சேரவில்லை

யார்பாதச் சுவடுகளோ யாருடைய கனவுகளோ
யார்வீட்டுத் தோட்டத்திலே பூத்தமணிச் சிதறல்களோ

ஒவ்வொன்றும் ஓருயிராம் ஒவ்வொன்றும் சூரியனாம்
ஒவ்வொன்று மேயுலகம் உயிர்க்கும் விளைநிலமாம்
பாற்கடலின் ஓரத்திலே பாவைவிளக் கானவையாம்
பாதைதவ றாமல்விதிப் பந்தல்கட்டி ஆள்பவையாம்

யார்பாதச் சுவடுகளோ யாருடைய கனவுகளோ
யார்வீட்டுத் தோட்டத்திலே பூத்தமணிச் சிதறல்களோ

*20.08.1988*

## 7. கனவு வாங்கலியோ, சாமீ!

கனவு வாங்கலியோ சாமீ கனவு வாங்கலியோ
மோந்து பாத்தா மூணு ஜென்மம்
தொட்டுப் பாத்தா ஏழு ஜென்மம்
கனவு வாங்கலியோ சாமீ கனவு வாங்கலியோ

கூவிக் கூவி விக்குறேன் - ஓங்
கூட வந்து நிக்குறேன்
கூடை கூடை யாகக் கனவு
கொண்டு வந்து கொட்டுறேன்
கனவு வாங்கலியோ சாமீ கனவு வாங்கலியோ

தவள போலத் தாவித் தாவிப் போன கனவு வேணுமா
பாம்பு போலப் படமெ டுத்த பழைய கனவு வேணுமா
மனுச னாக வந்து வந்து மாயும் கனவு வேணுமா
தினுசு தினுசா கனவு தருவேன் தள்ளிப் போகத் தோணுமா
கனவு வாங்கலியோ சாமீ கனவு வாங்கலியோ

சொடலை யாண்டிக் காட்டுக் குள்ளே
பாண்டி யாடும் புள்ளநான்
சொழலு கின்ற பூமிப் பந்தை
சொழட்டி யாடும் கள்ளிதான்
நெழலுக் காச்சம் ஒதுங்கிக்க - என்
நெனப்பு வந்தா பதுங்கிக்க
நீயும் நானும் ஆடும் ஆட்டம்
தானிவ் வுலகம் புரிஞ்சுக்க

கனவு வாங்கலியோ சாமீ கனவு வாங்கலியோ

*1980*

## 8. நெருப்பு - இன்னும் நெருங்கு

('கேம்ப் - ஃபயர்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் ஒருவகையான கூடாரப் பாடல் இது.)

வானுக்கும் பூமிக்கும் வளர்ந்து சிரிக்குது நெருப்பு - இங்கே
ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லை
இன்னும் நெருங்கு
நெருப்பு - இன்னும் - நெருங்கு
நெருப்பு - இன்னும் - நெருங்கு

காட்டுமல்லிப் பூக்களுக்குக் காவலிருக்கும் தெய்வ நெருப்பு
காற்று வந்து காதல் செய்யக் காத்திருக்கும் கன்னி நெருப்பு

நெருப்பு - இன்னும் - நெருங்கு
நெருப்பு - இன்னும் - நெருங்கு

நிமிர்ந்து பார்த்தால் நீலம் நெருப்பு
நெருங்கி விட்டால் கோபச் சிவப்பு
இறங்கி விட்டால் எங்கும் இருட்டு
நெருப்புக் குள்ளேயோர் உலகம் இருக்கு
நெருப்புக் குள்ளேயோர் உலகம் இருக்கு

வானுக்கும் பூமிக்கும் வளர்ந்து சிரிக்குது நெருப்பு - இங்கே
ஆணுக்கும் பெண்ணுக்கும் பேதமில்லை
இன்னும் நெருங்கு
நெருப்பு -இன்னும் - நெருங்கு
நெருப்பு - இன்னும் - நெருங்கு

*1982*

## 9. அருந்த, அருந்த...

அருந்த அருந்த ஓர் அனுபவ போதை
அமுதமடீ உன் பார்வை

திறந்த மனத்தில் தென்றலைப் போல்நுழைந்து
சிங்கார ரசமாகி உணர்வெங்கும் கலந்து
வலம் வருவாய் நீ ஞானரதம் - உன்
வண்ணங்கள் வடிவங்கள் நூறுவிதம்

அருந்த அருந்த ஓர் அனுபவ போதை
அமுதமடீ உன் பார்வை

பொழிந்த கவிமழையில் புனைந்தது தேகம்
புகைவதும் கலைவதும் புதுப்புது ராகம்
விளைந்தது மின்னல் இமைத்திரை ஓரம்
விழிகளில் நிகழ்ந்தது மேகசந்தேசம்

அருந்த அருந்த ஓர் அனுபவ போதை
அமுதமடீ உன் பார்வை

விசித்ர மயூரம் நட்சத்ர ஹாரம்
வியனுல கென்றொரு வேத விலாசம்
காலையும் மாலையும் ரவிச்சந்த்ர உதயம்
கனவுகளில் ஒரு ஸ்ருதிலய ப்ரளையம்

அருந்த அருந்த ஓர் அனுபவ போதை
அமுதமடீ உன் பார்வை

*25.03.1984*

## 10. செந்தழலில் வீணை...

செந்தழலில் வீணை செய்து தந்தாயே
எந்த விரல் மீட்டுமோ - தாயே
என்ன இசை கேட்குமோ

உன் விரலால் நீ தொட்டு விட்டாலதில்
உருவாகும் ப்ரளையம் - உன்
புன்னகையின் துளி பட்டு விட்டால் உடன்
புயலாகும் இதயம்
கடை விழியாலே மீட்டி விடு - அந்தக்
கானத்திலே நீ காட்சி கொடு

பஞ்சணையில் வைக்க அஞ்சுகிறேன் - அதை
நெஞ்சுக்குள்ளே வைத்துக் கொஞ்சுகிறேன்
எண்ணமெல்லாம் அதன் தீப்பொறிகள்
எத்திசையும் இசைத்தேன் துளிகள்
கடை விழியாலே மீட்டி விடு - அந்தக்
கானத்திலே நீ காட்சி கொடு

சொற்களெல்லாம் அந்தச் சுடு நெருப்பில்
சூல் கொள்ள முடியாமல் துவளுவதும் - எந்தக்
கற்பனையும் அந்த அக்கினியை
உட்கொள்ள முடியாமல் உருகுவதும் - என்ன
அற்புத மோ இந்தக் கான மழை
அகிலமெல்லாம் அலைமோதுமம்மா
முட்புதராயுள்ள வாழ்க்கையிலும் ஒளி
முளைத்து விட்டாலது போதுமம்மா

*1986*

## 11. பாபா சேவடிகள் துணையே

ஜெய் ஜகதீச ஹரே பாபா ஜெய் ஜகதீச ஹரே
ஐம்புலன்களும் உனதடிமை - என்
அனுபவங்கள் உனக்குரிமை
அமைதியொன்றே இனிமை - அதை
அருள்வதும் உன்மகிமை

உள்வெளி என்பதுன் ஒளிநிழலே - பே
ருண்மையின் எழில்வடிவே - பே
ருண்மையின் எழில்வடிவே
கள்வெறி போலிரு கண்கள் சுழற்றிக்
கற்பூரம் காட்டுகிறோம் - அதிலுன்
பொற்பாதம் காணுகிறோம்

ஆசைகள் அத்தனையும் கரைத்து - உனக்
காரத்தி ஏந்துகிறோம் - பாபா
ஆரத்தி ஏந்துகிறோம் - உன்
ஆரத்தி லேமணிச் சதங்கைக ளாயெங்கள்
பாரத்தைப் பூட்டுகிறோம் - உயிர்
வீணையை மீட்டுகிறோம்

நாதப்ர வாகத்தில் நனையவைத்து - ஹரி
நாராயணா என்போம் - நர
நாராயணா என்போம்
இடர்வரும் முன்வரும் சுடரொளி நீயே
இதயம் திறந்து வைத்தோம் - அதிலுன்
உதயம் விழைந்து விட்டோம்

உன்மத்த மான இரவினிலே - உயிர்
ஊடுருவும் ஒளியே - உயிர்
ஊடுருவும் ஒளியே - எங்கள்
ஜென்மங்கள் தீர்க்கும் காருண்யமே - அருள்
ஜீவநதிச் சுனையே - பாபா
சேவடிகள் துணையே

*1986*

## 12. பட்டணத்துச் சாமி வந்து பற்றவைத்த தீ

வானவில்லின் நாணறுந்து
போனஅம்பு போனதே
நீலக்கடல் ஓலமென்றும்
ஓய்வதில்லை தோழனே
ஞானச்சுட லைக்கதவு
மூடுவதில் லைகணமே
ஞாபகங்க ளில்மயங்கி
வீழுவது மேன்தினமே

சட்டிசுட்ட பின்னுமிந்தச்
சட்டையென்ன காவலா
விட்டகுறை தொட்டகுறை
விட்டுவில காததா
சட்டுவத்தில் வேகவைத்துக்
கட்டுப்படி யாகுமா
முட்டைவிட்டுக் குஞ்சுவரப்
பாதையின்றிப் போகுமா

பட்டணத்துச் சாமிவந்து
பற்றவைத்த தீயடா
பத்ரகிரியார் மயங்கிப்
பற்றுவைத்த நாயடா
பட்டுப்பட்டும் தேறவில்லை
பாழுமனப் பேயடா
பட்டினியில் பத்தியத்தில்
தீர்வதில்லை நோயடா

சாட்டைக்கொரு சாட்சியுண்டு
பம்பரத்தைப் பாரடா
சாதகப்புள் ளின்சுவடி
சாற்றுவது கேளடா
நீட்டிப்படுத் தாலுடல்
நெருப்புக்குத் தானடா
நிச்சயித்த பின்னுமென்ன
மிச்சமிது வீணடா

*14.02.1987*

## 13. சுழலச் சுழல...

கண்ணில் ஒரு நாத மின்னல் சுழலச் சுழலக்
காலில் ஜதியாக அலைகள் புரளப் புரளக்
காற்று சுழலக் காட்சி சுழலக்
கனவும் நினைவும் கலந்து சுழல

(கண்ணில்)

பண்ணமைக்கும் தாகம் நெஞ்சில் பெருக - ஒரு
பாதையாகப் பால் நிலவும் உருக
எண்ணப் பறவையின் வண்ணச் சிறகுகள் விரிய - அதில்
ஏறிக் கொண்டு கவிதை நெஞ்சம் உலவ

(கண்ணில்)

பூவிதழைப் போலப் பொழுது மலர - ஒளி
புத்தம் புதிதாயவிழ்ந்து வளரக்
கூவியழைக்காமல் என்னுள் நுழைய - ஒரு
கோடிக் குயில்கள் கூடி வந்து குலவ

(கண்ணில்)

*10.07.1988*

## 14. யாரடி இந்த மாமுனி

(தொகையறா)

புழுதியிலே ஆடையடி புரியாத ஜாடையடி - தன்
போக்கில் நடக்கின்ற கால்களடி
உழுது வைத்த மண் போல உள்ளீர்க்கும் கண்களடி - ஒளி
ஊற்றெடுத்துப் பாய்கின்ற பார்வையடி
எழுதி வைக்க முடியாத ஏகாந்த வாசமடி
எங்கும் பரவுமொரு நேசமடி
தொழுவதற்கும் முடியாத தூய்மையடி திருவோடு
தூக்கி வந்து குரல் கொடுக்கும் தாய்மையடி

(பாடல்)

யாரடி இந்த மாமுனி - வெளிப்
பார்வையில் ஒரு பக்கிரி
சீரடி என்னும் ஊரடி - அங்குச்
சென்றிவன் பெயர் கேளடி

வெள்ளை தாடி கந்தல் ஆடை
வேறு லோகம் என்னும் பார்வை
உள்ளம் உண்டு கள்ளம் இல்லை
கவனம் உண்டு சலனம் இல்லை (யாரடி)

ஓடெடுத்துச் சென்று வாங்கி
உண்டதே நாம் கண்ட கோலம்
வீடு தோறும் தீபமாகிக்
கொண்டதோ ஒரு ஜோதி ரூபம் (யாரடி)

புனிதமே தன் மனமிரங்கி
மனித வடிவம் பூண்டது
கருணை என்னும் சுடரெழுந்தருள்
பாதை காட்ட வந்தது
உருகினோம் அள்ளிப் பருகினோம் - உயிர்
ஒட்டமாகிக் கலந்தது
எளிமை என்னும் தெளிவு காட்டி
இதயம் எங்கும் நிறைந்தது
சாயிபாபா சாயி நாதா
சத்தியம் நீ தேவதூதா
மாயை இல்லை மரணம் இல்லை
மானிடத்தின் வெற்றியைத் தா (யாரடி)

*22-11-1987*

## 15. தென்றலில்லை, உன் அன்பு முகம்

தேன்
அள்ளி இரைத்தது தென்றலில்லை - உன்
அன்பு முகம் - நீ
சொல்லிக் கொடுத்தது காதலில்லை - அது
தேவ சுகம்

நட்சத்ரத் தோரணம் வானிலில்லை - உன்
பார்வையில் நீ புனைந்தாய்
நாதத்தின் ஊற்றெந்தன் நெஞ்சிலில்லை - புன்
னகையுடன் நீ நுழைந்தாய்
சற்றிந்த மானிடச் சாயையிலே - ஒரு
சரஸம் நடத்த வந்தாய் - உன்
சந்நிதியாய் ஒரு கவிதை செய்தேன் - அதில்
சத்தியம் ஒளிர வைத்தாய்
(தேன் அள்ளி)

பூவிதழைத் தென்றல் தொடுவது போலென்
பாடலுன் பாவங்களைத்
தீண்டுவதும் உயிர் வேண்டுவதும் இசை
வேள்வியென் றானதடி - தழல்
மூண்டது போலொரு தாகத்தி லேயென்
மௌனம் உடைகிறதே
சீண்ட வரும் மொழிச் சிதறல்களை அது
தாண்டி விரைகிறதே - உன்னைத்
தஞ்சம் அடைகிறதே

தேன்
அள்ளி இரைத்தது தென்றலில்லை - உன்
அன்பு முகம் - நீ
சொல்லிக் கொடுத்தது காதலில்லை - அது
தேவ சுகம்

*02.05.1989*

## 16. வேண்டுதல்

பாதை தவறாத நேர்மை அருள்வாயே - ஒளிப்
பார்வை மயங்காத உறுதி தருவாயே
சாதகம் விலகாத சித்தம் இசைவாயே - எந்தச்
சலனமும் அணுகாமல் என்னுள் நிறைவாயே

(பாதை தவறாத)

பாச வலையில் சிக்கி உழலாமல் - கொடும்
பாவ வினையின் வழி சுழலாமல்
நேச விரிவுக் கெல்லை வகுக்காமல் - என்
உணர்வில் நுழைந்து லயம் புரிவாயே

(பாதை தவறாத)

அன்பில் அருள் வளரச் செய்வாயே - பே(ர்)
இன்பம் அதில் மலரச் செய்வாயே
சங்கம் பரவ தயை புரிவாயே - சங்
கல்பமாக என்னுள் வருவாயே
(பாதை தவறாத)

*08.05.1989*

## 17. வானமானவன்

மலையில் இருந்து விழுந்த கதிரைத்
தழல் எரித்ததார் - அவன்
மறைந்ததாலே மனம் வருந்திக்
குழல் விரித்ததார்
விரித்த குழலில் கோடி மலர்கள்
பறித்து வைத்ததார்
வெண்ணிலா முகம் மலர்ந்து
சிரித்திருப்பதார்
மனமடங்க கதியெழுந்து
வானமானவன்
வார்த்தையுள் மலர்ந்து கவிதைக்
காட்சியானவன்

சுழலும் கோள்கள் இடையிலே
சுநாதமாவதார் - ஒரு
சுடரசைவில் லயம் கலந்து
படரவைப்பதார்
நிழலும் ஒளியும் தழுவவே
நிசப்தம் ஆவதார்
இடைவிடாமல் கடலெழுப்பும்
ப்ரணவம் ஆவதார்
மனமடங்க கதியெழுந்து
வானமானவன்
கவிதையுள் கலந்திருக்கும்
கானமானவன்

எவ்வுயிர்க் குள்ளும் நுழைந்தெங்
கெங்கும் உள்ளதார்
தானிலாத தேயிலாத
தன்மை கொள்வதார்
செங்கதிர்க்கும் தண்மதிக்கும்
சிகரமாவதார்
கோடிக்கோடியாய்ப் பிரிந்து
கூடுகின்றதார்
மனமடங்க கதியெழுந்து
வானமானவன்
கவிதையாய்க் கனிந்த பிறகு
ஞானமானவன்

*17-12-1989*

## 18. ஞானப் பெண்ணே

விழிகூடும் மண்டபத்தில் விடிவெள்ளி யாகவந்து
விளக்கேற்றி வைக்கின்ற ஞானப்பெண்ணே - இன்னும்
விரியாத மொட்டுக்குள் ஒருவான வெளியாகி
விளையாட வருவாயோ
ஞானப்பெண்ணே - விட்டு
விலகாமல் இருப்பாயோ
ஞானப்பெண்ணே

மொழிகூடும் ஆகாச மோனத்தில் ஒருதீபம்
முளைக்கின்ற விதமென்ன
ஞானப்பெண்ணே - இன்பம்
முகிழ்க்கின்ற சுனையூற்றின் முனைமீது
நினைவொன்றிப்
பிடிக்கின்ற பதமென்ன
ஞானப்பெண்ணே - என்னைப்
பிரியாமல் இருப்பாயோ
ஞானப்பெண்ணே

சுழியோடும் வெள்ளத்தில் சுழலாமல் நீராடி
ஸ்ருதியோ டெழுந்தாடும்
ஞானப்பெண்ணே - ஒரு
சுடராகிச் சுடருக்குள் நிழலாகி நிழலுக்குள்
படராத ஒளியாகும்
ஞானப் பெண்ணே - இந்தப்
பதருக்குள் மணியாகும்
ஞானப்பெண்ணே

*17.12.1989*

## 19. பனித்துளியோ வாழ்க்கை

பனித்துளியோ வாழ்க்கை பரவசத்தில் வேட்கை
மனிதனாகப் பிறந்த பின்னும்
மரணம் ஏனோ சொல் (பனித்துளியோ)

தனித்தனியே நீயும் நானும்
சுவரெழுப்பிக் கொண்டு வாழும்
நிலைமை ஏனோ நிஜம்தானோ
நீயுடைத்துச் செல் (பனித்துளியோ)

கனமில்லாத காற்றுப் போல
ககனமெங்கும் திரியலாம்
கர்வமென்ற ஆடையின்றிக்
களிநடம் நாம் புரியலாம்
மனமெடுத்துச் சென்று மீண்டும்
பிறப்பதை நாம் வெல்லலாம்
மற்றவர்க்கும் கவிதையால் - இந்த
மர்மத்தை நாம் சொல்லலாம் (பனித்துளியோ)

மொழியெடுத்து வந்த போதும்
கவிதை மொழியில்லை
விழி திறந்து ரசித்த போதும்
ரசனை விழியில்லை
விழுந்த வெய்யில் எழுந்து வந்தால்
மீண்டும் ஒரு காலை
விழுந்தெழுந்தது பூமியன்றோ
விழுவதே மாயை - நாம்
விழுவதே மாயை

(பனித்துளியோ)

*25-12-1989*

## 20. அண்ணாச்சி பழனியிலே

[ஒரு சொல் போதும் ஒரு பாடல் பிறக்க. 'உலகெலாம்' என்று இறைவனே ஒரு சொல் எடுத்துக் கொடுக்க, அதிலிருந்து பெரியபுராணக் காவியமே உதித்தெழவில்லையா? பல ஆண்டுகளுக்கு முன்னால், சபரி மலையில் இருந்து இறங்கிப் பம்பைக் கரையில் என் குழுவினரோடு நடந்து வரும் போது, ஒலிபெருக்கியில் யாரோ இருவர் பேசிக் கொண்டது சத்தமாகக் கேட்டது.

"என்ன ராஜகோபால் அண்ணாச்சி வரலியா?"

"அண்ணாச்சி பழனிலே இருக்கார். சாயந்தரம் புறப்பட்டு வரார்."

'அண்ணாச்சி பழனியிலே' என்ற சொல் மட்டும் என் நெஞ்சில் எதிரொலிக்க, அப்பொழுதே, என் குழுவினரோடு பாடிக் கொண்டே திரிவேணி பாலத்தை அடைந்தேன்.]

*அண்ணாச்சி பழனியிலே - தம்பி*
*அத்வானக் காட்டினிலே*
*ஒண்ணாக வைத்துக் கொண்டாடுவோம் - ரெண்டு*
*கண்ணாக வீட்டினிலே*
*(அண்ணாச்சி பழனியிலே)*

*புள்ளி மானத் தேடி வேட்டைக்குப் போயி*
*வள்ளிமானக் கொண்டுவந்தான் - அண்ணங்காரன்*
*வள்ளிமானக் கொண்டுவந்தான்*
*புலிப்பால் தேடிக் காட்டுக்குப் போயி*
*புலிமேல் ஏறிவந்தான் - சின்னத்தம்பி*
*புலிமேல் ஏறி வந்தான்*
*(அண்ணாச்சி பழனியிலே)*

*கோவத்தி லேவெறுங் கோவணத் தோடே*
*குன்றேறி நின்று கொண்டான் - அண்ணங்காரன்*
*குன்றேறி நின்று கொண்டான்*
*யோகத்தி லேதவக் கோலத்தில் சபரி*
*மலைமேல் அமர்ந்துகொண்டான் - மணிகண்டன்*
*மலைமேல் அமர்ந்துகொண்டான்*
*(அண்ணாச்சி பழனியிலே)*

காமனை எரித்த கண்ணில் இருந்து
கனல்வடி வாயுதித்தான் - கந்தசாமி
கனல்வடி வாயுதித்தான்
மோகினி சுதனாய் அவதரித் தேநம்
மோகம் எரித்திடுவான் - ஐயப்பன்
மோட்சம் அளித்திடுவான்
(அண்ணாச்சி பழனியிலே)

சரவண பவவெனும் மந்திரத் தில்வேத
சாரம் உரைத்திடுவான் - வேதாந்த
சாரம் உரைத்திடுவான்
சரணமென் றேமனம் உருகி யழைத்தால்
தரிசனம் தந்திடுவான் - ஐயப்பன்
'தத்வமஸி' என்பான்
(அண்ணாச்சி பழனியிலே)

*1990*

## 21. மழை மேகமா? மலர்தூவுமா!

மழைமேகமா மலர்தூவுமா
திசையெங்கும் தென்றல் காற்று
அசைகின்ற அழகைப் பார்த்து
மழைமேகமா மலர்தூவுமா

நிழல்தேடும் ஒளிபோல் எந்தன்
நினைவுகள் பறந்தன
குழல்தேடும் மலர்போல் எந்தன்
கனவுகள் குழைந்தன
மழைமேகமா மலர்தூவுமா

சுழலாக அலைகள் பிரிய
ஒருதீபம் நடுவில் எரிய
அதைக்காணவும் நடுங்கி - மீன்
விழியெலாம் இமைகள் குவிய
மழைமேகமா மலர்தூவுமா

ஸ்ருதியோடு இரவும் துயில
அதிகாலைப் பொழுதும் விடிய
உதயமா இதயமா
விடையின்றிக் கேள்வி தொடர
உதித்தது பரிதிதானா
கவிதையா மயங்குகின்றேன்
மேகங்கள் நடுவில் இருந்து
மெதுவாய்க்கண் மலருகின்றேன்

மழைமேகமா மலர்தூவுமா
திசையெங்கும் தென்றல் காற்று
அசைகின்ற அழகைப் பார்த்து
மழைமேகமா மலர்தூவுமா

*08.06.1994*

## 22. பாடணும் நான் பாடணும்

“பாடணும் நான் பாடணும்
அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்றுதாளம்
போடணும் நான் பாடணும்

பித்தெடுத்துக் காதலுடன் இத்தரையத் தொட்டுத்தொட்டு
அத்தன மரங்களுமே ஆடணும்
அத்தன மரங்களுமே ஆடணும்
சத்தங்கள வுட்டுப்புட்டு சந்தத்துலக் கட்டுப்பட்டுச்
சிட்டுக்குரு விக்கூட்டம் கூடணும் நான் பாடணும்

மேகத்துலத் தோகவிரிச் சாடுகிற வானமயில்
ராகத்துல சிக்கித்தடு மாறணும் - என்
ராகத்துல சிக்கித்தடு மாறணும்
மோகவலை போலவொரு தாளஅலை பின்னிப்பின்னிப்
மூச்சுத்தெண றும்படிப் பாடணும்
நான் பாடணும்

பாட்டுக்கொரு போதையுண்டு போதைக்கொரு பாதையுண்டு
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
பாத்துநடந் தால்பறந் தோடலாம்
கூட்டுக்குள்ள நீயிருந்து வாடுறது ந்யாயமில்ல
கூடவந்து களியாட்டம் போடலாம் - என்
கூடவந்து களியாட்டம் போடலாம்

பாடலாம் நாம் பாடலாம் - அதக்
கேட்டுப்புட்டுக் காத்துவந்து தந்தனத்தோம் என்றுதாளம்
போடலாம் நாம் பாடலாம்

*09.05.1990*

## 23. பூவுக்கொரு பாடல்

பூவுக்கொரு பாடல் எழுத
நீரோடை யிடம்சென்று
தாளம் கேட்டது தென்றல்
நிலவுக்கோர் ஓவியம் வரைய
வானவில் லிடம்சென்று
வண்ணம் கேட்டது மின்னல்
உனக்கு நல்ல உவமை சொல்ல
உலகத்தில் நானெதைத் தேடிச் செல்ல

எங்கிருந்தோ இங்கு வந்தவள் இல்லை நீ
என்மன வாசலில் மலர்ந்த முல்லைநீ
தங்கச் சிலை இல்லை தத்தும் கிளி இல்லை
தேயும் நிலா இல்லை நீ
என்னுள் சுடராகி எங்கும் படர்கின்ற
இன்னிசை ஆனவள் நீ
உனக்கு நல்ல உவமை சொல்ல
உலகத்தில் நானெதைத் தேடிச் செல்ல

கற்பனையில் உனைச் சிற்பம் செதுக்கக்
கவிதைகள் தேடி வந்தேன்
கண்ணெதிரே நீ காட்சி தந்தாய் நான்
கற்சிலை ஆகிவிட்டேன்
முற்பயனோ யார் மூதுரையோ உனை
முழுவதும் நானடைந்தேன்
சொர்க்கமென் றாலுன் பக்கத்தில் என்றும்
நிற்பதென் றேதெளிந்தேன்
உனக்கு நல்ல உவமை சொல்ல
உலகத்தில் நானெதைத் தேடிச் செல்ல

பூவுக்கொரு பாடல் எழுத... எழுத..!

*21.05.1995*

## 24. இசையிலே அசையலாம்

இமயமும் ஒருகணம் இசையிலே அசையலாம்
இளகிடாத இதயமுண்டோ
பேசு பைங்கிளி நீ பேசு பைங்கிளி

சமநிலை யென்றாலது சாந்தம் ஒன்றுதான்
அதைவழங்கும் அனுபவம்சங் கீதம் ஒன்றுதான்
சங்கீதம் என்றுதான்
பேசு பைங்கிளி நீ பேசு பைங்கிளி

இமயமும் ஒருகணம் இசையிலே அசையலாம்

சுமையில்லாத சுதந்திரத்தின் சுகம் அறியலாம்
சுவடில்லாமல் நதிநடக்கும் லயம் புரியலாம்
இமைவிளிம்பில் ஒருநிலாகண் மலர்ந்து சிரிக்கலாம் - அதில்
இருந்துகோடி ஸ்வரமெழுந்து விண்நிறைக்கலாம்

இமயமும் ஒருகணம் இசையிலே அசையலாம்

*1990*

## 25. உன் கண்ணுக்கு மையெழுத...

உன்
கண்ணுக்கு மையெழுதச் செவ்வானம்
கருத்திருக்குதடி - ஓங்
காலுக்குத் தண்டையிடக்
கடலே அலையடிக்குதடி
கடலே அலையடிக்குதடி

உன்
தோளுக்குச் சேலைதர மழைச்
சாரல் அடிக்குதடி - ஒன்னைத்
தொடத் தயங்கிக்கிட்டுக் காத்தும்
தூர நடக்குதடி - காத்தும்
தூர நடக்குதடி

நீ
போகுற பாதையெல்லாம் நட்சத்திரம்
தூவிக் கெடக்குதடி - சின்ன
பொட்டுன்னு நெத்தியிலே நெலவு
தகதகக்குதடி - நீ
போடுற வேஷமெல்லாம் ஒனக்குப்
பொருத்த மாச்சுதடி - நான்
பாடுற பாட்டுக்கெல்லாம் அர்த்தம்
புரியப் போகுதடி - பொழுது
விடியப் போகுதடி

*07.04.1990*

## 26. உனக்கும் எனக்கும்

உனக்கும் எனக்கும் இடையில் உள்ள
உறவை வெளியில் எடுத்துச் சொல்ல
வார்த்தை யில்லையே - ஒரு
வார்த்தை யில்லையே

உலகமே உன் வடிவம் - என்
உயிரில் மலர்ந்த கனவு
கனவும் கனவின் வடிவும் ஒன்றாய்க்
கலந்து நிற்கும் அழகு - ஒரு
கவிதை யாகும் பொழுது
(உனக்கும் எனக்கும்)

ஒளியும் நிழலும் போலவா உயிரும் உடலும் போலவா
உளியும் சிலையும் போலவா உவமை இன்னும் தேடவா
இறைவா
(உனக்கும் எனக்கும்)

உள்ளம் நடுங்கி அழைக்கும் போதென் உள்ளிருந்து சிரிப்பதும்
உள் நுழைந்து தேடத் தேட வெளியிலே மறைவதும்
பள்ளம் மேடு வாழ்க்கை என்று பாடம் சொல்ல வைப்பதும்
பாட லாக வந்து வண்டு போல நெஞ்சை மொய்ப்பதும்
காவ லாவதும் காவல் மீறிக் காத லாவதும் அழுவதும்
காற்றாகிக் காற்றில் அமுத ஊற்றாகி
எழுவதும் - இது - முழுவதும்
(உனக்கும் எனக்கும்)

*1990*

## 27. யார் செய்த ஓசைகள்....

யார் செய்த ஓசைகள் தேர் கொண்டு வந்தன
ஆகாச மேடையிலே
எண்ணங்களும் புதுச் சீர் கொண்டு வந்தன
ஏகாந்த வேளையிலே
(யார்செய்த)

காற்றசையும் வரைக் காத்திருக்கும் இசை
ஆற்றலைக் கரங்களில் அபிநயிக்கும் நுரை
பூவிதழ்களில் வண்ணம் குழைத்திடும் தூரிகை
புல்நுனிகளிலும் துளித்துளிப் புன்னகை
(யார்செய்த)

வார்குழலாய் விரிந்த மேகங்களை மெல்ல
வருடிய விரல்களிலே
வானம் வளைந்தது கானம் விளைந்தது
மத்தளம் ஒலிக்கிறதே
தேர்வடமாய்க் கொடி மின்னல் தெறித்திட
நர்த்தனம் நடக்கிறதே
தேன்மதுரம் தரும் வான்மதியைக் கடல்
திரையிட்டு மறைக்கிறதே
(யார்செய்த)

*26.05.1990*

## 28. புத்தம் புது மலர் போல்

புத்தம் புது மலர் போல் என் நினைவில்
நித்தம் நித்தம் வருவது யார்முகம்
தென்றல் என்னைத் தொட்டுச் செல்லும் போதெல்லாம்
என்னுயிரைத் தொடுவது யார்கரம்
தேவதை உன் பூமுகம் உயிர்த்
தேனில் எழுதிய ஓவியம்

(புத்தம் புது)

ஏரிக் கரையில் ஒரு பாதிக் கனவில் விழி
மூடிக் கிடக்கும் மலர்போல் - கன
வூறித் ததும்பி இசை மீறித் துவண்டு மொழி
யாகக் குவியும் கவிதை - உன்
பார்வை வண்டு வரப் பாடல் கொண்டு வரக்
கவிதை இதழ்விரிக்கும் - உன்
பாவை வடிவம் நெஞ்சில் பதிய வேண்டுமென
மெல்லக் கண் பனிக்கும்

(புத்தம் புது)

தேரில் அமர்ந்து வரும் தெய்வம் போல இங்கு
நேரில் வந்த ஒளியே - நில
வாக மலர்ந்து பல மேகம் கடந்தெனது
வாழ்வில் கலந்த சுடரே - உன்னைச்
சூடிக் கொள்ள ஒரு கோடிக் கண்கள் பெற
உள்ளம் தவிக்கின்றதே
பாடிப் பாடி இசை பருகப் பருக அமு
தாகப் பெருகும் களியே

(புத்தம் புது)

*20-07-1990*

## 29. பாடல் செய்த பாதை

என்
பாடல் செய்த பாதையில்
பால் நிலா உலா வரும் - அங்குக்
காதல் விழிகள் கண்மலர்ந்து
நட்சத்ர மலர்கள் தூவிடும்
ஆடல் மங்கையாக மின்னல்
அபிநயம் புரிந்திடும் - என்
கானமும் அந்த வானமும்
ஒன்றே என்றே விளங்கிடும்

நாத வெள்ளம் பாயும் போது
வான மேது பூமி யேது
போதையுள் புகுந்த பின் நிஜமெது நிழவெது
கீத மழையின் கிரண அலைகள்
மோதுகின்ற கடலிலே
கீற்றுப் பிறையில் சாய்ந்து கொண்(டு)
இணைந்து செல்வோம் படகிலே
(என் பாடல்)

கோடிக் கண்கள் பார்த்திருக்கப்
பூத்ததிந்தக் குளிர் நிலா
தேடி வந்து தேரமைத்துக் கொண்டதென் குரலிலா
சூடிக் கொடுத்த சுடர்க்கொடி
சொன்ன அடிசில் சுவையிது
கூடியிருந்து குளிர்ந்த பிறகும்
கூடச் சொல்லும் இசையிது

(என் பாடல்)
*10.01.1993*

## 30. ஜனனி, ஜனனி, ஜனனி!

ஜனனி ஜனனி ஜனனி
ஜனனி ஜனனி ஜனனி

சின்ன சின்ன துளிகள் மண்ணில் விழுந்து
சிதறும் போது ஜனனி
வண்ண வண்ணக் கனவுகள் நெஞ்சில் நுழைந்து - வடி
வெடுக்கும் போது ஜனனி
மின்னல் கொடி வீச்சில் வானமே - மெய்
சிலிர்க்கும் போது ஜனனி
எண்ணங்களும் கவிதை ஏக்கம் கொண்டு
பறக்கும் போது ஜனனி

ஜனனி ஜனனி ஜனனி - கவிதைச்
சிறகில் உனது பவனி

நதியில் முளைத்த மலரைப் போலொரு
நடுக்கம் எந்தன் நினைவில்
விதியில் விளைந்த உலகில் - சிறு
விளக்குப் போன்ற வடிவில் - நான்
துடிக்கும் போதும் துவளும் போதும்
துளிர்க்கும் சின்ன அரும்பு - அந்த
அரும்பிலே வந்(து) அமர்ந்து கொண்டு
அமுதக் குழம்பை அருந்து - நீ
அமுதக் குழம்பை அருந்து

ஜனனி ஜனனி ஜனனி - கவிதைச்
சிறகில் உனது பவனி

கனவும் நினைவும் கடந்து - ஏ
காந்த நிலையில் அமிழ்ந்து
கணம் எனும் முகையவிழ்ந்து
ககன மெங்கும் திரிந்து - பின்

அனுபவக்கடல் மிதந்து
அமைதியாக அமர்ந்து - நான்
எனதிலாமல் என்னுள் இருக்கும்
உனைமுகந் தருந்து

ஜனனி ஜனனி ஜனனி - கவிதைச்
சிறகில் உனது பவனி
ஜனனி ஜனனி ஜனனி
ஜனனி ஜனனி ஜனனி *7-10-1992*

## 31. ஒரே முத்தம்

முத்தம் முத்தம் ஒரு முத்தம்
ஒரே முத்தம்

இலைகளில் மலரிதழ்களில் பனித்
துளிகளில் ஒளிமுத்தம்
அலைகளும் வெண் நுரைகளும் கரை
வளைவிலே தரும் முத்தம்

முத்தம் முத்தம் ஒரு முத்தம்
ஒரே முத்தம்

வானம் கடலை வாரியணைத்து
வழங்க நினைத்தது ஒரே முத்தம் - அந்த
முத்துச் சிதறி முளைத்த நிலவை
முகில் மறைத்துத் தரும் முத்தம்

முத்தம் முத்தம் ஒரு முத்தம்
ஒரே முத்தம்

காற்றும் வெளியும் காதலாகித்
தழுவிக் கொண்டு தரும் முத்தம் - ஒரு
கவிதையாகி இதழிலிருந்தென்
உயிர் வரைக்கும் இசை முத்தம்

முத்தம் முத்தம் ஒரு முத்தம்
ஒரே முத்தம்

*06-12-1992*

## 32. காதல், காதல், காதல்

காதல்....காதல்.... காதல்

வான் சிரித்தாலும் வண்ண
மலர்கள் சிரித்தாலும் - மலர்த்
தேன் தெறித்தாலும் இளம்
தென்றல் சிலிர்த்தாலும் - விண்
மீன் சிரித்தாலும் கொடி
மின்னல் துடித்தாலும் - என்
கானமெல் லாமந்தக் காதலுக்கே - என்
கானமெல் லாமந்தக் காதலுக்கே

காதல் ....காதல்.... காதல்

தேகத்தைத் தாண்டி ஜீவனைத் தீண்டும்
யோகத்தைச் சொல்வது காதல்
மோகத்திலும் அன்பு முளைக்க வைத்து - அஹங்
காரத்தைக் கொல்வது காதல்
யோகத்தைச் சொல்வது காதல் - அஹங்
காரத்தைக் கொல்வது காதல்
காதல் ....காதல்.... காதல்

பாலை வனத்தொரு சோலையைப் போலிந்த
வாழ்க்கையிலும் வரும் காதல் - வெறும்
பாவனையாய் ஒரு பாதை செய்து - அதில்
காவலுக்கும் வரும் காதல்
கானல் நீரோ கற்பனையோ எந்தக்
கவலைக்கும் அதுவே மருந்து
கவிதைகள் எல்லாம் ஊற்றெடுக்கும் - இசைக்
களஞ்சியம் ஆகும் விருந்து -
எந்தக்
கவலைக்கும் அதுவே மருந்து - இசைக்
களஞ்சியம் காதல் விருந்து

காதல் ....காதல்.... காதல்

*10-01-1993*

## 33. காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம்

(கவிமாமணி அமரர் தேவநாராயணன் வீட்டுத் திருமண வரவேற்பில் பாடிய பாடல்)

காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம் - இது
காணக் கிடைக்காத வைபோகமாம்
பூத்துக் குலுங்கும்பல தோட்டங்களாம் - அங்குப்
பூவெல்லாம் பொறிவண்டுக் கூட்டங்களாம்

(காத்துக்கும்)

தோளுக்குப் பட்டாடை அருவிகளாம்
தொங்கட்டான் போலச்சிறு குருவிகளாம்
காலுக்கு நீரோடை கொலுசுகளாம் -அலங்
காரத்தில் பலநூறு தினுசுகளாம்

(காத்துக்கும்)

மேகங்களே நல்ல மேளங்களாம்
மின்னல்கள் கூத்தாடத் தாளங்களாம்
வானத்துத் தேவர்கள் ஆனந்தத் தோடெழுந்து
பூமாரி பொழிகின்ற சாரல்களாம்

(காத்துக்கும்)

சிற்றெறும்புக் கூட்டங்கள் ஊர்வலமாம் - புதுச்
சீர்கொண்டு போகின்ற சிங்காரமாம் - குளம்
குட்டையெல்லாம் தவளைகள் கச்சேரியாம்
குண்டுமல்லிக் கூட்டங்கள் ரசிகர்களாம்
நாட்டுக்கு நாடிது நடப்பதுண்டாம் - எழில்
நாடகமாய் நெஞ்சை இழுப்பதுண்டாம்
பாட்டுக்குள் மட்டுமொரு பார்வை யுண்டாம் - அந்தப்
பார்வைக்குத் தானது புலப்படுமாம்

(காத்துக்கும்)

*30-05-1993*

## 34. கவிதை எழுத வா - காற்றே!

கவிதை எழுத வா - காற்றே
கவிதை எழுத வா
நினைவலைகள் ஓய்ந்துவிட்ட
நிம்மதியில் என்மனமும்
உனையழைக்க என்குரலுன்
சிறகசைக்க எழுந்துவிடு (கவிதை எழுத வா)

ஆற்றங்கரை மேடுகளில்
அர்த்தமற்ற கோடுகளில்
நேற்றிரவு நீயலைந்த
தடங்களெல்லாம் அழிந்திருக்கும்
என்னுயிரில் நீநுழைந்து
எழுதிவைக்கும் சித்திரங்கள்
இன்னிசை யுடன்கலந்து
என்றென்றும் வாழ்ந்திருக்கும்
(கவிதை எழுத வா)

நூறுவகைப் பூவிதழ்கள்
நீவருடிக் கொண்டுவர
நீர்நிலைகளில் அமுதம்
உன்னிதழ்கள் மொண்டுவர
வேறுசுகம் ஏனெனக்கு
வேய்ங்குழலாம் நானுனக்கு
மேகங்களை மோதவிடு
மின்னல்களை ஆடவிடு
(கவிதை எழுத வா)

வான்முகட்டி லுன்வருகை
மண்ணுலகெல் லாமுவகை
காண்பவையெல் லாம்புதிது
கேட்பவையெல் லாமினிது
தேன்முகந்து வரும்வண்டு
தேன்குடத்தி லேவிழுந்து
மீன்வடிவம் கொண்டதென
நீயெனக்குள் ளேபுகுந்து
(கவிதை எழுத வா)

*28.03.1993*

## 35. கடற்கரை மணலுல...

கடற்கரை மணலுல கட்டி வச்ச கோட்டை
கனவுல நூலெடுத்துப் பின்னி வச்ச வாழ்க்கை
இடிக்குது மழை வரக் கூவுது காத்து
இதுக்குள்ள மனசுல ஆயிரங் கூத்து
தெரை விழுந்தாத்தான் தெரிசனமா
அதுவரைக்கும் இந்தப் பொய்யே நெசமா
(கடற்கரை மணலுல)

படகுக்குத் துடுப்பில்லே பாய்மரம் இல்லே
பகுத்தறிவால ஒரு லாபமும் இல்லே
எடத்துக்கு எடம் எந்த பேதமும் இல்லே
என்னைக் கரைசேக்க ஒரு
வேதமும் இல்லே
கடல் வழிப் பயணம் கவலைகள் அதிகம்
கலங்கரை வெளக்கா நீ காட்சி தரணும்
(கடற்கரை மணலுல)

வார்த்தைக்கு வார்த்தை ஒன்னை அழைச்சேன்
வாலிபத் தோப்ப விட்டுத் தப்பிப் பொழச்சேன்
மாயையை மாயையினு தெரிஞ்சுக்கிட்டேன்
மாயையைத் தாண்டி வரத் துணிஞ்சுப்புட்டேன்
தாண்டி வரும் பாதை என்ன நீண்ட தொலவா
தாண்டறத்துக் குள்ள மீண்டும் மீண்டும் விழவா
(கடற்கரை மணலுல)

*18-04-1993*

## 36. சித்திரத்துத் தாமரை

அன்றலர்ந்த தாமரை வாடாமல் இல்லையே - வெறும்
சித்திரத்துத் தாமரைக்கோ வாசமில்லையே - கம்பன்
சித்திரத்துத் தாமரைக்கு வாசமுண்டு வாடாது - என்
சிந்தையிந்தப் பூவையன்றி வேறெதுவும் சூடாது

(அன்றலர்ந்த)

கன்றுக்கெனப் பால்சுரக்கும் ஆவினம் போலே - நம்
கர்மங்களைத் தீர்த்திடுவான் கருணையினாலே
மன்றிலவன் தொட்டதும் வில் இற்று விட்டது - அவன்
மந்திரத்தைச் சொன்னதுமே பற்றுவிட்டது

(அன்றலர்ந்த)

செந்தமிழை வார்த்தையின்றித் திணற வைத்தவன்
செங்கமலத் தாள்வளைகள் நழுவச் செய்தவன்
செந்தழல் வளர்த்தவரின் சிந்தை குளிரவே
தீயவரை மாய்த்தவன் கோதண்டபாணியே

(அன்றலர்ந்த)

கொள்ளை எழில் கொள்ளை எழில் குலவுகின்றதே - அதை
அள்ளிக் கொள்ள நெஞ்சிலிடம் போதவில்லையே
உள்ளுருகி நான்விரிந்தேன் சாகரமாக - வான
வில்லெடுத் தெழுந்தனன் திவாகரனாக
(அன்றலர்ந்த)

*23.05.1993*

## 37. நெஞ்சுக்குள்ள பாடலுண்டு

நெஞ்சுக்குள்ள பாடலுண்டு கண்ணுக்குள்ள காதலுண்டு
கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்மொழி என்னம்மா _ம்..ம்..
என்னம்மா
நேத்து வந்த சந்திரனப் பாத்து வந்த பின்னும் இன்னும்
காத்திருந்து கண்சிவக்கும் கண்ணம்மா - ஓ ஓ
கண்ணம்மா

(நெஞ்சுக்குள்ள)

ஆத்தங்கரை ஓரத்துல கோலமிடுவாயா
ஆதங்கத்தைத் தீத்துக்கொள்ள ஓலமிடுவாயா
அங்குமிங்கும் துள்ளித் துள்ளி
பூவுக்குள்ள வாசமள்ளி
வாசலுல வந்து நின்னு கோலமிடுவாயா
மனசுக்கும் உடலுக்கும் பாலமிடுவாயா

(நெஞ்சுக்குள்ள)

வானக் கடல் மீது வலை வீசிவிடுவாயா
வார்த்தைகளே இல்லாம பேசிவிடுவாயா
நானுமுன்னைத் தோழி யென்று
நம்பிக்கிட்டு வந்தேன் -கை
கோத்தபடி என்னுடனே கூட வருவாயா
காத்தாயி காதலுடன் பாட வருவாயா
காத்தாயி காத்தாயி பாட்டுப் படிப்போம்
கம்மாங் கரையோரம் கூத்து நடிப்போம்

(நெஞ்சுக்குள்ள)

*20-06-1993*

## 38. காத்தாயீ ஓ காத்தாயீ

சந்தையிலே வாங்கி வந்த கம்மலடி - வானச்
சந்தையிலே வாங்கி வந்த கம்மலடி - மின்னல்
தட்டித் தட்டிச் செஞ்சு தந்த வளையலடி
அஞ்சருவி நீரெடுத்துப் பஞ்சுப்பொதி யாவெளுத்து
மஞ்சவெயில் நெஞ்சுதந்த சேலையடி

காத்தாயீ ஓ காத்தாயீ

முத்துக்கள் சேத்துவச்ச புல்லாக்கு - பனி
முத்துக்கள் சேத்துவச்ச புல்லாக்கு - அதைப்
போட்டுக்கிட்டு வானத்தையே வில்லாக்கு - நீ
காடுமலை மேடுபள்ளம் கண்டுவர வேணுமினு
காத்திருக்கு நீரோடைப் பல்லாக்கு - உன்
கண்ணசைவை யெல்லாம்என் சொல்லாக்கு

காத்தாயீ ஓ காத்தாயீ

நீ
சிரிச்சாத்தான் எங்கவயல் செழிச்சிருக்கும்
சீறிப்புட்டாக் கடல் கூடக்
கொந்தளிக்கும்
பயிரெல்லாம் காப்பாத்து காவல் நின்னு - எங்க
உயிருக்கும் நீதானே ஊத்துக் கண்ணு

காத்தாயீ ஓ காத்தாயீ

*15 .11 .1993*

## 39. பூ மலர்வது போல்

(தேன்குரலால் என் இசையமைப்பில், என் கவிதைகளுக்கு மெருகூட்டிய நண்பர் எஸ்.பி.பி. அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! 1994-ல் வெளியிடப்பட்ட "தெய்வகானாம்ருதம்" என்ற என் இசைப்பேழையிலிருந்து....)

பூமலர்வது போலுயிரிடை நீமலர்வதனால்
நீமலர்ந்ததும் மனமுழுவதும் தீவளர்வதனால்
தீமலரென நானழைத்ததும் வாகலைமகளே
தீச்சுடரிடை தேன்மழையெனத் தா கவிதைகளே
தீச்சுடரிடை தேன்மழையெனத் தா கவிதைகளே

நீர்நிலைகளில் மீன்புரள்வது போல்நினைவிடையே
கார்முகில்களும் தாரகைகளும் தாமுலவிடவே
வெண்ணிலவென வேயெழுந்திடும் புன்னகையொளியே
புன்னகையிடை பொன்மழையெனத் தா கவிதைகளே
புன்னகையிடை பொன்மழையெனத் தா கவிதைகளே

புல்நுனிகளில் வெண்பனித்துளி வந்தமர்வதுபோல்
என்னுணர்விலும் உன்சதங்கைகள் நின்றசைந்திடுமே
கண்மணிகளில் விண்மணிகளின் நிழல்விரிவதுபோல்
உன்சதங்கைக ளில்கவிதைகள் வந்துயிர்த்திடுமே
உன்சதங்கைக ளில்கவிதைகள் வந்துயிர்த்திடுமே

*1994*

## 40. நெய்யபிஷேகம் ஜமாய்கிறே!

நெய்யபிஷேகம் ஜமாய்க்கிறே - என்னை
எத்தனை நாளா டபாய்க்கிறே
பொய்யிலமுக்கிப் புழுதியிலே என்னைப்
புரள விட்டுநீ ஏய்க்கிறே - விட்டுப்
போவானான்னு பாக்குறே (நெய்யபிஷேகம்)

சங்கீதம் தெரிஞ்ச சாஸ்திரக்காரங்க
சந்தோஷமா உன்னைப் பாடுறாங்க
சங்கோஜம் கொண்ட பேர்வழிங்க - சத்தம்
போடாம ஒன்னைத் தேடுறாங்க
எல்லாரும் ஒண்ணாக் கூடுறாங்க
வில்லாளி வீரன்னு கூவுறாங்க
வாச்சாலம் நானும் பழகலே - உன்
வீராப்பும் எனக்கு வெளங்கலே (நெய்யபிஷேகம்)

வெளிச்சமில் லாத சாலையிலே - ஆள்
அரவமில் லாத மூலையிலே - வெத்துக்
காயிதமா நான் கெடக்குறேன் - ஒங்
கைபடத் தான்பட படக்குறேன்
பளிச்சுனு என்னை நீவிப்புட்டு - ஒரு
பாட்டெழுதிக் கைநாட்டு வை
பத்துத் தலைமுறைக் கதுபோதும் - மக்கள்
பாடுவாங்க நீ கேட்டுவை (நெய்யபிஷேகம்)

காட்டுல போயி குந்திக்கிறே - கண்ணை
மூடிக்கிட் டேதோ சிந்திக்கிறே - நான்
பாட்டுக்கு படுத்துத் தூங்கையிலே - ஒரு
பாட்டாக வந்து சந்திக்கிறே

நெய்யபிஷேகம் ஜமாய்க்கிறே - என்னை
எத்தனை நாளா டபாய்க்கிறே
மெய்யும் பொய்யும் கலந்து வச்சு - நான்
மெரளமெரள நீ சதாய்கிறே (நெய்யபிஷேகம்)

*15.03.1994*

## 41. சங்கீதம் பாடுகின்றேன்

பூமேலே கிளைகள் மேலே
நீரோடை அலைகள் மேலே
சாய்ந்தாடும் நிலா ஒளிக்கு
சங்கீதம் பாடுகின்றேன்

தாயோட தோளில் முல்லைச்
சரமாகத் தூங்கும் பிள்ளை
வாயோரம் சிரிக்கக் கண்டு
வண்டாகப் பாடுகின்றேன்

பாய்போடும் மணல் விரிப்பில்
படுக்காமல் கடல் நடத்தும்
மாய்மாலம் கண்டு கண்டு
மாளாமல் பாடுகின்றேன்

சாய்ங்கால நேரக் காத்துச்
சதிராடும் போது நெஞ்சில்
ஓயாமல் அலையெழுப்பும்
ஒரு பாடல் பாடுகின்றேன்

நான்பாடும் பாட்டுக் கெல்லாம்
நாட்டியம் செய்து கொண்டு
வான்போடும் வேஷம் கண்டு
வாயாரப் பாடுகின்றேன்

மானோடும் காட்டுக்குள்ளே
வழிப்போக்கனாய் நுழைந்து
காணாத காட்சியெல்லாம்
கண்டுநான் பாடுகின்றேன்

கூந்தலில் பின்னலின்றிக்
கூப்பிடப் பெயரும் இன்றித்
தான்தோன்றியாய்ச் சிரிக்கும்
தையலைப் பாடுகின்றேன்

காரிருள் மேனியாளைக்
கவிதையில் வந்து வந்து
பேரிகை முழக்குகின்ற
பிச்சியைப் பாடுகின்றேன்

தூரிகை இன்றி வந்த
சித்திரத் தொடுவானத்தில்
காரிகை போல நிற்கும்
காளியைப் பாடுகின்றேன்

யாரிவள் பெண்மை தானா
ஆண்மையா அந்தி வானா
பாட்டெலாம் அபகரிக்கும்
பைரவி இவளென்பேனா (பூமேலே)

*13.06.1994*

## 42. சின்ன சின்ன பாதம் வைத்து...

சின்ன சின்ன பாதம் வைத்து
வந்த தெய்வமே
கிண்கிணிச் சலங்கை குலுங்க
நடந்த தென்றலே
முன்னை உலகு மூன்றளந்த (து) இந்தப் பாதமா
என்னை வந்து சேர மட்டும் நேரமாகுமா
(சின்ன சின்ன)

தூண் பிளந்த சிங்கம் இந்தக்
குழந்தை வடிவமா
சிவ தனுசை முறித்ததிந்தப்
பிஞ்சுக் கைகளா
வியந்து வியந்து முடியவில்லை
விளங்க வைத்திடு
-உன் -
மலர்ப் பதங்களை என் நெஞ்சில்
மலர வைத்திடு
(சின்ன சின்ன)

திருமகள் கை வருடி வருடிச்
சிவந்த பதங்களும்
உறியில் வெண்ணை திருடித் திருடிச்
சிவந்த கைகளும்
அரிதுயில் கலைந்த தாலே
சிவந்த கண்களும்
கரிய மேனி நடுவிலும் பேர்
ஒளி கொடுக்குமே - அந்த
ஒளியில் மாய இருளகன்று
வழி திறக்குமே (சின்ன சின்ன)

*15.08.1994*

## 43. பாடிப் பாடித் தொழுதும்

பாடிப் பாடித் தொழுதும் ஏன் பாராமுகம் - இந்தப்
பாடல் முடிவில் தோன்ற வேண்டும்
நிலா முகம் - உன்னைப் (பாடிப் பாடி)

கோடிக்கோடி தீப மாலை
சூடு கின்ற நாயகா - என்
குரலிலும் ஒரு தீபமேற்ற
வரமருள் சர்வேஸ்வரா (பாடிப் பாடி)

காடு மேடு கடந்து வருவ
துன்னைக் காணவா - எங்கள்
கர்மமும் அஹங்காரமும் மெல்லக்
கரைந்து போகவா
காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் போதிலே
பூதநாதனாக வந்து மலரும் ஜோதியே (பாடிப் பாடி)

*24.10.1995*

## 44. எப்படி எப்படித் தீண்டுவதோ!

உன்னை
எப்படி எப்படித் தீண்டுவதோ - இன்னும்
என்னென்ன சுகங்கள் வேண்டுவதோ
கைகளினால் இதழ்களினால் கண்
இமைகளினால் கற்பனையால்
(உன்னை எப்படி)

தென்றலிடம் போய்க் கேட்டு வந்தேன் - சில
தந்திரம் சொல்லித் தந்தாள்
வெண்ணிலவும் நீ கண்மயங்க - ஒரு மந்திரம் சொல்லித் தந்தாள்
உன்வரவை எதிர் பார்த்தபடி
ஒத்திகை செய்திருந்தேன்
என்னெதிரே நீ வந்தவுடன் நான் அத்தனையும் மறந்தேன்
(உன்னை எப்படி)

கைகளிலே யாழிசையாவாய் - இதழ்
குவித்ததுமே வேய்ங்குழலாவாய்
இமைகளிலே நீர்த்துளியாவாய் - என்
கற்பனையில் பேரொளியாவாய்
ஆசையிலே எழும் ஓசையிலே நீ
ஆயிரம் நாடகம் நடத்துகிறாய்

உன்னை
எப்படி எப்படித் தீண்டுவதோ - இன்னும்
என்னென்ன சுகங்கள் வேண்டுவதோ
காற்றாக இசைப் பாட்டாக ஒளிக்
கீற்றாக உயிர் ஊற்றாக - உன்னை
எப்படி எப்படித் தீண்டுவதோ

*22.05.1997*

## 45. புன்னகைத்தாலே புவியதிரும்

**(கல்கத்தா காளி கோயிலில் பாடியது)**

புன்னகைத்தாலே புவியதிரும் - நீ
கண்ணசைத்தால் விண்மீன்கள் உதிரும்
உன்னெதிரே நான் சிறுதுகள் அம்மா
கடைவிழி போதும் அடைக்கலம் அம்மா

காளியென்பார் கரு நீலியென்பார் - திரி
சூலியென்பார் ஸ்ரீ துர்க்கையென்பார்
கவிதையிலே கன்யா குமரியன்றோ
கருணையிலே அன்னபூரணியன்றோ

நதிகளிலே உன் சலங்கையொலி காற்றின்
நளினமெல்லாம் உன் அபிநயங்கள்
மழைபொழிந்தால் உன் அருள்வெள்ளம் - பச்சை
வயல்கள் எல்லாம் உன் தாயுள்ளம்

புன்னகைத்தாலே புவியதிரும் - நீ
கண்ணசைத்தால் விண்மீன்கள் உதிரும்
உன்னெதிரே நான் சிறுதுகள் அம்மா
கடைவிழி போதும் அடைக்கலம் அம்மா
கைகளில் எத்தனைப் படைக்கலம் அம்மா
கடைவிழி போதும் அடைக்கலம் அம்மா

*(29-08-1998)*

## 46. மழைக்கூத்தாடு மகமாயி

வயத்துப் பொழப்புக் காகக்
கயத்து மேல நடக்கும்
கழக்கூத் தாடி கஞ்சி கேக்குறான்
மழைக்கூத் தாடு மகமாயி

வறண்டு கிடக்கும் வயலுக் கெல்லாம் வெறும்
கண்ணீராலே பாசனமா
வாழ முடியாம சனங்களெல்லாம்
சாவது தான் உன் சாசனமா
இதப்பத்தி யோசிக்க முடியாதவங்க
ஒக்காரத் தான்சிம் மாசனமா
இரக்கம் வேணும் கண் திறக்க வேணும் நான்
எடுத்துச் சொன்னேன் கொஞ்சம் சூசகமா
(வயத்துப்)

திங்கச் சோறு பொங்கினாத்தான்
பொங்கல் பூசை நடக்கும்
வானம் பொய்த்துப் போனா வீட்டுல
ஏனம் கவுந்து கெடக்கும்
(வயத்துப்)

ஏழை சனங்க பஞ்சம் வந்தா
ஏசு வாங்க ஒன்னை
ஏறெடுத்து நீ பாக்கலேன்னு
பேசுவாங்க பின்னே
வாழ வைக்கத்தான் வணங்குறோம் நீ
வம்பு செஞ்சது போதும்
மழை பொழிஞ்சுடு படியளந்திடு
பாடி வைக்கிறேன் நானும் - உன்னைப்
பாடி வைக்கிறேன் நானும்
(வயத்துப்)

*1998 - 99*

## 47. காற்றும் - தென்னையிளங் கீற்றும்

காற்றும் தென்னையிளங் கீற்றும்
கூடிக் குலவும் போது - ஒளி
கூடக் கடந்து செல்லாது

வான மழைத்துளி பூமி தொடும்கணம்
வார்த்தை வார்த்தையாய்ப் பேசும்
பாட்டுப் பயிலும்மனம் அந்தக் கதைகளைக்
கேட்டுக் கேட்டு வரவேற்கும்
(காற்றும்)

சின்ன விழிகளில் சித்திரச் சுடர்
மின்னி மின்னியிசை மீட்டும்
அந்த இசையிலே அள்ளி வந்தகனல்
சிந்தையுள்ளும் தழல் மூட்டும்
(காற்றும்)

பாடல் மலர்வதைப் பார்த்த விழியொரு
பாதி வெண்ணிலாப் போலே
பாடலோடு நடை பழகும் நெஞ்சமே
வானம் ஆகி விட்டதாலே (காற்றும்)

*08-01-2000*

## 48. வெண்ணிலா மிதக்கும் வழி

வாசமுள்ள பூவுக்குள்ளும் நுழைந்து செல்ல
வாசலுண்டு என்று வண்டு தெரிந்து கொள்ள
வீசும் தென்றல் காற்று நின்று பேசும் மொழி எது
மேகத்துக்குள் வெண்ணிலா மிதக்கும் வழி அது! அது! அது!
(வாசமுள்ள பூவுக்குள்ளும்)

தேகசுகம் தேடுவதே காதலென்பதா - வெறும்
சிந்தனையைத் தூண்டுவதே பாடல் என்பதா
மோகத்துக்கும் காதலுக்கும் பேதமில்லயா
ராகத்துடன் பாடுவதே யோகமில்லையா
(வாசமுள்ள பூவுக்குள்ளும்)

பாவை உந்தன் உள்ளம் சின்ன பூவைப் போன்றது - என்
பாடல் ஒன்று வாசல் வரைக்கும் சென்று மீண்டது - தன்
பாதம் படும் ஓசையில் உன் மனம் அதிருமே - என
ஓசையென்ற வடிவமின்றித் தவம் புரியுமே
(வாசமுள்ள பூவுக்குள்ளும்)

*2005*

## 49. வாழ்த்தப் பிறந்தவன்

[என் மகள் ஐஸ்வர்யாவுக்குத் திருமணம் ஆனதும், பாரதி கலைக் கழகக் கவிஞர் பெருமக்களை அழைத்துப் புலவர் இரா.இராமமூர்த்தி தலைமையில் வாழ்த்துக் கவியரங்கம் நடத்திய போது, நான் பாடிய பாடலிது.]

வாழ்த்தப் பிறந்தவன் கவிஞன் - நன்கு
வாழத் தெரியாத போதுமிவ் வையத்தை
வாழ்த்தப் பிறந்தவன் கவிஞன்

ஏழ்மை இருட்டவன் வீட்டிலே - ஒளி
ஏற்றி வைப்பானவன் நாட்டிலே
எட்டுத் திசைகளும் கட்டுப் பட்டு நின்(று)
ஏவல் செய்யுமவன் பாட்டிலே

(வாழ்த்த)

ஆற்று நீரோடை அருவியிலும் - கடல்
அலைகளிலும் பச்சை இலைகளிலும்
காற்றிலும் வெட்ட வெளியினிலும் - அன்புக்
காதல் மலர்ந்த நெஞ்சங்களிலும்
பாட்டு முழக்கங்கள் சூழட்டுமே - அந்தப்
பண்ணிசையில் நலம் சேரட்டுமே - கருங்
கோட்டு தலைப்பாகை கொண்ட தலைவனைக்
கும்பிட்டு நம் குலம் வாழட்டுமே

(வாழ்த்த)

*02.02.2005*

## 50. மரப்பாச்சி பொம்மைகள்

தேவாதி தேவர்களின் நடுவிலே -ரெண்டு
மரப்பாச்சி பொம்மைகளாம் கொலுவிலே
தலப்பா சரிக வேட்டி தார்ப்பாச்சி கட்டிக்கிட்டுக்
கருப்பண்ணன் கம்பீரமா நிக்குறான் - அதக்
கண்டுகண்டு கருப்பாயி சொக்குறா

செட்டியாரு கடைக்குப் போயி அரிசி பருப்பு வாங்கிவரச்
சேந்தாப்பல கௌம்பிட்டாங்க இருவரும் - இந்தச்
சமத்துவம்தான் வாழ்க்கையிலே பலன் தரும்
வட்டிவாங்க மனமில்லாத நேர்மையான செட்டியாரு
மளிகைக்கடை வியாபாரம் நடத்துறார் - ஆனா
காசுபணம் விஷயத்துல மிகக்கறார்

கருப்பாயி கேட்டதெல்லாம் படியளந்து கொடுத்துப்புட்டுக்
காசுவாங்கச் செட்டியாரு மறுக்குறார் - ஆச்சி
காரணமே புரியாம நிக்குறா
கருப்பண்ணன் கருப்பாயி காவல்காக்கும் தெய்வங்களாம்
கண்கலங்கச் செட்டியாரு சொல்லுறார் - ஆச்சி
கன்னத்துல போட்டுக்கிட்டு வணங்குறா

ஊரெல்லாம் ஒறங்கணுன்னு ராவெல்லாம் கண்விழிச்சி
வீதிவீதியா காவல் காக்குறான் - அண்ணன்
வீடுவரைக் கொண்டுவந்து சேக்குறான்
காத்துக்கருப்பு அண்டாமப் பாத்துகுவா கருப்பாயி
காளிமக மாயிகரு நீலிதான் - இந்த
ரெண்டுபேரும் நம்மவூரு சாமிதான்

*2003*

## 51. ஏனிந்த மௌனம்

**(கவிதா தேவி, அல்லது கவிதையாம் மணிப்பெயர்க் காதலி எப்பொழுதும் கலகலவென்று பேசிவிட மாட்டாள். சில நேரம் 'உம்' என்று இருப்பாள். அப்படியொரு தருணத்தில் அவளை நான் சீண்டினேன். ஏதாவது சொல்லென்று வேண்டினேன். அந்தச் சீண்டலையும் வேண்டலையுமே பாட்டாகச் செய்து தந்தாளே அந்தப் பாசாங்குக்காரி!. இல்லை பாசாங்குசக்காரி.)**

ஏதாயினும் சொல் ஏனிந்த மௌனம்
எங்கெங்கும் பொழியட்டும் பூமழையே
காதோரம் வந்து சிறகடிக்கும் காற்றில்
ஒலிக்கட்டும் ஒருமுறை உன்குரலே
(ஏதாயினும்)

நீதானே எந்தன் கவிதையின் ஊற்று
தினமொரு தீபமென் சிந்தையில் ஏற்று
(ஏதாயினும்)

ஆதாரம் நீயே அனுபவச் சுவையே
ஆவியில் அமுதம் நிறைப்பவளே
ஆகாயமெல்லாம் எதிரொலிக்கும் - நீ
ஆணையிட்டால் உடன் அதுபலிக்கும்
(ஏதாயினும்)

பாதாதி கேசம் பாட வல்லேன் அல்லேன்
பாவனை சுகத்தில் மூழ்குகிறேன்
பாராமுகம் எதற்குத் திரைவிலக்கு - இன்னும்
பாராமுகம் எதற்குத் திரைவிலக்கு - இசைப்
பாடலொன்றே நம் சுடர்விளக்கு

(ஏதாயினும்)

*29-05-2003*

## 52. உன்னையொரு மலராய் மாற்றுகிறேன்

உன்னையொரு மலராய் மாற்றுகிறேன் - இதழ்
ஒவ்வொன்றிலும் சுடர் ஏற்றுகிறேன்
என்னென்ன வண்ணங்கள் காட்டுகிறாய் என்
எண்ணமெல்லாம் இசை மீட்டுகிறாய்
(உன்னையொரு)

பொன்னிறமும் செந்நிறமும் கூடியதாய்த் - துளிப்
புன்னகையிலே இழை யோடியதாய்
மின்னல் நடனம் களியேறியதாய் - மழை
மேகமெல்லாம் அணை மீறியதாய்
(என்னென்ன வண்ணங்கள்)

சின்ன சின்ன முத்துக்களும் தூவுகிறாய் - புயல்
சீறி வரும் போது நடை மாறுகிறாய்
அந்திப் பகல் நாடகம் ஆடுகிறாய் - உயிர்
அத்தனையிலும் கலந் தோடுகிறாய்
(என்னென்ன வண்ணங்கள்)

வெட்ட வெளியோ அதில் நட்ட விதையோ
விண்ணும் மண்ணுமாய்ப் பிளந்து நிற்கும் வடிவோ
பட்டப்பகலில் கரம் ஆயிரமோ - இருள்
படர்ந்ததும் கோடிப் பூச்சரமோ
(உன்னையொரு)

*2004*

## 53. சேவிப்போர்க்கு ஆனந்த மூர்த்தி

சேவிப்போர்க் கானந்த மூர்த்தி நீ - என்
ஆவிக்குள்ளும் அமுத ஊற்று நீ
(சேவிப்போர்க் கானந்த மூர்த்தி)

தேவி பராசக்தி மைந்தனே - உன்னைத்
தேடி வரும் பக்த கோடிகளுக்
குற்ற தோழனே
தேவ தேவனே
(சேவிப்போர்க் கானந்த மூர்த்தி)

கல்லும் முள்ளும் தங்கள் கால்களை வருத்தக்
காண வருவோரை வழிநடத்த
வில்லும் அம்பும் ஏந்தி உடல் கருத்த
வேடன் போல வெளி வேடமிட்டு வரும் தோழனே
தேவதேவனே
(சேவிப்போர்க் கானந்த மூர்த்தி)

ஒவ்வொரு முனையிலும்
ஒளிதருவாய் - எங்கள்
ஒவ்வோர் அடியிலும்
உடன் வருவாய்
வெவ்வேறான வடிவங்கள் காட்டி
வியக்க வைப்பாய் பின்
திகைக்க வைப்பாய்
நிதமும் உனதுபத மலர்கள் எமதுநினை வகலாத
நிலைமை தருகமன நிறைவுதருக அருள் சபரீசா
(சேவிப்போர்க் கானந்த மூர்த்தி)

*16-10-2005*

## 54. கண்ணோடு கண் என்றாலும்

கண்ணோடு கண்ணென்றாலும்
சொல்லாத கதைகள் நூறு
நெஞ்சோடு நெஞ்சென்றாலும்
நீயும் நானும் வேறு
(கண்ணோடு)

பண்ணோடு கவிதை சேரப்
பாடலாம் பாடல் நூறு
பாட்டிலே கரைந்த போதும்
பாடலும் குரலும் வேறு
(கண்ணோடு )

நிழலுக்குள்ளே நுழைந்து
செல்ல நான் ஆசை கொண்டேன்
நீயென் றுனையழைத்துச்
சொல்லவும் அஞ்சி நின்றேன்
சுழல்வதே வாழ்க்கை என்று
சுழல்கிறேன் ஒரு முனை நான்
மறு முனை வரும் வரைக்கும்
சுழலுவேன் சுழலுவேன் நான் (கண்ணோடு)

*30.07.2012*

## 55. மழைத்தாளம் கேட்டு...

மழைத்தாளம் கேட்டு உருவாகும் பாட்டு
மலரோடும் நதியோடும் விளையாடும் காற்று
(மழைத் தாளம்)

புவிக்கோளம் சுழல்கின்ற பூந்தோட்டமாகக்
கவிக்கோலம் வரையும்தூ ரிகையாக ஆட
(மழைத் தாளம்)

மெய்க்காவ லாயென் உடலெங்கும் நடமாடி
உயிர்வீணை மீட்டும் ஒய்யாரமே
பொய்யான வாழ்வை நிஜமாகவே நடத்தும்
புவனேஸ்வரித் தாயின் மேலாடையே
புயலாக வந்தாலும் கைகூப்புவேன் - தென்றல்
போல்வந்து தொட்டாலும் உனைப்போற்றுவேன்
எதுவான போதும் நான் எதிர்கொள்ளுவேன் - நெஞ்சில்
தினம்தோறும் ஒரு தீபச் சுடரேற்றுவேன்

(மழைத் தாளம்)

*28.07.2013*

## 56. குரு வணக்கம்

ஓரடி வைத்தேன் போதாதா
ஷீரடி வாழும் குருநாதா
நூறடி வைத்து நீவந்தால்
நொடியிலென் கலியும் தீராதா (ஓரடி வைத்தேன்)

எத்தனைப் பிறவி எடுத்துவந்தேன்
எத்தனை யுகங்கள் கடந்துவந்தேன்
இத்தருணம் நீ அருள்செய்தால்
இப்பொழுதே நான் கரைந்திடுவேன்
(ஓரடி வைத்தேன்)

கற்கப் பிறந்த கணக்கெல்லாம்
கற்று முடித்தேனா
பற்று வரவில் லாதவொரு
பாதை அடைந்தேனா
சுற்றிச் சுற்றி விழுவதற்கோ
சொந்தம் உனைக்கொண்டேன்
வெற்றுச் சொற்க ளாவதற்கோ
கவிதை பலசொன்னேன்
(ஓரடி வைத்தேன்)

*01.01.2016*

## 57. கவிதை வண்டி

கவிதை வண்டி கவிதை வண்டி கடகடவென்று போகுதுபார்
புவியில் இருந்து வானத்துக்குப் புலியைப் போலே பாயுதுபார்

முன்னும் பின்னும் காலத்தில் முறையில்லாமல் போய்வரலாம்
இன்னும் ஏனோ தயங்குகிறாய் ஏறிக்கொள்நாம் தேவர்களாம்

அங்கேபார் ஒரு பெருநெருப்பு அருகே சென்று பார்த்திடலாம்
கங்கில் விளந்த நெருப்பில்லை கற்பில் எழுந்த சுடர்ப்பொறியாம்
மதுரை நகரம் எரியுதுபார் மனித சக்தி புரியுதுபார்
பொய்யில் விளைந்த கதையில்லை பூலோகத்தில் நடந்ததுதான்

செங்கோட்டையிலே கொடியேற்றம் தித்திப் பெல்லாம்
வழங்குகிறார்
இந்தி யாவின் சுதந்திரநாள் எல்லா ரும்கொண் டாடுகிறார்
அவரை மட்டும் காணவில்லை நவகா ளியிலே நடக்கின்றார்
குருதிச் சேறு பிணக்குவியல் குழந்தை போலக் குமுறுகிறார்

நேற்று நடந்த சேதியிது நிலைக்கண் ணாடி தெரிகிறதா
தோற்றுப் போக விடலாமா தொண்டர் கூட்டம் விழலாமா

நாளை உலகம் நம்பிக்கை நட்சத் திரங்கள் பூம்பொய்கை
கோள்கள் நடுவே கும்மாளம் கோடில் லாத பேருலகம்

*15.03.2015*

## 58. ஊழல் பெருச்சாளி

ஊழல் பெருச்சாளி ஊழல் பெருச்சாளி
கோட்டையில் என்ன குத்தகையா பதவி நாற்காலி

வயலுல எறங்கி உழைக்கிறவன் உண்மைத் தொழிலாளி - அவன்
வயத்துல அடிச்சுப் பொழைக்கிறவன் ஊழல் பெருச்சாளி
ஊழல் பெருச்சாளி ஊழல் பெருச்சாளி

பிறப்புச் சான்றிதழ் இறப்புச் சான்றிதழ்
இடையில சாதிச் சான்றிதழ் -
தொட்டில் முதல் சுடுகாடு வரை
எல்லாத்துக்கும் சான்றிதழ்
துட்டு குடுத்தா குடுப்பாண்டா - துட்டு
எங்கிருந்தாலும் எடுப்பாண்டா
ஊழல் பெருச்சாளி ஊழல் பெருச்சாளி

அப்பனுக்கப்புறம் புள்ளைக்குனு
வாரிசு அரசியல் காரனடா
சுருட்டின பணத்தக் காப்பாத்த
சுவிசர்லாந்துக்குப் போவாண்டா
ஊழல் பெருச்சாளி ஊழல் பெருச்சாளி

தோழி சொல்லுற சொல்லுக்குத்தான்
தொண்டர்களெல்லாம் ஆடணுமாம்
சோழி உருட்டிக் சோசியம் கேட்டுப்-பகுத்
தறிவு வேஷம் போடணுமாம்
ஊழல் பெருச்சாளி ஊழல் பெருச்சாளி
கோட்டையில் என்ன குத்தகையா பதவி நாற்காலி

மாறத்தான் போகுதுடா தலையெழுத்து - மக்களுக்குச்
சேரத்தான் போகுதடா நல்வாழ்வு
ஓட்டுச் சீட்டே துப்பாக்கி மக்கள் வாக்கே கோடாலி
ஓடத்தான் போகுதுடா ஊழல் பெருச்சாளி

*16.03.2015*

## 59. காகிதமா, ஆயுதமா?

நாம பாத்து ஓட்டுப் போட்டு
வேலைக்கு வச்ச ஆளுங்கடா
யாரு சொன்னாங்க தலைவருன்னு
நெஞ்ச நிமுத்திக் கேளுங்கடா

ரோட்டுல நடக்குற கெழவருக்கு
மந்திரி காரு வழிவுடணும்
மக்கள் அழைச்சா எம்.எல்.ஏ.
ஓடி வந்து உதவிடணும்
அப்படிப்பட்ட மக்கள் ஆட்சி
வரவேணாமா நீயோசி (நாம பாத்து)

எலவசமாத் தருவதெல்லாம் - இவன்
அப்பன் பாட்டன் தேடியதா
எலும்புத் துண்ட வீசுறதாலே
எசமான் பட்டம் கூடியதா
ஓட்டுச் சீட்டுக் காகிதமா - ஒன்
மானங் காக்கும் ஆயுதமா

(நாம பாத்து)

*17.03.2015*

## 60. கோப நெருப்பு

பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு - இதப்
பரவச்செய்ய வேண்டியது நம்ம பொறுப்பு
பதுங்கியது போதும்பாய வேணும் புயலா - நம்ம
பாட்டெல்லாம் மாறவேணும் வீரச் செயலா

பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு - இதப்
பரவச்செய்ய வேண்டியது நம்ம பொறுப்பு

செக்குமாடு புத்தியிலே சிக்கிக் கிட்டோமே - வெறும்
சில்லரயை நம்பிநாட்டை வித்துப் புட்டோமே
எக்குத்தப்பா மாட்டிக்கிட்டோம் எந்தி ரிங்கடா - வெறும்
வெத்துவேட்டுப் பசங்களெல்லாம் மந்திரிங்கடா

பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு - இதப்
பரவச்செய்ய வேண்டியது நம்ம பொறுப்பு

பொறுமைக்குமோர் எல்லையுண்டு புத்தி சொல்லுது
பொங்கியெழ வேணுமுனு நெஞ்சைக் கிள்ளுது
புரட்சிநம்ம நாட்டுலையும் வெடிக்கப் போவுது
புதுசாஓர் ஆட்சியிங்கே மலரப் போவுது

பத்திக்கிச்சு பத்திக்கிச்சு கோப நெருப்பு - இதப்
பரவச்செய்ய வேண்டியது நம்ம பொறுப்பு

*17.03.2015*

## 61. டாம் - ஜெர்ரி

டாம் ஒரு பூனை ஜெர்ரீ ஒரு சுண்டெலி
ரெண்டும் சேந்து லூட்டியடிச்சா
சிரிச்சு சிரிச்சு வயத்து வலி

எலியைப் பிடிக்கப் பாயும் - டாம்
எதிலோ தலையை மாட்டிக் கொள்ளும்
பானைக்குள்ளே பூனையென்று
பாட்டுப் பாடி எலியும் துள்ளும்
டாம் ஒரு பூனை ஜெர்ரீ ஒரு சுண்டெலி
ரெண்டும் சேந்து லூட்டியடிச்சா
சிரிச்சு சிரிச்சு வயத்து வலி
 - (டாம் ஒரு பூனை)

ஜெர்ரி
கூண்டை விட்டுத் தப்பும் - புகைக்
கூண்டில் ஏறி வெளியில் ஓடும்
ஓடும் போதே கதவி டுக்கில்
சிக்கிக் கொண்டு கத்தும் - எலி
வாலைக் கவ்விக் கொண்டோ மென்று
பூனை நினைக்கும் போது - வெறும்
நூலைக் கவ்விக் கொண்டாய் என்றெலி
கொக்கரிக்கும் ஓயாது

டாம் ஒரு பூனை ஜெர்ரீ ஒரு சுண்டெலி
ரெண்டும் சேந்து லூட்டியடிச்சா
சிரிச்சு சிரிச்சு வயத்து வலி

டாம் அண்ட் ஜெர்ரீ வந்தால் போதும்
குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்
தோசை ஊட்டி விடுவதற்குள்
அம்மாவுக்குத் திண்டாட்டம்

டாம் ஒரு பூனை ஜெர்ரீ ஒரு சுண்டெலி
ரெண்டும் சேந்து லூட்டியடிச்சா
சிரிச்சு சிரிச்சு வயத்து வலி

*22.03.2015*

## 62. தேர்தல் நேரம்

சேரிக்கும் காருவரும் தேர்தல் நேரம் - ஒன்னைத்
தேடித்தான் வருவாங்க ஐயா மாரும்
அண்ணாச்சி தங்கச்சீன்னு அழைப்பாங்கடா - கையக்
கும்பிட்ட படியேதான் நடப்பாங்கடா
மாயாண்டி முனியாண்டி மாட சாமி - இந்த
மரியாதையெல்லாம் ஓட்டு வாங்கச் சாமி
(சேரிக்கும் காருவரும்)

நம்மாளு நம்மாளுன்னு நல்லாத்தான் பேசுவான்
நம்பிக்கை வாக்குறுதி அள்ளியள்ளி வீசுவான்
பம்மாத்து பாசாங்கு பணிவெல்லாம் மோசன்டா
பணத்துக்கே குறிவைக்கும் பலவேசக் காரண்டா
(சேரிக்கும் காருவரும்)

கள்ளுக்கடை நடத்துறவன் கந்துவட்டி வாங்குறவன்
கைக்கூலிப் படைய வச்சுக் காரியத்த முடிக்கிறவன்
இவங்களுக்கு ஓட்டுப்போட்டா உருப்படுமா நாடு
வேலக்காரன் ஊழல்செஞ்சா வெளங்கிடுமா வீடு
அவனோட தலைவன்யாரு நிறுத்திக் கேளு - அவன்
ஒன்பேரச் சொன்னான்னா ஓட்டுப் போடு
அவனோட தலைவியாரு நிறுத்திக் கேளு - அவன்
ஒன்பேரச் சொன்னான்னா ஓட்டுப் போடு
(சேரிக்கும் காருவரும்)

*23.03.2015*

## 63. நாட்டைக் காக்கும் கையாலே

நாட்டைக் காக்கும் கையாலே
மாட்டை அடக்கத் துடிக்கிறான்
வேதம் ஓதும் வாயிலதான்
வெத்தல சீவல் அடக்குறான்
ஏருபுடிக்கும் கைகளிலே
ஏண்டா தம்பி சாராயம்
வேரில்லாத விழுதுகளா - சாதி
வெத்து வேட்டு வெங்காயம்

ஐய மாரும் புள்ள மாரும்
ஒண்ணா வாழப் பழகணும்
தேவமாரும் கௌண்டரும்
உழவர்களை மதிக்கணும்
வன்னியருக் கன்னியரு
இந்தியாவில் இல்லையடா
மக்கள் ஒண்ணா சேந்துப்புட்டா
இல்லையொரு தொல்லையடா

பிரிச்சாளப் பாக்குறவன் அரசியல் வாதி - அவன்
பதவிக்கு உதவத்தான் இத்தனை சாதி
சரியாத்தான் சொன்னாநம் ஔவைப் பாட்டி - சாதி
ரெண்டுக்கு மேலில்லை சமத்துவ நீதி

*24.03.2015*

## 64. பட்டாம்பூச்சி

தோட்டத்தில் பாருங்கள் பட்டாம் பூச்சி
தொடநினைத் தாலது முடியாது
ஒவ்வொரு செடியாய் உட்காரும்
ஒருநொடி கூடத் தங்காது
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

பறக்குது பாருங்கள் தேனெடுக்கப்
படபடவென்று சிறகடிக்க
சுறுசுறுப் பாகச் சுத்திவரும் - அதைப்
பாத்தா நமக்கும் புத்திவரும்
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

கண்ணுக்கும் அழகு கருத்துக்கும் அழகு
பட்டாம் பூச்சியைப் பாருங்கள்
புழுவாய் இருந்து பூச்சியும் ஆகிப்
பறக்கும் கதையைக் கேளுங்கள்
இன்றைய சிறுவர்களே
நாளைய மன்னர்களாம்

தோட்டத்தில் பாருங்கள் பட்டாம் பூச்சி
தொடநினைத் தாலது முடியாது
ஒவ்வொரு செடியாய் உட்காரும்
ஒருநொடி கூடத் தங்காது
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

*25.03.2015*

## 65. இல்லையானவன்

இல்லையென்று சொல்லுவதே இல்லையானவன்
எல்லையொன்றும் இல்லாத தில்லையானவன்
சொல்லிலுள்ள சூட்சுமத்தில் நீதியானவன்
சொந்தமென்று வந்தவர்க்குப் பாதியானவன்
கல்லினுள்ளும் காணுகின்ற ஜோதியானவன்
கருணையால் வளரும்ராஜ வீதியானவன்
எல்லார்க்கும் எல்லாமாய் என்றுமுள்ளவன்
ஏந்துகின்ற கையில்தன்னை யேகொடுப்பவன்

மன்றிலாடும் மன்னனவன் மாட்சி மிக்கவன்
மனம்குழைந்து நிற்பவர்க்குப் புகலளிப்பவன்
தென்றலாக ஓடையிலே சலசலப்பவன்
தேர்ந்தெடுத்த பாடல்களில் தேன்குடிப்பவன்
சென்றதுபோல் தோன்றுகிற காலம் யாவையும்
சேமித்து வைத்திருக்கும் செட்டியும் அவன்
கன்றுகண்ட தாயுமான சாமியும் அவன்
கண்கள்பெற்ற பேறுமவன் கடவுள் தானவன்

அடையாத கதவிருக்கும் சன்னிதிக்கு வா
அலையாத மனம்குவித்துக் காதலுடன் கேள்
கொடையாளன் அடையாளம் கண்டு வழிபடு
கொடுக்காத கரமில்லை நீ குரல்கொடு
தடையேதும் இல்லாத தர்ம ராஜ்ஜியம்
தாராள மாய்விரிந்த தேவனாலயம்
விடையற்ற கேள்விகளைப் போட்டெரித்திடு
விரைவாக வரும்விடியல் கண்விழித்திடு

*06.05.2015*

## 66. அந்த மழைத்துளி

அந்த மழைத்துளி இன்னுமேன்
வந்து விழவில்லை பூமியிலே
அந்தரத்தில் என்ன நாடகமோ
யார்ரசிக்க இந்த நாட்டியமோ
(அந்த மழைத்துளி)

இலைவிட்டுப் பிரிய மனமின்றி
எத்தனை யுகங்கள் இத்தவமோ
இன்னும் ஒருகணம் இன்னும் ஓரேகணம்
இப்படியே ஒரு ப்ரயத்தனமோ
(அந்த மழைத்துளி)

தூயநீர்த் தொட்டிலோ தூக்கணாங் குருவியோ
தூங்கிப் போய்விட்ட அருவியோ
மாயமென்ன மாயமோ மாய்மாலம் ந்யாயமோ
விழுந்தால் உலகழிந்து போகுமோ
விடுகதையோ சித்த யோகமோ
(அந்த மழைத்துளி)

*09.11.2015*

## 67. நீ என்றாலும் நிஜம்

தீயென் றாலும் தேனென் றாலும்
நீயென் றாலும் நிஜம் நிஜம்
நிஜம் நிஜம் அதே நிஜம்.

தென்றல் காற்றை இழையிழை யாகப்
பின்னும் விரல்கள் நீ - கண்ணில்
மின்னும் சுடரும் நீ

காதல் என்றொரு கீதம் பயிலக்
கவிதை மிழற்றும் கிளிநீ
துயரச் சுமையில் துவளும் நெஞ்சைத்
தொட்டுத் திறக்கும் ஒளிநீ - சொல்
பட்டுத் தெறிக்கும் துளிநீ

கொஞ்சிக் கொஞ்சி உலக மெல்லாம்
குதூக லிக்கும் தேவிநீ
நஞ்சைக் கூட அமுத மாக்கிப்
பருகச் செய்யும் அன்னைநீ - நான்
உருக உருக ஓ! இன்னும்நீ. *15.11.2015*

## 68. பேய்மழை

பேயு பேயுனு சொன்னப்பப் பேயாமப்
பேயாப் பேயுது பெரியமழை
ரோட்டுல பள்ளம் வீட்டுல வெள்ளம் - ஏற்
பாட்டுலியே ஏற் பட்டபிழை
ஏறெடுத்துப்பார் வானத்துலே
வெளிச்சமில்லே பகல் நேரத்திலே

அரைவிழி தொறந்தா போதுமடி
ஆத்தா கருத்த மகமாயீ
முழுசா தொறந்து மிரட்டாதே - முகம்
மலர்ந்து சிரிச்சுடு கருமாரி
பச்சக் கொழந்தை பயப்படுது
பால்கெடைக் காம அழுவுறது (பேயா)

மனுசனை மனுசன் அனுசரிக்கும்
பாடம் படிச்சுத் தேறிப்புட்டோம்
மதம்மொழி ஜாதி அத்தனையும்
மறந்துபுட்டோம் மனம் திருந்திப்புட்டோம்
சோதனை போதும் சுறுசுறுப்பா
வேலைக்குப் போகணும் நாளைக்கு நான் (பேயா)

*06.12.2015*

## 69. மாடு நம்ம சாமிடா டோய்

மாடு நம்ம சாமிடா டோய் - இது
மரியாதை பூமிடா டோய்
நாடு வாழ நாமும் வாழ
நல்லவழி சேரடா - இது
நம்பிக்கைத் தேரடா

சண்டை சச்சர வில்லாம சமரசமா வாழணும்
சங்கீதம் பாடிக்கிட்டு சந்தோசமாய் கூடணும்
அண்டை நாட்டு சனங்களோட அனுசரிச்சு போகணும்
அன்புவழி நம்மவழி என்றுசொல்லி யாடணும்
(மாடுநம்ம)

பதவி ஆசை பணத்தாசை மனசை விட்டு நீங்கணும்
உதவி செய்யும் உயர்ந்த குணம் அதிலே உண் டாகணும்
அமைச்சரெல்லாம் மக்களுக்கு ஓடியாடி உழைக்கணும்
அனுபவத்தை மதிக்கணும் - அரசு
அமைதியாக நடக்கணும்
(மாடுநம்ம)

*16.01.2016*

## 70. கேட்டு வாங்கிப் போட்ட பாட்டு

**இசைக்கவி ரமணனுக்குப் பிறந்த நாள் வாழ்த்தை நான் அனுப்புமுன்பே அவன் செல்பேசியில் அழைத்தான். “கவிதை வேண்டும்“ என்று கேட்டான். அவன் கேட்டு நான் எதை மறுத்திருக்கிறேன்!)**

கேட்டு வாங்கிப் போட்ட பாட்டை
அனுப்புகிறேன் - நீ
கேட்ட தெல்லாம் தரணும் அவளை
வேண்டிக்கிறேன்

நீபொறந்த நாளுக்காகக் காலமே தவம் செஞ்சுது
நீதொறந்த கவிதைப்பெட்டி யால ஒலகம் நெறஞ்சது
நீயுரக்கப் பாடிக்கிட்டே தலநிமுந்து நடக்கணும்
கேக்கக்கேக்க மனுசனெல்லாம்
தேவராக மாறணும்

வீடுவாசல் மனைவிமக்கள்
பேரன்பேத்தி யாவரும்
விலகிடாம சந்தோசமா
ஒண்ணுகூடி வாழணும்
சொல்லெடுத்து வந்த ரமணா
சொன்னதெல்லாம் பலிக்கணும்
சொல்லிப்புட்டேன் நீயும் நானும்
நூறு வருஷம் வாழணும் *30.03.2016*

## 71. கோவம் வருதா?

{வெறும் கோவணத்தோடு, வேலங்குச்சியில் பல்துலக்கியபடியே நின்று கொண்டு ஆடு மேய்ப்பவன் படம் ஒன்றை முக நூலில் கண்டேன்}

கோவணாண்டி கோவணாண்டி கோவம் வருதா
கோமாளித் தலைவர்கள் மேல் கோவம் வருதா

ஆட்ட மாட்ட ஓட்டக் கொம்பு
தூக்கி நின்னாயே - இந்த
ஆட்டு மந்தை சனங்கள நீ
மேய்க்க முடியுமா?

பல் துலக்கக் குச்சியோடு
நிக்கும் ராசய்யா - உன்
பலத்தையெல்லாம் ஓட்டுச் சீட்டில்
காட்ட மாட்டியா

ஓட்டுக் கேட்டு வருவாங்க
கூட்டம் கூட்டமா - சும்மா
ஒயிலாட்டம் மேள தாளம்
ஆட்டம் பாட்டமா

தலப்பா கட்டிக்கிட்டு - ஏன்
தனிச்சு நிக்குறே - ஒன்
சனங்க ளோடு சேந்து மூணு
கேள்வி கேக்குறே

தொகுதிக்கு மக்களுக்குத்
திட்டம் இருக்குதா - மாசம்
ஒரு முறை நீ இந்தப் பக்கம்
வந்து போவியா

சனங்கதான் தலைவருன்னு
சொல்ல முடியுமா
கட்சி எல்லாம் அப்புறம் தான்
ஒரக்கச் சொல்வியா?

ஆட்டம் எல்லாம் அடங்கி நல்ல
ஆட்சி அமையணும் - பொது
சனங்களோட வலிமையை நீ
உணர வைக்கணும் *14.04.2016*

## 72. யாரோட பாட்டு?

யாரோட பாட்டு யாரோட தென்று
சொல்ல முடியலே
நீரோடைக் காநீர் சொந்தம் பாட்டும்
அந்த வகையிலே (யாரோட)

ஏராள மான வார்த்தைகள் எல்லாம்
நட்சத்ரக் கூட்டத்துலே
எங்காச்சம் ஒருத்தன் எட்டிப் பிடிச்சா
உண்டாகும் பாட்டதுலே (யாரோட)

மாகாளி நடனம் ஆடுறச்சே அவ
சலங்கை மணிகள் எல்லாம் - வந்து
மனசுல விழுமொவ் வொருகணமும்
வாழ்பவன் கவிஞனடா - அவன்
போகாத எடமே ஓலகத்தில் இல்லே
புல்நுனி யிலுமிருப்பான் - ஒரு
நொடியிலே செறக விரிச்சுக்கிட்டு - ஓ
ஆகாசத் தில்பறப்பான் (யாரோட)

*24.04.2016*

## 73. காசுக்கா ஓட்டு?

ஐந்நூறும் ஆயிரமும்
ஆயுசுக்கும் போதுமா
அதுக்குப் போயி மானத்தை நீ
அடகு வைக்க வேணுமா
ஆகாதுடா தம்பி ஆகாது - இந்த
அறிவில்லாம அடிமை புத்தி போகாது

வெள்ளை வேட்டி வெள்ளை சட்டை
வேட்பாளர் வருவாரு
தள்ளு முள்ளு பண்ணிக் கிட்டே
தம்பிமாரு வருவாரு
ஓட்டுப் போடச் சொல்லி உன்னைக்
கேப்பாரு - ரொம்ப
உத்தமரைப் போலத்தான்
நடிப்பாரு
ஆகாதுடா தம்பி ஆகாது - இந்த
அறிவில்லாம அடிமை புத்தி போகாது

சின்னத்தைக் காட்டுவாரு
சில்லரைய நீட்டுவாரு
என்னத்தை யோசொல்லி
ஏமாத்தப் பாப்பாரு
அவங்களோட வாழ்வெல்லாம்
உன் கையிலே - அவங்க
கொடுக்கறதைப் போடாதே
உன் பையிலே

உன்
புள்ளகுட்டி வாழணும்
பேரன் பேத்தி வாழணும்
உலகத்துல நம்ம நாடு
தலைநிமுந்தே ஆகணும்
கனவெல்லாம் நிறைவேற
ஓட்டுப் போடணும் - நீ
ஓட்டுப் போடணும் - வெறும்
காசுக்கு ஏண்டா அது
வெலை போகணும் - நீ
திருந்தி யாகணும்

*25.04.2016*

## 74. கண்ணைத் தொறந்த ராசாத்தி

**(இது சின்னையா – ராசாத்தி டூயட். கற்பனை இல்லை. பல குடும்பங்களில் அன்றாடம் நடக்கும் சம்பவம்.)**

**சின்னையா:**
எனக்கென்ன போச்சு எனக்கென்ன போச்சு - நம்மை
யாரோ வந்து ஆளட்டுமே
எனக்கொரு பாட்டில் கெடைச்சா போதும் - இந்த
ராத்திரி பொழுது நீளட்டுமே

**ராசாத்தி:**
தூ
நீயெல்லாம் ஒரு மனுசனா - தாலி
கட்டியதால் நீ புருசனா

**சின்னையா:**
காலையில் இருந்து கைகட்டி
நாயாத்தாண்டி உழைக்கிறேன்
ராத்திரிதான் என் ராஜாங்கம்
அதுக்குத்தான் நான் குடிக்கிறேன்

**ராசாத்தி:**
தூ
இன்னொரு தடவை என்னைத் தொட்டே
பிஞ்சிடும் பாரு தொடப்பக் கட்டை

**சின்னையா:**
ஓட்டுப் போடக் கொடுத்த பணம்
ஒனக்குத் தாண்டி மவராசி
நீட்டி மொழக்கிப் பேசாதே - சோ
றாக்கிப் போடுடி ராசாத்தி

**ராசாத்தி:**
நான்
அடுத்தவன் கிட்டப் படுத்து வந்து - துட்டு
கொடுத்தா வாங்கித் தும்பியா
ஓட்டுக்குக் காசு வாங்குறதும்
அப்படித்தான்யா சின்னையா

**சின்னையா:**
ஐயோ போதும் நெத்தியடி - இன்னிக்குத்
திருந்திடுச்சு என் புத்தியடி
இனிமே குடிச்சா நிறுத்தி வச்சு
செருப்பாலே என்னை மொத்தியடி
காசுக்காக ஓட்டுப் போடும்
விபச்சாரத்தை விட்டுப்புட்டேன் - என்
கண்ணைத் தொறந்த ராசாத்தி - உன்
அன்புக்குத்தான் நான் கட்டுப்பட்டேன்

*26.04.2016*

## 75. அது, அந்தக் காலம்

மன்னாதி மன்னர்களை ஆள விட்டுக் - குடி
மக்களாக வாழ்ந்திருந்தோம் அந்தக் காலம்
வாய்ச்சொல்லில் வீரர்களை ஏற்றி வைத்து - வெறும்
அடிமைகளாய் வாழ்கின்றோம் இந்தக் காலம்
அது அந்தக் காலம்
இது இந்தக் காலம்

ஆராய்ச்சி மணிகேட்டு ஓடி வந்த
அரசர்களைக் கண்டிருந்தோம் அந்தக் காலம்
அடிவயிற்றில் அடிப்பவரைத் தட்டிக் கேட்க
அஞ்சியஞ்சிச் சாகின்றோம் இந்தக் காலம்
அது அந்தக் காலம்
இது இந்தக் காலம்

நீதிதவ றாச்சென்று உணர்ந்ததுமே - உயிர்
நீத்தமன்னன் ஆண்டிருந்த தந்தக் காலம்
நீதியொரு நாதியின்றிப் போச்சுதென்று - நாம்
நின்றபடிப் புலம்புகிறோம் இந்தக் காலம்
அது அந்தக் காலம்
இது இந்தக் காலம்

காலம் மாறிப் போச்சென்று கன்னத்தில் கைவைச்சுக்
கல்லாகிப் போனாயோ சின்ன தம்பி - நீ
காலத்தை மாற்றுகிற வீரனென்றே - நல்ல
காரியத்தில் இறங்கிவிட்டேன் உன்னை நம்பி
இனி நல்ல காலம்
இனி நல்ல காலம்

*27.04.2016*

## 76. சாவி எங்கே?

டீக்கடை வாசல் பெஞ்சுல பேப்பர்
படிக்கிற கூட்டம் பேசுது
திருட்டுப் பயலுவ களவாணிகள் எனத்
திட்டிக் கொண்டே ஏசுது

சாக்கடை அரசியல் சாக்கடை அரசியல்
சாமானியன் குரல் கேக்குது
சலூன் கடையில தர்பார் நடத்திக்
கோவத்தைக் கொட்டித் தீக்குது

பார்க்குல பீச்சுல நடை பயிலும்
பண்டிதர் கூட்டம் பேசுது
பாங்குல கோர்ட்டுல பலவிதமா
கேள்விகள் அள்ளி வீசுது

நமக்குள் இருந்தே வந்தவன் தான்
நம்மையே ஏறி மிதிக்கிறான்
வானத்தில் இருந்து வரவில்லை நம்
வாக்குகளாலே வளந்தவன்தான்

யாருக்கும் தெரியலே யாருக்கும் புரியலே
சாவி எங்கே சகோதரா
யார் யாரோ உன் தலைவருன்னு
நம்பும் வரை நீ அரோகரா

நீ தான் உனக்குத் தலைவன்டா - நீ
நெனச்சா எல்லாம் நடக்குண்டா - உன்
வலிமை உனக்குப் புரிஞ்சுப்புட்டா
நல்ல காலம் பொறக்குண்டா

*28.04.2016*

## 77. உங்க வக்கீல்!

வேல வெட்டி இல்லாதவன் இந்த வக்கீல்
வேளைக்கொரு பாட்டெழுதித் தள்ளும் வக்கீல்
தோணுறதைச் செஞ்சுக்கிட்டே புலம்பும் வக்கீல்
தோத்தாலும் வீராப்புப் பேசும் வக்கீல் - அட
நாகரிகக் கோமாளி இந்த வக்கீல்

வக்கில்லாத சனங்களுக்கு வக்காலத்து வாங்கிக்கிட்டு
மலைகளோட மோதப் பார்க்கும் அசட்டு வக்கீல்
கற்பனைக்கும் எட்டாத காரியத்தைச் செய்வதற்குக்
கங்கணம் கட்டிப்போ ராடும் வக்கீல்
நாகரிகக் கோமாளி இந்த வக்கீல்

நாட்டுநடப் பென்னன்னு தெரியாம - வெறும்
ஏட்டுச்சுரைக் காயாய் - ஏ
மாறும் வக்கீல் - கறுப்புக்
கோட்டணிவ தாலேதான் பாரதியின்
சொந்த மென்று சொல்லிக்கொண்
டலையும் வக்கீல்
நாகரிகக் கோமாளி இந்த வக்கீல்

நம்மாலே முடியாது என்றொதுங்கி
நழுவத் தெரியாத மக்கு வக்கீல்
நம் மூலம் ஆண்டவன் சாதிப்பான் என்ற
நம்பிக்கை யிழக்காத முரட்டு வக்கீல்
எல்லாரும் இந்நாட்டு மன்னரென்ற
வாக்கியத்தை வேதமாய் மதிக்கும் வக்கீல்
எண்ணத்தைச் சொல்லாக்கிச் செயலாக்கும்
ஊக்கம் குறையாத உண்மை வக்கீல்
எல்லார்க்கும் தோழன் இந்த வக்கீல்

அமைச்சர் என்றும் முதல்வர் என்றும்
சொல்வதெல்லாம் மாறணும் - நமக்கு
வேலை செய்யும் ஊழியர்க

ளாயவர்கள் ஆகணும்
சனங்களுக்குக் கட்டுப்பட்டு
அடக்கத்துடன் ஆளனும் - இது
நடக்கணும்னு மக்களெல்லாம்
ஒரு குரலில் பேசணும் - என்று
வேண்டிக் கொள்ளும் இவன் உங்க வக்கீல்
வேறெதுவும் கேட்கத்தெரி யாத வக்கீல் *29.04.2016*

## 78. மக்களைப் பாடும் வாயால்...

மக்களைப் பாடும் வாயால் - ஆட்டு
மந்தையைப் பாடுவேனோ - நல்ல
வீரரைப் பாடும் வாயால் - அஹங்
காரரைப் பாடுவேனோ

ஓட்டுக்குக் கூட லஞ்மென்றால் - இந்த
நாட்டுக்கு நற்கதி ஏது - நம்மை
வாட்டி வதைக்கும் நோய்க்கெலாம் காரணம்
நாமன்றி எதுவும் கிடையாது

பாட்டுக்குப் பாட்டு படித்தென்ன லாபம்
பண்படுமாவிச் சமூகம்
கோட்டையென்றும் கொற்றவரென்றும் இன்னும்
கூறுவதெல்லாம் வினோதம்

என்
ஒவ்வொரு சொல்லும் கூரம்பாகித்
தைத்திடத் தானிந்தப் புலம்பல்
ஓட்டுக்குக் காசு வாங்குவதில்லையென்(று)
ஒன்றுபட்டால் உண்டு விடியல்

எல்லாரும் இந்நாட்டு மன்னரென்ற
வாசகமே நம் வேதம் - இதை
உணர்ந்து விட்டால் மக்கள் எழுந்து விட்டால் - உடன்
எத்தர்கள் கூட்டம் ஓடும்

*03.05.2016*

## 79. ஏமாத்தாதீங்க

படிக்காத மக்களை-ஏ மாத்தாதீங்க
பணத்தைவச்சுக் கைவரிசை காட்டா தீங்க
பாவம்
படிக்காத மக்களை-ஏ மாத்தாதீங்க

தலைவருன்னு தனிச் சாதி எவரு மில்லீங்க
நம்மைப்போல மனுசங்கதான் பயப்ப டாதீங்க
ஓட்டுப் போடும் மக்கள் தான்
முதலா ளிங்க
அமைச்சரெல்லாம் மக்களுக்கே
பணியா ளருங்க
பாவம்
படிக்காத மக்களை-ஏ மாத்தாதீங்க

பத்துப்பேரு சுத்திவரப் பாதுகாவலா
பயந்துக்கிட்டே நடக்குறவன்
கோழையில்லையா
போலீஸை வச்சு அப்பாவி ஏழைக்குப்
பூச்சாண்டி காட்டுறதில் வீரமென்னய்யா
பாவம்
படிக்காத மக்களை-ஏ மாத்தாதீங்க

சமரசமா எல்லாரும் சேந்து வாழணும்
சண்டைசச்சர வில்லாத அமைதி கூடணும்
பதவிக்கொரு லச்சணமே பணிவுதானய்யா - மக்கள்
பயமில்லாம வாழ வழி
செய்ய வேணும்யா
பாவம்
படிக்காத மக்களை-ஏ மாத்தாதீங்க

*04.05.2016*

## 80. ஓட்டும் நானே!

ஓட்டும் நானே - உயி
ரோட்டமும் நானே
மாற்றம் விளையும் - நீ
ரோட்டமும் நானே
(ஓட்டும் நானே)

ஆட்டம் போட்ட அரசியல் கூட்டம்
ஆட்டம் கண்டு அஞ்சி விழும் - அதிர்
வேட்டும் நானே விவேகமும் நானே
பூட்டும் நானே பொற் சாவியும் நானே
(ஓட்டும் நானே)

ஆயுதம் கேடயம் யாவையும் நானே
ஆக்கவும் அழிக்கவும் வல்லவள் நானே
காகித மாகப் பிறந்தவள் நானே
மின்னணு வாக வளர்ந்தவள் நானே
(ஓட்டும் நானே)

தேர்தல் களத்தின் நாயகி நானே
ஜனநாயக மன சாட்சியும் நானே
என்னை விற்கத் துணிபவரெல்லாம்
அன்னையை விற்கும் அயோக்கியர்களாமே
(ஓட்டும் நானே) *04.05.2016*

## 81. வாங்கையா, வேட்பாளர் ஐயா!

வாங்கையா வேட்பாளர் ஐயா
எங்களோடு பேசுங்கையா
ஏதேதோ செய்வீங்கன்னு
எதிர்பார்க்கும் சனங்கள் ஐயா
வாங்கையா வேட்பாளர் ஐயா

தலைவர் தலைவி பேச்செல்லாம்
தள்ளி வச்சிருங்க - உங்க
மனசிலிருந்து சிலவார்த்தை
மட்டும் சொல்லுங்க

வாங்கையா வேட்பாளர் ஐயா

இந்தத் தொகுதி முன்னேறத்
திட்டம் என்னங்க
இருந்தா எடுத்துச் சொல்லுங்க
ஓட்டுக் கேளுங்க

வாங்கையா வேட்பாளர் ஐயா

மாசா மாசம் தொகுதிக்கு
வந்து சனங்கள் சொல்லுறதைக்
கேட்டு நடப்பேன் உறுதியின்னு
ஓட்டுக் கேளுங்க

வாங்கையா வேட்பாளர் ஐயா

தொகுதிக்குப் பெறகு தான் கட்சி
தொகுதி மக்களே தலைவர்
இந்த வாக்கை மீறமாட்டேன்னு
ஓட்டுக் கேளுங்க

வாங்கையா வேட்பாளர் ஐயா

மக்கள் பணியே எம்.எல்.ஏ. அது
பதவி இல்லீங்க
பணத்துக்காக எதையும் செய்யும்
பழக்கத்தை விட்டுடுங்க

வாங்கையா வேட்பாளர் ஐயா
எங்களோடு பேசுங்கையா
ஏதேதோ செய்வீங்கன்னு
எதிர்பார்க்கும் சனங்கள் ஐயா
ஏமாத்த வேணாம் ஐயா
வாங்கையா வேட்பாளர் ஐயா

*05.05.2016*

## 82. எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம்

எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் இந்தத் தேர்தலில்
பொதுத் தேர்தலில்

எத்தர்கள் சிலரும் பித்தர்கள் சிலரும்
நடத்தும் நாடகமாய்
ஆக்கி விட்டோம் இதை அரசியல் என்றே
ஒதுங்கி விட்டோம் ஜடமாய்

எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் இந்தத் தேர்தலில்

நம்மை நாமே மதிக்க மறந்து
நம்பிக்கையின்றி வாடுகிறோம்
பணி செய்திடவே வந்தவர்க்குப்
பணிவிடை செய்து வாழுகிறோம்
வாக்களிக்கும் வலிமையால் - இந்தப்
போக்கை மாற்றப் புறப்படுவோம்
ஆக்கும் சக்தி மக்கள் என்றே
முரசறைந்து சொல்லிடுவோம்

எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் இந்தத் தேர்தலில்

எலும்புத் துண்டுக் காசைப்பட்டு
இழப்போமோ தன்மானத்தை
ஓட்டுக் கேட்டு வருவோர் எல்லாம்
உணர வேண்டும் கடமையை

எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் இந்தத் தேர்தலில்

*06.05.2016*

## 83. அவர் ஜெயித்து விட்டால்...?

நாம் வாக்களித்தால் அவர் ஜெயித்து விட்டால்
பின்
தொகுதியின் பக்கம் வர மாட்டார்
பணிவும் இல்லை எந்தப் பணியும் இல்லை நம்
பார்வையிலே அவர் பட மாட்டார் - நம்
பார்வையிலே அவர் பட மாட்டார்
(நாம் வாக்களித்தால்)

தலைவனைத் தலைவியைப் புகழ்வது பிறவிப் பயனென்பார்
- அந்தப்
புகழ்ச்சியினால் வரும் சில்லறையே தம் தொழிலென்பார்
மக்களெல்லாம் வெறும் மந்தைகளாம் - தம்
அடிமைகளாம் வலு வற்றவராம்
இன்னும் ஐந்து வருடங்கள் இவரே
ராஜ யோகம் பெற்றவராம்
(நாம் வாக்களித்தால்)

தேர்தல் முடிந்ததும் தேவையில்லையென
முடங்குவதா குடியுரிமை
தேர்ந்தெடுத்தவரைப் பணிசெய்ய வைக்கும்
செயற்பாடே நம் கடமை
சேர்ந்திருப்போம் ஓயாதுழைப்போம் - இந்த
நாட்டை ஆள்வது நம் உரிமை
உண்மையின் முன்னே போலிகளைத் தோல்
உரித்துக் காட்டும் நம் திறமை
(நாம் வாக்களித்தால்) *08.05.2016*

## 84. மானத்தோடு வாழ்ந்திடுவோம்

போட்ட பணத்தை எடுப்பதற்கே போட்டி போடும் வேட்பாளர்க்(கு)
ஓட்டுப் போட வேணாங்க சாமி சாமி
நோட்டுக் கத்தை ஆசை காட்டி
ஓட்டுக் கேட்டு வருபவரை
மாட்டிவிட வேணுமுங்க சாமி சாமி

பொன்னும்பொருளும் கொடுத்து ஓட்டை
வாங்குறவன் ஜெயிச்சுப்புட்டா
இன்னும் லஞ்சம் பெருகிப் போகும் சாமி சாமி
புள்ளைங்கல்லாம் வாழ இந்த
பூமியை நாம் ஆள நல்லாப்
புரிஞ்சுக்கிட்டு ஓட்டுப் போட வேணும் சாமி

நம்ம வீடு நம்ம ஊரு
நம்ம நாடு வாழணும்னா
நாமெல்லாம் திருந்த வேணும்
சாமி சாமி
கம்மலுக்கும் வளையலுக்கும் ஆசை பட்டு நம்மஎதிர்
காலத்தையே பாழாக்க
வேணாம் சாமி

கட்சிகளை நம்பாம
கண்ணியமா நமக்குழைக்கும்
நல்லவரைத் தேர்ந்தெடுப்போம் சாமி சாமி
வெட்டியில ஏன்பேச்சு
வெலைக்கில்லே நம் ஓட்டு
மானத்தோடு வாழ்ந்திடுவோம் சாமி சாமி

*08.05.2016*

## 85. தேர்தலோடு முடிந்து விடாது

தேர்தலோடு நம்கடமை
முடிந்து விடாது
தேவையில்லை என்றுணர்வு
முடங்கி விடாது
தேர்ந்தெடுக்கப் படுபவர் தம்
உறுதிமொழி அத்தனையும்
செயலாகும் வரைநமது
பணி முடியாது

யாரோடும் மோதலின்றி எவரோடும் சண்டையின்றிப்
போராடும் வழிநமக்குப்
புதிய தில்லையே
வேரோடிப் போனவிஷக்
கிருமிகளை அகற்றும்வரை
வேறெந்தச் செயலையும்மேற்
கொள்வதில்லையே

தேர்தலோடு நம்கடமை
முடிந்து விடாது

அடுத்தடுத்த தேர்தல்களில்
மக்கள்குரல் ஓங்கி விடும்
அதிகாரம் ஆடம்பரம்
தோற்று விடும்
எடுத்தபணி நிறைவேற்றி
எல்லாரும் மன்னரென்ற
இலக்கினையே அடைகின்ற
மாற்றம் வரும்

தேர்தலோடு நம்கடமை
முடிந்து விடாது

*09.05.2016*

## 86. கனவினிலே வந்து கவிதைப்படி

என்
நெற்றிச் சுருக்கத்தை உன் விரல்கள்
நீவிவிட மனம் ஏங்குமடி
கண்ணிமைகள் கொஞ்சம் கனக்கின்றன - இதழ்
ஒத்தடம் தந்தால் தூங்குமடி

தாளங்களில் இசை தத்தளிக்கும் போ(து)
ஆலாபனை வந்தமைதி செய்யும் - என்
நாளங்களின் உயிர் அதிர்வுகளும் - உன்
ஸ்வாசம் படப்படச் சீரடையும்

உன் மடியில் நான் முகம்புதைத்துக்
கண்ணயர்ந்தால் அது போதுமடி
நாளையிவ் வுலகை வென்றிடுவேன் - இன்று
கனவினி லேவந்து கவிதைபடி

*09.05.2016*

## 87. புறப்படு மச்சான்

வாக்குச் சாவடி நோக்கிப் புறப்படு
மச்சான் மச்சான்
நாமே நம்மை ஆளத் தானே
தேர்தல் வச்சான்

நம்ம ஓட்டை வாங்கிக் கிட்டு
நாட்டை ஆளும் கூட்டத்தில்
நல்லவ ராக ஒருவரைத் தானே
தேர்ந்தெடுக்கோணும்
நமக்கேன் அதுக்குக் கட்சிகள் எல்லாம்
காசு கொடுக்கோணும்
(வாக்குச் சாவடி)

எம்.எல்.ஏ. நம் வீதிகளில்
வந்து கேக்கணும் - நம்ம
பகுதியில் என்ன பிரச்சினை என்று
அணுகிப் பாக்கணும்
போலீஸ் காரன் பயமுறுத் தாம
அன்பு காட்டணும்
ஏழை எளிய மக்களுக் காக
உதவி செய்யணும்
(வாக்குச் சாவடி)

ஆளும் கட்சி எதுவும் இல்லே
மக்கள் ஆளணும்
தலைவன் தொண்டன் பேத மெல்லாம்
ஒழிஞ்சு போகணும்
ஒருமுறை தான் ஓராளுக்குப் பதவி
ஒதுங்கிப் போகணும்
குடும்பத்துக்கே குத்தகை இல்லை
புரிய வைக்கணும்
(வாக்குச் சாவடி). *14.05.2016*

## 88. இறுதி விண்ணப்பம் - 1

வாழ வழி இல்லாத
ஏழை வெவசாயி - ஒன்
வாழ்க்கைக்கு விடிவுண்டா
நீகொஞ்சம் யோசி

யூதக் கிழவன் செஞ்சு தந்த
சாவி எங்க போச்சு
காந்தி தாத்தா கழற்றி எறிஞ்ச
சட்டைப் பையில் தேடு
மாவோ சொன்ன மக்கள் புரட்சி
மண்ணு மூடிப் போச்சு
ஓடப்பர் ஓடெல்லாம்
ஆப்பக் கூடையாச்சு

காலையிலே ஏர்புடிச்சுக்
கால்கடுக்க நடக்குறே
கால் வயித்துக் கஞ்சித் தண்ணி
பொஞ்சாதி ஊத்துவா
சாயரட்ச வேளை வந்தா
சாராய வேட்டைதான்
ராவெல்லாம் கூத்துதான்
படுத்ததுமே மூட்டைதான்

புள்ளகுட்டி படிச்சு வந்தா
வெளிச்சம் வரக்கூடும்
அது வரைக்கும் பாவி உந்தன்
உசிரிருக்க வேணும்
சாராயம் வேணாம்யா
மண்டியிட்டுக் கேக்குறேன்
நம்பிக்கை யோடுசிரி
ஒம்மொவத்தைப் பாக்குறேன்

ஆட்டைவித்தே மாட்டைவித்தே
ஓட்டை மட்டும் விக்காதே
மானத்தோட வாழணும்னா
பல்லிளிச்சு நிக்காதே
உன்னோட ஒரு ஓட்டு
தலையெழுத்தை மாத்திடலாம்
எல்லாரும் போலேநீ
தலைநிமுந்து வாழ்ந்திடலாம்

*15.05.2016*

## 89. இறுதி விண்ணப்பம் - 2

(ஒரு வில்லுப்பாட்டு)

“இது பொறுக்குதில்லை தம்பி
எரிதழல் கொண்டு வா” (பாரதி)

நாட்டைவித்துக் கோட்டை கட்டும்
வஞ்சகர்க்கே
ஓட்டைவிக்கப் பாக்கும்பர தேசிகளே
கேட்டுக் கேட்டு அலுத்த மஹா பாரதக்கதை
மறந்து போச்சா பாரத வாசிகளே

ராஜ்ஜியத்தை தம்பிகளை பொண்டாட்டிய
வித்துப்புட்ட அறிவாளி தருமராசன்
அந்தக் கதை இப்போது மறந்திடுச்சா
மானம் வெக்கம் சொரணையெல்லாம்
மழுங்கிடுச்சா

வில்லுப்பாட்டுக் காரனென்று
நெனச்சிடாதே - ஒரு
சொல்லாலே சுடவந்த சூரியன் நான்
வேடிக்கை பாத்துப்புட்டு நடந்திடாதே - உன்
வேதனையத் தீக்கவந்த
தோழனும் நான்
ஓட்டைவிக்கும் காசு பத்து
நாளைக்குத்தான்
காலமெல்லாம் வறுமையில்
மொடங்கிடாதே
வஞ்சகத்தை ஊழலை நீ
முறித்து விடு
காசுதரும் கையையுடன்
எரித்து விடு

நம்மவீடு நம்மஊரு நம்ம நாடிது
நாமெல்லாம் மன்னர்கள் என்று பாடிடு

*15.05.2016*

## 90. உனக்கேன் ஊர் கவலை?

சட்டாம் புள்ளே வாத்தியாரு
சட்டசபை போனாரு
சட்டை கிழிஞ்சு போகும் வரை
சண்டை போட்டு வந்தாரு
எட்டாம் க்லாசு தாண்டாத
எட்டியப்பன் போனாரு
கொறட்டை விட்டுத் தூங்கிப்புட்டு
ஏரோப்ளேனில் வந்தாரு
எங்க ஊரு எம்.எல்.ஏ.
எங்க போனாரு
எக்கச்சக்க வேலை யின்னு
சொல்லிப்புட்டாரு

சத்தம் போட்டுப் பேசுறாராம்
சட்டம் போடுறாராம்
எட்டு மாடி வூடு கட்டத்
திட்டம் போடுறாராம்
பட்டணத்தில் இவர் மவுசு
கூடிப் போச்சுதாம்.
மந்திரிங்க எந்திரிச்சி
வணங்குறாங்களாம்
எங்க ஊரு எம்.எல்.ஏ.
பாக்க முடியுமா
ஏழைச்சனம் போயி கேள்வி
கேக்க முடியுமா

ரோடெல்லாம் மேடு பள்ளம்
தண்ணியில்லே கரண்டும் இல்லே
அஞ்சு மைலு அப்பாலுள்ள
ஆஸ்பத்ரியில் டாக்டர் இல்லே
நம்மூரு பள்ளிக் கூடம்
வகுப்பறையில் கூரையில்லே
சொல்லத்தான் தேடுறேன் எங்க
எம்.எல்.ஏ. அகப்படலே
“எலே, உனக்கேன் ஊர் கவலை?” *23.05.2016*

## 91. மரியாதை எந்நாளும் கொறயாதவன்

(இன்று காலை "சட்டாம் புள்ளே வாத்தியாரு" என்று ஒரு பாடல் பதிந்ததும், நான் மிகவும் மதிக்கும் ஒரு நண்பர், "மக்கள் பிரதிநிதிகளை மரியாதையுடன் குறிப்பிடுவது ஜனநாயகத்தின் பாலபாடம்" என்று அறிவுறுத்தினார். எனக்குள்ள இருக்கற கவிஞன் சும்மா இருப்பானா?)

மரியாதை எந்நாளும் தவறாதவன் - நான்
மட்டம்தட் டிப்பேசத் தெரியாதவன்
வெறியாட்டம் போடாம வேதனையைக் கொட்டுறவன்
சரியாட்டும் தப்பாட்டும் சரியாகச் சொல்லுறவன்
மரியாதை ராமனுக்குப் படகோட்டி நான்
மதுராவை ஆண்டவனின் தொழிலாளி நான்
(மரியாதை)

தறியூடு போனாத்தான்
சேலை வண்ணம்
தறிகெட்டுப் போனாக்கச்
சின்னா பின்னம்
பொறிதேடிப் போவோமா
எலியாட் டம்நாம் - நல்ல
நெறிநின்னா உலகெல்லாம்
நமக்காகத்தான்
(மரியாதை)

திட்டுறதென் வேலையில்லே திந்தக் கத்தோம் - மக்கள்
தீர்ப்பைநாம் வணங்கோணும்
திந்தக் கத்தோம்
தட்டிக்கேக்கத் தானிங்கே
ஆளும் வேணும் - நம்ம
தரங்கொறஞ்சு போகாம
ஆள வேணும் (மரியாதை)

*23.05.2016*

## 92. இருவேறு உலகத்து இயற்கை

("நிலை
மாறுவ தெப்போது – துயர்
தீருவ தெப்போது"

என்று நண்பன் பா. வீரராகவன் தன் பழைய பாடல் ஒன்றில் குமுறி எழுதியிருந்ததை இப்போது முகநூலில் படித்தேன். உடனே இந்தக் கவிதை வடித்தேன்.)

சேறு சகதி புழுதி எல்லாம் வேறு லோகம்டா
காரு ப்ளேனு கம்ப்யூட்டரு வேறு லோகம்டா
இருவேறு உலகத்து இயற்கையிதா
இப்படித்தான் நெனச்சாரா தேசப்பிதா

மாரு சந்தனம் பூசிக்கிட்டு மலையேறுறான்
மந்தி வந்தா பயந்துகிட்டுப் பின்வாங்குறான்
ஓரத்துல காலில்லாம குந்தியிருக்கும்
ஓட்டாண்டியப் பாத்துப்புட்டு ஒதுங்கிப் போகுறான்
இருவேறு உலகத்து இயற்கையிதா
இப்படித்தான் நெனச்சாரா தேசப்பிதா

ஐந்தாண்டுத் திட்டங்கள் உதவவில்லையா
நைந்தாரைத் தூக்கிவிட
எவரும் இல்லையா
வைதாரை வாழவைக்கும்
வள்ளல் எங்கேடா
எய்தாரை விட்டம்பை
நோவதென்னேடா
இப்படித்தான் இருக்குமுனு
வெம்பிச் சாவதா
விடிவு காலம் பொறக்குமுனு
நம்பிப் போவதா

தோழன் என்று சொல்லிக்கிட்டே
சுரண்டி விட்டவன்
சுத்திகத்தி என்று கத்திக்
கூச்சலிட்டவன்
ஜாதி பேரச் சொல்லிச் சண்டை
வளத்துவிட்டவன்
தமிழவச்சுத் தமுக்கடிச்சே
கொள்ளையடிச்சவன்
கோழையாகக் குனிஞ்சுப் புட்டோம்
இவக மத்தியில்
ரோசம் மானம் இல்லையடா
நம்ம புத்தியில்
ஏழைபாழை எல்லாருக்கும்
சுதந்திரமாம் - எங்க
முண்டாசுக் கவிசொன்ன
மந்திரமாம் *23.05.2016*

## 93. சாராயப் பிரச்சினைக்குப் பேராயம்!

(அனுபவம் அற்ற களத்தில் தனியாளாய் நானென்ன சொல்ல முடியும். எல்லாத்துக்கும் பாட்டு வரும். பாடி வைப்போம்.)

சாராயப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே - ஒரு
பேராயம் கூட்டுங்க பெரியோர்களே
தோராய மாற்றங்கள் தோதில்லை - நல்லா
ஆராய வேணுமிதன் அடிப்படையை (சாராய)

பாராள வந்தவரின் தாராள மனசால
ஏராளம் பேரிங்கு அடிமையானார்
காராளர் தொழிலாளர் நூலாளர் முதலாளர்
யாராலும் போராட முடியவில்லை
ஏழைகளின் வாழ்விலினி விடியலில்லை (சாராய)

வேரோடு சாய்க்கணும் சாராயத்தை - வெட்டி
வேதாந்தம் பேசியொரு லாபமில்லை
நாரோடு பூச்சேந்து நாறுவதா
நல்லவரும் சாக்கடையில் வீழுவதா (சாராய)

நீராள முடியாம நெலகொலஞ்சு
போராடும் மாநிலங்கள் சேர்ந்தாகணும் - நாடு
பூராவும் ஒருதிட்டம் வகுத்தாகணும் - போதை
ஏறாமல் ஒருபாதை சீராகணும்
தமிழ்நாட்டின் தலைவிதி மட்டுமில்லே - இந்தத்
திருநாட்டுக்கே இது தலைவலியாம்
எல்லாரும் சேர்ந்துதான் சிந்திக்கணும்
ஒத்துமையா தானிதைச் சந்திக்கணும் (சாராய)

*24.05.2016*

## 94. துட்டுக்குப் பாடலே

துட்டுக்குப் பாடலே டா - எந்த
மெட்டுக்கும் பாடலே டா - கை
தட்டல் பாராட்டு பொன்னாடைக்கெல்லாம் - நான்
கண்டிப்பாப் பாடலே டா

தாளம் கொடுக்குது காத்து - நின்னு
தலையசைக்குது தென்னமரம்
ஓலமெழுப்புது நீலக்கடல் - ஒளி
பொங்கிச் சிரிக்குது வானம்
மூலப் புள்ளியில் மூண்ட கனல் வந்து
மோதித் திறக்குது பாட்டுச் சத்தம்
(துட்டுக்கு)

சோகத்துல ஒரு பாட்டு வரும் - கடுங்
கோபத்துல ஒரு பாட்டு வரும்
மேகம் பொழிகிற மாமழைபோல் - மன
வேகத்துல ஒரு பாட்டு வரும்
காதலுக்கும் ஒரு பாட்டு வரும் - அது
கனவினிலும் வழி கேட்டு வரும்
வீரத்திலும் ஒரு பாட்டு வரும் - நல்ல
வெற்றிக்குப் பாதை போட்டு வரும்
(துட்டுக்கு) *31.05.2016*

## 95. புதுச்சேரி வாத்தியாரு

புதுப்புதுக் கவிதைகள்
சொல்லித் தந்தாரு
புதுச்சேரி வாத்தியாரு - எங்க
புதுச்சேரி வாத்தியாரு

எலக்கணம் படிச்ச புலவர்கள் எல்லாம்
தலக்கனத் தோட இருந்தத னாலே (புதுப்புது)

தளைதட்டிப் பாடவில்லே
தோள்தட்டிப் பாடினாரு
சீர்கெட்டுப் பாடவில்லே
சீர்திருத்தம் பேசினாரு (புதுப்புது)

பாட்டுக்குள் கனலை வச்சுப்
பாடினாரு பாட்டுச் சத்தம்
கேட்டதுமே துரைமா ரெல்லாம்
ஓடினாங்க எட்டுத் திக்கும் (புதுப்புது)

கண்ணனையும் காளியையும்
கண்முன்னே கொண்டு வந்து
என்னென்னமோ பாடினாரு
எங்க போயி தேடி னாரு (புதுப்புது)

பூணூலப் புறக்கணிச்சாரு புறக்கணிக்கப் பட்டவர்க்குப்
பூணூலப் போட்டுவிட்டாரு புதிராக வாழ்ந்துவிட்டாரு
வானூலும் பௌதிகமும் ஆனபல அறிவியலும்
தேனூறும் காவியமும் செந்தமிழில் செய்யென்றாரு
வாழ்நாளே போதாதப்பா வாத்தியாரு புகழச் சொல்ல
ஆனாலும் இவர்போல் இந்த உலகத்தில் எவரும் இல்லே

புதுப்புதுக் கவிதைகள்
சொல்லித் தந்தாரு
புதுச்சேரி வாத்தியாரு- எங்க
புதுச்சேரி வாத்தியாரு *15.06.2016*

## 96. கிட்டப்பாவோட கிண்கிணிக் குரல்!

[எஸ்.ஜி.கிட்டப்பா நினைவில் எழுதிய கவிதை]

எட்டப் போய் நின்னாலும் கேக்கும் குரல்
கிட்டப்பாவோட கிண்கிணிக் குரல்
பட்டுப் பாய் விரிச்சுப் படுக்கும் சுகம் - அவர்
பாட்டுக்குள் நமக்குக் கெடைக்கும் சுகம்

கொட்டகையில் கூட்டம் அலைமோத வச்சாரு
கூத்து மேடை கௌரவத்தில் கூட வச்சாரு
சுந்தராம்பா மனசுக்குள் எடம் புடிச்சாரு
சுதந்திரப் போராட்டத்துக்கும் பாட்டுத் தந்தாரு

ஓலச்சுருள் பிருகாவில் ஜாலம் பல காட்டுவாரு
உச்சஸ்தாயி சுரத்தக் கொஞ்சம் நீட்டுவாரு
காலத்தை வென்ற பாடல்கள் கேட்கக்
காலன் ஆசைப் பட்டவுடன் போயிட்டாரு

*26.06.2016*

## 97. காணாமப் போனாரா கொத்தனாரு?

கட்டிடத்தைக் கட்டிவச்ச கொத்தனாரு - எங்கும்
காணாம லாஓடிப் போனாரு - இந்தக்
கட்டிடமே அவராக ஆனாரு

சித்தனாரு பித்தனாரு
சீவனாரு கோனாரு
எத்தனையோ கேள்விகளக் கேக்க வச்சாரு
அத்தனையும் தானாகி அணுவாகி வானாகி
நானாகி நாடகத்தை நடத்துறாரு - நான்
அவராக மாற நாள்
கடத்துறாரு (கட்டிடத்தைக்)

பத்தருக்குத் தங்கமவர்
பாணருக்குப் பாட்டுமவர் - மண்
பானையத்தான் வனையறாரு குயவனாரு - என்
உள்ளோடும் வளியாகி உள்ளாகி வெளியாகி
உலகங்கள் செஞ்சுவிளை
யாடுறாரு - பல
உருவங்க ளாப்பிரிஞ்சு கூடுறாரு (கட்டிடத்தைக்)

ஆராரோ பாடாமத் தூங்க வைப்பாரு
ஆரோரோ வாயென்னை மாத்தி வைப்பாரு
அஞ்சு மாடி தாண்டி யாறாவது மாடியிலே
அவராகவே யென்னை
ஏத்தி வைப்பாரு - அந்த
விளையாட்டில் என்னையெப்போ
சேத்துக்குவாரு
(கட்டிடத்தைக்) *26.06.2016*

## 98. தோன்றாத் துணை

("தோன்றாத் துணை" என்றொரு வாட்ஸ் ஆப் குழுவில் நேற்றுப் பாடிப் பதிந்த பாடல்)

தோன்றாத் துணை இறைவன் - வந்து
தோன்றியதால் பல காவியங்கள் - அவன்
தோற்றமெல்லாம் எழிலோவியங்கள்
தோன்றாத் துணை இறைவன்

பெண்சுமந்தவனே மண்சுமந்து
பிரம்படி படவந்து தோன்றியதும்
ஜீவனெல்லாம் அடி வாங்கியதும் - அவன்
காருண்ய மேயதைத் தாங்கியதும்
ஞானானு பவத்தின் உச்சநிலை - உலகில்
அவனன்றி எதுவும் மிச்சமிலை

(தோன்றாத் துணை இறைவன்)

வான்மேகம் மாமழையா யிறங்கி
வருவது போலவன் வந்துதித்துக்
கான்போந் தரக்கரை வீட்டியதும்
கல்லையும் பெண்ணாய் மாற்றியதும்
தசமுகனுள் கணை பாய்ச்சியதும்
தர்மம் தழைக்கஅர சோச்சியதும்
காவிய மானது காகுத் தன்கதை
கற்றோர் புகழும் உயர்சரிதை
(தோன்றாத்)

துணையாய் நின்று தேரோட்டி
நீதியின் வெற்றியை நிலைநாட்டி
கீதை யென்றேயருள் வழிகாட்டி - ஸ்ரீ
கிருஷ்ணனாய் வந்தான் பரமேட்டி
தோன்றாத் துணையை உலகத்திலே
தோன்றச் செய்தது யார்சக்தி - வெறும்
ஊனுடம் பில்லை மானுடம் என்றுயிர்
ஊற்றிலி ருந்தெழுந் துருகும் பக்தி
(தோன்றாத்)

*27-06-2016*

## 99. எல்லாரும் மனுசங்கதான்

நாரோலு போயி நாடாரு கிட்ட
நாலு வார்த்தை கேட்டுப் புட்டேன்
தேனிக்குப் போயி தேவரப் பாத்து
சேதி கேட்டுத் திரும்பி விட்டேன்
ஈரோடு கவுண்டரு வூட்டுக்குப் போயி
ஊரு நடப்பை அலசிப் புட்டேன்
பண்ணுருட்டி போயி படையாச்சி கிட்டே
பழங்கதை எல்லாம் அளந்துபுட்டேன்
இத்தன பேரு ஏன் புள்ளே
சாதிப்பிரிவுகள் சரியில்லே
எல்லாரும் மனுசங்கதான் - சாதி
எங்கேயும் அகப்படலே

தேவ கோட்டை செட்டியார் வூட்டுல
தேன்பணியாரம் தந்தாங்க
பட்டண முதலி வீட்டுல வெள்ளித்
தட்டுல இட்டிலி வச்சாங்க
தஞ்சாவூரு ஐயராத்துல
சுடச் சுடக் காபி குடிச்சுக் கிட்டேன்
பறையரு வீட்டுப் பழைய சோத்துடன்
பச்சை வெங்காயம் கடிச்சுக் கிட்டேன்
இத்தன பேரு ஏன் புள்ளே
சாதிப்பிரிவுகள் சரியில்லே
எல்லாரும் மனுசங்கதான் - சாதி
எங்கேயும் அகப்படலே

இல்லாத சாதிய சொல்லால ஊதி
வளக்குறவன் ஒரு வ்யாபாரிதான்
எல்லாரும் ஒண்ணா சேந்துப்புட்டா அவன்
வ்யாபாரம் இல்லாத சோம்பேறிதான் - அந்த
வ்யாபாரி அரசியல் வாதியப்பா - அவன்
வளக்குற நெருப்பு சாதியப்பா

ஓட்டுக்குத் தானிந்தச் சாதியெல்லாம் - கோஷம்
போட்டுட்டுப் போவாங்க வீதியெல்லாம்
மாட்டுக்கும் குதிரைக்கும் மனுசனுக்கும்
சாதி சொல்லிப் பிரிப்பானே சதிகாரன்
நாட்டுக்கும் வீட்டுக்கும் நல்லதில்லே - தலை
யாட்டுற கூட்டத்துக்குப் புத்தியில்லே - நான்
பாட்டுக்கு ஏதேதோ பாடிப் புட்டேன் - வேற
வம்பு தும்பு வேணாண்ணே ஓடிப் புட்டேன்

நாரோலு தேனி ஈரோடெல்லாம் - அட
நாம வச்ச பேருங்கண்ணே
சாதிகள் எல்லாம் அது போலத்தான்
பேருக்குத்தான் கொஞ்சம் மாறுங்கண்ணே
எல்லாரும் ஒண்ணா சேருங்கண்ணே *01-07-2016*

## 100. எத்துணையும் பேதமில்லை

பள்ளி கொண்டதாலே பள்ளன் - திருடி
வெண்ணை உண்டதாலே கள்ளன்
முதலையைக் கொன்ற ஆதி
மூலமென்பதால் முதலி
இடையன் பக்தர் இதயங் களிலே
மலரும் முகமதியன்
கடவுளுக்கு ஜாதிமதம் இல்லை தம்பி- மனிதன்
கற்பித்துக் கொண்டதெல்லாம் மடமை தம்பி

ஆநிரையை மேய்த்தவன்தான் ஆயர்பாடியில் - சிலுவை
ஆணிகளை ஏற்றுக்கொண்டான் கல்வாரியில்
ப்ருந்தா வனத்திலவன் கான லோலனாம்
போதிமரத் தின்நிழலில் த்யான ரூபனாம்
கடவுளுக்கு ஜாதிமதம் இல்லை தம்பி - மனிதன்
கற்பித்துக் கொண்டதெல்லாம் மடமை தம்பி

காளி கரு மாரியவள் கன்னி மேரிடா - அவள்
ஆணுமில்லை பெண்ணுமில்லை அர்த்தநாரிடா
ரூமியவன் ஆடியதும் ருத்ர தாண்டவம்
பூமியிது சுழலும்பூ லோக தாண்டவம்
எத்துணையும் பேதமவன் கொள்வ தில்லையே - அன்பில்
ஒத்திருக்கும் உள்ளமவன் ஆடும் தில்லையே

*04.07.2016*

## 101. பலே ரங்கநாதா

படுக்க அரவணை பாயசம் அரவணை
பலே ரங்கநாதா
பக்கம் இலக்குமி பாதம் வருட
பக்தர்க் கிலக்குநீ தேவா
பலே ரங்கநாதா
ஹரே தேவதேவா

உடுக்கப்பீ தாம்பரம் உண்ணச்சித் ரான்னம்
உந்தியிலே ஒரு கமலம்
கொடுக்கத் திருவருள் - கொள்ளை
கொள்ள என்மனம்
எடுக்கத்தான் பல அவதாரம் - நீ
எடுக்கத்தான் பல அவதாரம்
பலே ரங்கநாதா
ஹரே தேவதேவா

சுரதா னியுடன் சரஸம் புரிய
வரதா வருவாய் லுங்கியிலே
திருமக ளோடு பரம பதத்தில்
திகழ்வா யேழுத் தங்கியிலே
பலே ரங்கநாதா
ஹரே தேவதேவா

பாற்கடல் நீங்கிப் பன்னிருவர் தமிழ்
நூற்கடல் மேவிய பரம்பொருளே - நீ
வைகுந் தலமே வைகுந்த மாக - இவ்
வையக மானது பேரெழிலே

துவரா பதிநீ மதுரா பதிநீ
ஸ்ரீபதி ஆரமுதே - தினம்
தவறா துனையென் மனக்கா விரியால்
தொழுவேன் அருட்கடலே

*12.07.2016*

## 102. முன்னோர்கள் யார்?

முன்னோர்கள் யாருன்னு கேக்குமுன்னே
முண்டாசுக் கவிசில வார்த்தைகளை
முன்னொரு நாள்சொல்லக் கேட்டீயளா
கேட்டாலும் யோசிக்க மாட்டீயளா

முன்னூறு வருஷம்முன் வாழ்ந்தவரா
மூவா யிரம்வருஷம் மூத்தவரா
வேதங்கள் பாடிய முனிவர்களா
வேதாந்தம் பேசிய யோகிகளா
முண்டாசுக் கவிசொன்ன வார்த்தைகளைக்
கேட்டீயளா கேக்க மாட்டீயளா

அம்பலத்தில் ஆடியவன் தென்புலத்தான்
ஆநிறையை மேய்ச்சவனோ வடபுலத்தான்
பௌதர்களும் சமணர்களும் பங்காளிங்க - வந்தே
மாதரம்னு சொன்னவங்க வங்காளிங்க
எல்லாரு மிங்கே சகோதரராம்
பொல்லாதார் இல்லாத பூமியிதாம்
முண்டாசுக் கவிசொன்ன வார்த்தைகளைக்
கேட்டீயளா கேக்க மாட்டீயளா

சொந்தபுத்தி இல்லாம துள்ளாதீங்க
சோம்பேறி யாக்காலம் தள்ளாதீங்க - சும்மா
அந்தக்காலப் பெருமைகளைப் பொளக்காதீங்க
அடிமைகளாய் ஆனதையும் மறக்காதீங்க
எந்நாளும் நன்னாளா வாழணுங்க - நாம்
எல்லாரு மேயின்னும் மாறணுங்க
அன்புக்கே முன்னுரிமை தந்துப்புட்டா
அதுபோதும் எல்லாரும் நல்லவங்க

முன்னோர்கள் யாருன்னு கேக்குமுன்னே
முண்டாசுக் கவிசில வார்த்தைகளை
முன்னொரு நாள்சொல்லக் கேட்டீயளா
கேட்டாலும் யோசிக்க மாட்டீயளா

*15.07.2016*

## 103. கண்ணுல ஒத்திக்கணும்

நல்ல பாட்டு சொல்லக் கேட்டா
கண்ணுல ஒத்திக்கணும் - இல்லே
நெஞ்சுல பத்திக்கணும்

சொல்லச் சொல்ல சொல்லும் போதே
சொல்லெலாம் தித்திக்கணும் - இந்தச்
சூச்சுமம் கத்துக்கணும்
சொல்லைத் தாண்டிச் சொல்ல வந்த
பொருளத் தாண்டிப் போகணும்
சொல்லில் லாத அனுபவத்தில்
மெல்ல மெல்ல மூழ்கணும்
(நல்ல பாட்டு)

வில்ல விட்டுப் பாயும் அம்பு
வெட்ட வெளியில் வெளிச்சப் புள்ளி
கரையில் வந்து மோதும் அலைகள்
மொழி பிரிந்து மலரும் பாட்டு
சொன்னவன் வெறும் வில்லுதான் - வந்து
சுட்ட தோஒரு சொல்லுதான்
வெட்ட வெளியில் திசைக ளாக
நீயும் நானும் விரியலாம் - இது
விடியும் போது புரியலாம்
(நல்ல பாட்டு) *24.07.2016*

## 104. நான் அந்தணன்

அந்தணன் நான் அந்தணன் செந்
தண்மை பூண்டு வந்தனன் - முப்
பாலெனும் பூ ணூலணிந்து
ப்ரும்ம மேகுறி கொண்டனன்

சிந்தையில் செந் தழல்வளர்த்துச் சங்
கீத யாகம் செய்பவன்
ஆயுளே நெய் யாக அந்தத்
தழலில் என்னைப் பெய்பவன்
(அந்தணன்)

எவ்வுயிர்க்கும் பேதமின்றி
எங்கும் ஒன்று காண்பவன்
வானம் பூமி வர்ண ஜாலக்
கோலம் நின்று காண்பவன்
(அந்தணன்)

சொந்த பந்தம் உள்ள போதும்
தனித்து வாழக் கற்றவன்
தனிமை என்ற ஊற்ற ளாவிக்
கவிதைச் செல்வம் பெற்றவன்
(அந்தணன்)

*25-07-2016*

## 105. கண்ணில் வளரும் சித்திரம்போல்...

கண்ணில் வளரும் சித்திரம்போல் - ஒரு
கனவில் வளரும் லட்சியம் போல்
பண்ணில் வளரும் கவிதை போல் - என்
நெஞ்சில் படரும் காதலடி
இதைக்
காதலென்றாலும் பக்தியென்றாலும் பேதம் இல்லையடி - இந்தக்
காதலில் லாமல் இவ்வுலகில் ஒரு
வேதம் இல்லையடி
(கண்ணில்)

மேகம் பொழியும் துளிகளெல்லாம் - உன்
பாதச் சதங்கை மணிகளடி
மலர் செடி கொடிகள் அத்தனையும் - உன்னை
அலங்கரிக்கும் எழில் அணிகளடி
(கண்ணில்)

யாதுமாகி நிற்பதனால் - எப்
போதும் என்னுள் இருப்பவளே - நான்
பாடும் பாடல் யாவிலுமே
நாயகி யாயபி
நயிப்பவளே
(கண்ணில்)

*30-07-2016*

## 106. தமிழ்க்குமரி ஆண்டாள்

என்னென்ன தந்தாலும் வேண்டாள் - எங்கள்
இனிய தமிழ்க்குமரி ஆண்டாள்

பொன்னும் பொருளும் புகழும் புறந்தள்ளிக்
கண்ணனின் மார்பில் படர்வதை அன்றிவே
றென்னென்ன தந்தாலும் வேண்டாள் - எங்கள்
இனிய தமிழ்க்குமரி ஆண்டாள்

வில்லிபுத் தூர்பவள மல்லி
விஷ்ணுசித் தர்வளர்த்த செல்வி
சொல்லில்நீ ராட்டினாள் சொல்மாலை சூட்டினாள்
சொல்லாக வேவாழ்ந்து காட்டினாள் - யாரும்
சொல்லாத வண்ணம்தன் பாட்டினால்
(என்னென்ன)

மன்னாதி மன்னர்களும் வேறெந்த மானுடரும்
ஒன்னா தெனத்தான் ஒதுக்கினாள் - ரங்க
மன்னாரை நெஞ்சில் பதுக்கினாள்
கண்ணாலம் கட்டுவதும் கண்ணனையே என்றுதான்
கண்டகனா விண்டுரைத்த பூவையாம் - கவிச்
செண்டுகளால் ஆனதிருப் பாவையாம்
(என்னென்ன)

*05.08.2016*

## 107. நாதசுர மன்னன்

**(இன்று முகநூலில், நாதசுரச் சக்கரவர்த்தி ராஜரத்தினம் பிள்ளை பற்றிக் கொத்தமங்கலம் சுப்பு ஆனந்த விகடனில் எழுதிய கவிதையைக் கானடா பசுபதி பதிவு செய்திருந்தார். படித்தேன், ரசித்தேன், பாடினேன்:)**

நாதசுர மன்னனென்று நாடெல்லாம் புகழும்ராச ரத்தினம் - அவர்
நாதத்துல மயங்கியொரு நல்லபாடல் தந்தகொத்த மங்கலம்

சீவாளி சத்தத்துக்கே சிந்தைபறி கொடுத்துப்புட்டுப்
பூவாளித் தண்ணீராப் பொலபொலன்னு பொழிஞ்சாரே கவிதை -
அவர்
பூமாலை போடாமல் பாமாலை சூட்டியதால்
நாளாகிப் போனாலும் வாடாமல் ஜொலிக்கிறதே கவிதை

கங்கைநதி வத்தாது கவிதைகூட அப்படித்தான்
பொங்கியலை புரண்டுவரும் பூமியெலாம் செழிக்கநடை போடுமே
எங்கசுப்பு பாட்டுக்குள் என்னென்ன ஜாலங்கள்
ஏலக்கா வாசனைபோல் எங்கெங்கும் பரவுமவர் கீதமே

*24.08.2016*

## 108. ஜதி பல்லக்கு

பல்லக்குத் தூக்குங்கடா - ஜதி
பல்லக்குத் தூக்குங்கடா

சொல்லுக்குள் ளேகன லேற்றிவச் சுச்சின்ன
புல்லுக்கும் பூண்டுக்கும் பூமண்ட லத்துக்கும்
நல்லது செய்யணும் தெய்வமெ
னச்சொல்லி
மல்லுக்கு நின்னானே மாவீரன் - அவனுக்குப்

பல்லக்குத் தூக்குங்கடா - ஜதி
பல்லக்குத் தூக்குங்கடா

கயித்துக்குள் ளேகூடக் காதல் இருக்குன்னு
கண்டு புடிச்சவன் கூத்து நடிச்சவன்
பயித்திய மாயந்தக் கண்ணனி டம்நெஞ்சு
வைத்துக் கிடந்தவன் வானை அளந்தவன்

பல்லக்குத் தூக்குங்கடா - ஜதி
பல்லக்குத் தூக்குங்கடா

நெத்தியி லேயவ பொட்டுவச்சா - ஒரு
சிட்டிகைத் தீயதில் தொட்டுவச்சா - இனிப்
பத்தி எரியும்ப ராசக்தி வச்சதீ
எத்திக்கும் பாரதி தித்திக்கும் பாரதி

பல்லக்குத் தூக்குங்கடா - ஜதி
பல்லக்குத் தூக்குங்கடா

*11.12.2016*

## 109. இன்றிந்தக் கணமே

இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே
நேற்றென்பது காற்றோடு
நாளைவெறும் எதிர்பார்ப்பு
இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே

கொல்லாமை யோடுகள் ளுண்ணாமை பிறன்மனை
எண்ணாமை எனத்தமிழில் முதற்குரல் தந்தவன்
சொல்லாத தேயில்லை சோதித்துப் பார்மனமே
எந்நாளும் அவ்வழியில் செல்வாயே நீதினமே

இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே

மென்மை நிதானம் மிரளாத நேர்மை
உண்மை கலைஞானம் உற்சாகம் சீர்மை
பன்மை இருந்தாலும் ஒருமை உடன்பணிவு
பயிலும் ஒருதுணிவு பெறவேண்டு மேமனது

இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே

ஒவ்வோர் உயிருள்ளும் ஒளியாய்ச் சுடர்கின்றான்
ஒவ்வொரு பொருளிலும் இசையாய் ஒலிக்கின்றான் - இறை
உணர்வோடு வாழும் முறையிங்கு வேண்டும்
உதவாத வழக்கங்கள் புறம்தள்ள வேண்டும்

இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே
நேற்றென்பது காற்றோடு
நாளைவெறும் எதிர்பார்ப்பு
இன்றிந்தக் கணமே என்றென்றும் நிஜமே

*14.01.2017*

## 110. எல்லாருக்கும் நான் நண்பனுங்க!

எல்லாருக்கும் நான் நண்பனுங்க - நாம
எல்லாரும் நட்போட வாழணுங்க

சொல்லுற கருத்துல மோதிக்கலாம்
சொல்லாலே யாருக்கும் போதிக்கலாம் - ஆனா
எல்லாரும் இங்கே நண்பருங்க - நாம
எப்போதும் நட்போட வாழணுங்க

மாற்றம் ஒரேநாளில் வாராதையா - நியாயம்
மனசுக்குள் சீக்கிரம் சேராதையா
சாட்டையடி யால்நீதி மலராதையா
சட்டத்தி னாலுலகம் திருந்தாதையா
ஆற்றலுள் ளோர்மனம் விரிவாகணும்
அருளுக்கே இடமாக அறிவாகணும்
அரசியல் நுழையாம பாத்துக்கணும்
அன்போடு வருவோரைச் சேத்துக்கணும்

(எல்லாரும் இங்கே நண்பருங்க)

கருணைக்கு நிகரான வீரமில்லே - வெத்துக்
கைகலப்பு வாய்ச்சவடால் லாபமில்லே
வருகின்ற தலைமுறைக்கு எடுத்துச் சொல்வோம்
வரலாற்றுப் பிழைகளை உணரச் செய்வோம்
தெருவுக்குத் தெரு இதைப் பாடிடுவேன்
தேசத்தில் நல்லெண்ணம் தூவிடுவேன்
கருணைக்குப் பணியாத மனுசனுண்டா
கவிதைக்கு இரங்காத மனசுமுண்டா

எல்லாரும் இங்கே நண்பருங்க - நாம
எப்போதும் நட்போட வாழணுங்க
நல்லாரும் பொல்லாரும் நாம்தானுங்க
நாட்டாமை வழக்கெல்லாம் இனியேனுங்க
எல்லாரும் இங்கே நண்பருங்க - நாம
எப்போதும் நட்போட வாழணுங்க

*16-01-2017*

## 111. அரசியல் கூத்து

கூத்தாடி அரசியலாம்
கோமாளி நடிகர்களாம்
ஆத்தாடி இவுங்களையா
ஓட்டுப் போட்டு அனுப்பி வச்சோம்

யாராள வேணுமினு
மக்கள் முடிவு செய்யணுமா
ஏராள மாப் பணத்தை
எறைக்கிறவன் ஆளணுமா
(கூத்தாடி அரசியலாம்)

மக்களாட்சி மக்களாட்சி
மானங்கெட்ட கந்தலாச்சு
அக்கிரமக் கூட்டம் நம்மை
ஆளுவதே பழகிப் போச்சு
(கூத்தாடி அரசியலாம்)

*08.02.2017*

## 112. விடுதி ஆட்டம்

விடுதி யாட்டம் முடிஞ்சு போச்சு
விடியப் போகுது மச்சான் - உன்னை
ரெண்டு வாரம் அடைச்சு வச்சுப்
பூட்டு போட்டு வச்சான்

சடுதியா நீ சட்டை வேட்டி
மாட்டிக்கிட்டு முன்னே - சட்ட
சபைக்குப் போயுன் தன்மா னத்தை
மீட்க வேணும் அண்ணே

மக்களுக்குத் துரோகம் செஞ்சா
மன்னிக்கவே மாட்டோம் - அட
பணத்துக் காகச் சோரம் போனா - உன்
பக்கம் திரும்ப மாட்டோம்

மானத்தையே அட மானம் வச்சு
வாழ வேணாம் மாமா- அவ
மானப்பட்டு அசிங்கப் பட்டு
ஓடி ஒளிய லாமா

ஊரு சனம் கூடி வந்து
உரக்கக் கேள்வி கேக்கும் - ஒன்
புள்ள குட்டி வாழணும் - தர்மம்
தள்ளி நின்னு பாக்கும்

*17.02.2017*

## 113. நிலா, நிலா

நிலா நிலா எங்கே உலா

நீல வானில் தவழ்ந்து கொண்டே
மேக மெல்லாம் கடந்து வந்தே
நெஞ்சுக் குள்ளே நீந்துகின்றாய்
நினைவுச் சுடர்கள் ஏந்துகின்றாய்
மெல்ல மெல்ல இன்னும் உள்ளே
செல்வ தெங்கே செல்ல நிலாவே

நிலா நிலா எங்கே உலா

நேற்றும் இன்றும் நீயும் நானும்
காற்று வாங்கக் கடல் விளிம்பில்
கைகோத்து நடப்பதற்குக்
கற்றுத் தந்த கவிஞன் யாரோ

நிலா நிலா எங்கே உலா

தொட்டுப் பார்க்க முடியாத
தொலைவிடத்திலா நீ உள்ளாய்
கிட்ட வந்து கிறக்கம் தந்து
கிறுகிறுக்க வைக்கும் பிள்ளாய்

நிலா நிலா எங்கே உலா

*09.03.2017*

# 114. தமிழ்நாடு, தமிழ்நாடாம்

தமிழ்நாடு தமிழ் நாடாம்
சங்கம் வளர்த்த தமிழ்நாடாம்
தமிழ்நாடு தமிழ் நாடாம்
பண்பாட்டுக்கே தாய் வீடாம் (தமிழ்நாடு)

ஊரெல்லாம் என் ஊரென்றான்
யாவருமே தன் உறவென்றான்
பாரெல்லாம் அவன் வாணிபமாம்
கடலெல்லாம் அவன் தோணிகளாம் (தமிழ்நாடு)

தேர்க்காலில் கன்றுவிழத் தேடிவந்த பசுவுக்கும்
நீதிதரத் தன்மகனைக் கொன்றதொரு மன்னவனாம்
முல்லைக்குத் தேரைத் தந்தான்
மயிலுக்குப் போர்வை தந்தான்
எல்லையிலா அருள்வழியே
தன்வழியாய் ஏற்றுக் கொண்டான் (தமிழ்நாடு)

கொல்லாமை பொய்யாமை இரு
கண்களென மதித்தவன் தான்
கல்லாமை இழிந்ததென்றான்
கள்களவு கொடுமை என்றான்
சாதிகளே இல்லை என்றான்
சம்மதம்எம் மதமும் என்றான்
தனியொருவன் பசிக்கக் கண்டால்
ஜகத்தையே அழிப்போம் என்றான் (தமிழ்நாடு)

போனதெங்கே தமிழ்நாடு
புலம்புகிறேன் தேடுகிறேன்
கடல்கொண்டு போனதுவோ
கனவாக ஆனதுவோ
ஊடகத்தில் தேர்தலெனும்
நாடகத்தில் மேடைகளில்
எங்கேயும் காணவில்லை
ஏட்டில் மட்டும் வாழ்கிறதே
(தமிழ்நாடு தமிழ்நாடாம்)
(ஓ! தமிழ்நாடு தமிழ் நாடாம்)

*31.03.2017*

## 115. உறவைச் சொல்லி கேக்காதே ஓட்டு

உறவைச் சொல்லிக் கேக்காதே ஓட்டு - உன்
திறமை யென்ன திட்டமென்ன காட்டு
செத்தவங்க பேரையெல்லாம்
விட்டுத் தள்ளு - நீ
செய்யப் போகும் காரியத்தை
மட்டுஞ் சொல்லு (உறவை)

சின்னங் காட்டி
வண்ணங் காட்டி
சினிமாக் காரன்
மொவத்தக் காட்டி
ஓட்டுக் கேட்ட காலம் - மலை
யேறிப் போச்சு
நோட்டைக் காட்டிப்
பொருளைக் காட்டி
ஆட்டு மந்தைக்
கூட்டம் கூட்டி
ஆண்டகதை கானல் நீர்
ஆகிப் போச்சு (உறவை)

வேலை தேடி வந்துப் புட்டு
சேவை செய்ய வந்த தாகப்
போலி வேஷம் போட்ட தெல்லாம்
கலைஞ்சு போச்சு
லஞ்சமுனு ஆயிரங்கள்
அலட்சியமா வீசிப்புட்டு
லட்சங்களைக் குவிச்ச காலம்
முடிஞ்சு போச்சு (உறவை)

கூட்டமாகக் கூடிவந்து
லாபம் இல்லே - நீ
ஆட்டம் பாட்டம் போடுவதால்
பயனே இல்லே - நம்ம
பாட்டன் போட்ட தப்புக் கணக்குப்
பழைய கதை - மக்கள்
நெஞ்செல்லாம் தூவிப்புட்டோம்
புதிய வெதை (உறவை)

*03-04-2017*

## 116. எங்கே போனீங்க, இந்தியரே!

ஆரியராம் திராவிடராம்
தமிழர்களாம் தெலுங்கர்களாம்
சூரியனாம் தாமரையாம்
பம்பரமாம் மாம்பழமாம்
ஜாதி மதம் கட்சி மொழி
பேதம் எத்தனை - இதில்
காதல் மோதல் சாதல் என்ற
கதைகள் எத்தனை
இந்தியரே இந்தியரே எங்கே போனீங்க
எப்படியோ சுக்குநூறா ஒடைஞ்சு போனீங்க

நதியை வச்சு நாடகமா
மொழியை வச்சுப் பூசல்களா
நம்மகவி பாரதியை மறந்துப்புட்டீங்க - அவன்
பதிய வச்ச எண்ணங்களை
பாடி வச்ச ஒத்துமையை
பாதி வழி வந்ததுமே தொலச்சுப்புட்டீங்க
இந்தியரே இந்தியரே எங்கே போனீங்க - யாரு
வந்த போதும் திருந்தாத
மந்தையானீங்க

தேசத்தை வணங்குவதே
தேவையில்லை என்று சொல்லி
நாசத்தை ஒருகூட்டம் வரவேற்குது
தெய்வமில்லை என்று சொல்லித்
தெருத்தெருவா எழுதிவச்சு
தர்மத்தையே ஒரு கூட்டம்
வெலை பேசுது
இந்தியரே இந்தியரே எங்கே போனீங்க - தேச
மந்திரத்தைக் கூட நீங்க
மறுத்துப்புட்டீங்க

பண்பாட்டின் பேராலே
பழமையிலே மூழ்கிப் போய்ப்
புதுமைகளைத் தடுக்குமொரு கூட்டமிங்கே
கண்மூடித் தனமாகக் கணக்கற்ற கொடுமைகளைக்
கட்டவிழ வைக்குமொரு கூட்டமிங்கே
இந்தியரே இந்தியரே எங்கே போனீங்க - உங்க
சொந்த புத்தி சுதந்திரத்தை
அடகு வச்சீங்க *06.04.2017*

## 117. ஒருவரை ஒருவர்

நாம்
ஒருவரை ஒருவர் நிந்திப்போமென
ஆங்கிலேயனும் சொன்னான்
இடது வலது பிரிந்தது - அட
பணமே லட்சியம் இந்நாள்
ஏழையென்று பேசு - கொஞ்சம்
இலவசங்கள் வீசு
தேர்தல் மேடை யேறி - வார்த்தை
வர்ண ஜாலம் பூசு

நாம் அளிக்கும் ஓட்டு - அதை
வாங்கி வளர்ந்தவன் தான் - இன்று
நம்மை மதிப்பதில்லை - நாம்
நெஞ்சு கொதிப்பதில்லை
தேர்தல் வந்த போது - நம்மைத்
தேடி வந்தவன் தான்
கோடி கோடி சேர்த்து - இன்று
கோட்டை யாளுகின்றான்

ராமர் கோயில் என்பான் - ரம்ஜான்
தொப்பி அணிந்து கொள்வான் - இன
மானம் என்று பேசி - நம்மை
மோத விட்டுப் பார்ப்பான்
போன காலம் போச்சு - இவன்
வேஷம் கலைய லாச்சு
விழித்துக் கொண்டு விட்டோம் - இனிமேல்
வீழ்ச்சி அடைய மாட்டோம்

நாம்
ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டோம் - ஒன்
றாக இணைந்து செல்வோம் - நம்
தடைகளெல்லாம் உடைந்தன - தலை
நிமிர்வோம் இன்றே வெல்வோம்

*08.04.2017*

## 118. மாடி மேல மாடி கட்டி

மாடி மேல மாடி கட்டிக்
கோடி கோடி சேத்து வைச்ச
பச்சோந்தி
வரான் இதோ வரான் ரெண்டு கையேந்தி
ஓட்டு கேட்டு நோட்டை நீட்டி
ஓசி என்ற ஆசை காட்டி
வெலபேசி
வரான் இதோ வரான் ஓட்டு வியாபாரி
மந்திரிங்க ஓட வேணும்
மக்கள் ஒண்ணா கூட வேணும்

லஞ்சமும் வஞ்சமும் கொஞ்சமும் இல்லாத
லட்சிய மாநிலமா
மாறணும் தமிழகம்
திட்டங்க ளும்நிறை
வேறணும் சீக்கிரமா
காசு வாங்கி ஓட்டுப் போடும்
நாச வேலை ஓடிப் போகும்
கைகுவிச்சுக் கேட்டுக்கறேன்
செஞ்சு காட்டுங்க

மந்திரிங்க ஓட வேணும்
மக்கள் ஒண்ணா கூட வேணும்

உள்ளவ னில்எவன் நல்லவன் என்று நம்
உள்ளங்கள் சொல்லட்டுமே
உண்மையும் நேர்மையும்
தைரிய மாக
ஊழலை வெல்லட்டுமே
காசுக் கில்லை ஓட்டு நம்ம
கௌரவத்தை மீட்டு நல்ல
காலம் வர வேணும் என்று
ஓட்டுப் போடுவோம்

மந்திரிங்க ஓட வேணும்
மக்கள் ஒண்ணா கூட வேணும்

*09.04.2017*

## 119. விலை போக மாட்டோம்

விலை போக மாட்டோம்
வீரர்கள் நாம் - வாக்கை
வீணாக்க மாட்டோம்
வித்தகர் நாம்
மந்தைகள் நாமென்று யார் சொன்னது
மக்களே நம் வாக்குப் பொன் போன்றது

மதுக்கடை நடத்தும் வியாபாரியா வந்து
மக்களை ஆள்வது
பொதுப்பணம் சுருட்டிய
பேர்வழியா இங்கு
ஒப்பாரி வைப்பது
ஐம்பது வருடம் தமிழ்நாட்டை
அடகு வைத்தது அவமானம்
இன்றே நமக்கு விடிவெள்ளி
விழித்துக் கொண்டது தன்மானம்

தலையில் ஏறி மிதித்தவரைத்
தலைவர் என்று புகழ்ந்தோமே
திரையில் சண்டை போட்டவரைத்
தீரர் என்று மகிழ்ந்தோமே
கரைவேட் டிகளின் காலடியில்
காவல் துறையை வைத்தோமே
ஜாதிக் கொன்றாய்க் கட்சியமைத்துச்
சமத்துவம் என்று சொன்னோமே

இன்று புதிதாய்ப் பிறந்து விட்டோம்
சென்ற தெல்லாம் மறந்து விட்டோம்
நன்றே நடக்கும் நம்பிடுவோம்
இறைவனை மட்டும் கும்பிடுவோம்

*09.04.2017*

## 120. உண்மையைப் பாடுகிறேன்

உண்மையைச் சொல்லப் பாடவில்லை - நான்
உண்மையைப் பாடுகிறேன் - வெளியே
உள்ளதைச் சொல்லப் பாடவில்லை - உள்
ஊற்றில்நீ ராடுகிறேன்

ஒவ்வொரு புல்லிலும் பனித் துளியாய் - என்
ஒவ்வொரு சொல்லும் அமர்ந்திடுமே
விண்வெளியெங்கும் மேகங்களாய் - என்
பாடல்கள் எல்லாம் மிதந்திடுமே (உண்மையை)

வண்ணத்துப் பூச்சியின் சிறகுகளாய்ச் - சில
வார்த்தைகள் படபடக்கும்
மின்னல்களாய்ச் சில கனல் தெறிக்கும் - மீட்டும்
வீணையின் நாதம் எதிரொலிக்கும் (உண்மையை)

காலத்துக்கே - கடி
வாளம் அமைக்கும்
கனவுக்கும் நினைவுக்கும்
பாலம் அமைக்கும்
கோலத்துக் கேற்பக்
குரல்கொடுக்கும் - ஒரு
கூட்டுக்குள் அடங்க
மறுத்துவிடும் (உண்மையை)

*14.07.2017*

## 121. பனிச்சரிவில் சிவப்பு ரத்தம்..!

இமய மலையிலேன் துப்பாக்கிச் சத்தம்
பனிச்சரிவில் ஏன் சிவப்பு ரத்தம்
யாருக்காக இந்த நரபலி
போருக்குத் தானா அறிகுறி (இமய)

மாண்டு போகும் வீரர்களாலே
எவருக்குத் தானிங்கு லாபம்
ஒருவரை ஒருவர் சாகடிப்பது
எந்த தர்மத்தில் சேரும் (இமய)

ஆயுதக் காரன் பையை நிரப்ப
அப்பாவிகள் பலியாவதா
ஆட்சியில் இருப்போர் ஆணவப் பேச்சால்
ஆயிரம் வீரர்கள் மாள்வதா (இமய)

மதத்தின் பேரால் மனிதன் இறந்தால்
மதமும் எதற்கு? தூக்கியெறி
மனிதனை மனிதன் மதித்து வாழும்
மகத்துவமே யிங்(கு) உண்மை நெறி (இமய)

*30.04.2017*

## 122. பொறுமைக்கும் எல்லையுண்டு

நாட்டுக்கு மட்டுமில்லை
பொறுமைக்கும் எல்லையுண்டு
நரபலி தொடர்ந்தால் சும்மா
இருப்போமா பார்த்துக் கொண்டு - சும்மா
இருப்போமா பார்த்துக் கொண்டு

வீரர்க ளாயிவர்கள்
வெறிநாய்கள் கூட்டமன்றோ
பக்கத்து நாடு செய்யும்
பாதகக் கொடுமையன்றோ - மா
பாதகக் கொடுமையன்றோ

அமைதியே வேண்டு கின்றோம்
அச்சத்தி னாலா இல்லை
இமைப்பதில் கூட தர்மம்
இழையோடும் மரபினாலே
இனியுமோர் முறை நடந்தால்
நடப்பதே வேறு வந்து
மனிதரை வேட்டை யாடும்
நாய்க்கூட்டம் சிதறி யோடும் *01.05.2017*

## 123. நம்ம நாடு

வெள்ளை மாடு கருப்பு மாடு
வேறுபாடு தேவையில்லே
எல்லா மாடும் நல்ல மாடு
நம்ம மாடு நம்ம வீடு
இந்த தேசம் நம்ம நாடுடா - தின்னும்
இறைச்சிக்காகப் பிரிஞ்சி போவதா (வெள்ளை மாடு)

வேகாத வெய்யிலுல பாகாக உருகிக்கிட்டு
விவசாயி களத்துமேட்டில் வாடுறான் - வீட்டில்
சோத்துக்காகக் கலயமெல்லாம் தேடுறான்
வேண்டாத கதைபேசி வெவகாரம் உருவாக்கி
வெத்துவேட்டு அரசியலு
நடத்துறோம் - இதில்
குத்துவெட்டு அடிதடின்னு
குதிக்கிறோம் (வெள்ளை மாடு)

காசு வாங்கி ஓட்டுப் போடும்
வேசத்தனம் மாற வில்லே
சூசை ஜமால் செல்லப்பா சேரவில்லே - நம்ம
பழைய பகை இன்று வரை தீரவில்லே
வாழுங் காலம் சிறிசு - போடும்
வழக்கு ரொம்பப் பெரிசு - நாக்கு
இருப்பதாலே ஏதேதோ பேசிப்புட்டோம்
நாளெல்லாம் வீணாக்கி மாட்டிக் கிட்டோம்
(வெள்ளை மாடு)

இந்துவாக முஸ்லீமாக
தேவராக தலித்தாக
யோசிக்கிற வழக்கத்தை விட்டுடணும்
மனுசனாக மட்டும் வாழக் கத்துக்கணும்
பொல்லாங்கு பேசறதை நிறுத்திக்கணும் - மீறிப்
பேசுறவன் பேச்சயெல்லாம் பொறுத்துக்கணும்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற
வேதத்தை எல்லாரும் ஒத்துக்கணும் (வெள்ளை மாடு)

*01.05.2017*

## 124. நானா பாடுகிறேன்!

நானா பாடுகிறேன் - என்
நாவை அசைத்தொரு
நர்த்தகியாய் நீ
நாடகம் ஆடுகிறாய் - அதில்சில
பாடல்கள் பாடுகிறாய்

மலைமுகட்டில் - மழை
முகிலென வந்தமர்ந்தாய்
மலர்விளிம்பில் - ஒரு
வண்டென இசைபொழிந்தாய்
உலகம் முழுதும் ஒவ்வோர் அணுவும்
உந்தன் பிம்பமன்றோ - பாடல்
ஒவ்வொன்றும் உன் சொந்தமன்றோ - எழும்
ஓசையெலாம் உன் சந்தமன்றோ
(நானா பாடுகிறேன்)

தேனா மலரைத் தேடியது -- விரி
வானா ஒளியை நாடியது
நானா நீயா பாடியது - சின்ன
துளியா கடலாய் மாறியது
(நானா பாடுகிறேன்)

வில்லும் நீயே கணைநீயே
சொல்லும் நீயே சுனைநீயே -
என்னுள் அமுதாய் ஊற்றெடுத்தே
- தினம்
பாடவைத் தாயே எனைநீயே
- தினம்
பாடவை தாயே எனைநீயே
(நானா பாடுகிறேன்)

*08.05.2017*

## 125. நடுத்தெருவில் பாடுகிறேன்

நமக்கெதுக்கு வம்பு தும்புனு நாலுகாதம் ஓடுகிற
நல்லவங்க மத்தியில்நான் தகர டப்பா
தட்டித் தட்டித் தாளமிட்டு
தர்ம நியாயம் பேசிக்கிட்டு
நடுத்தெருவில் பாடுகிறேன் எக்குத் தப்பா - என்
பாட்டன் வச்ச
நெருப்பின்னும்
அணைஞ்சு போகலே - பணக்
கோட்டையாளும் கூட்டமின்னும்
கலைஞ்சு போகலே

எலே
கந்தசாமி கருப்புசாமி
முத்துப்பேச்சி சிவப்பியாச்சி
கூடவந்து தமுக்கடிச்சுப்
பாட வேணும் -நான்
வெந்தசோறு திங்குறது
மெய்யின்னா ஊருசனம்
மெச்சிநம்ம கூடநின்னு
ஆட வேணும்
(நமக்கெதுக்கு)

பாட்டுச் சத்தம் கேட்டதுமே
வேட்டுச் சத்தம் கேட்டது போல்
கொள்ளைக் கூட்டம் குலைநடுங்கி
ஓட வேணும்
ஊழல் செஞ்ச பேர்வழிங்க
ஊரை ஏப்பம் விட்டவங்க
ஒட்டு மொத்தமா கம்பி
எண்ண வேணும்
(நமக்கெதுக்கு)

ஏ
காமாச்சி மீனாச்சி
சீமாச்சு சுப்பிரமணி
தெருவெல்லாம் நம்முழக்கம்
கேக்க வேணும் - நாம
ஒண்ணு கூடித் தேரிழுத்தா
வருவாளே கண்ணாத்தா
காளி திரி சூலி மகமாயி தாயி - அதக்
கண்டதுமே ஓடிவிடும் ஊழல் பேயி
(நமக்கெதுக்கு)

*14.05.2017*

## 126. தெருப்பாடகன்

யாசகம் கேட்டுவரும் தெருப்பாடகன் - நான்
யாதொரு பந்தமும் இல்லாதவன்

தேசமும் தெய்வமும் ஒன்றாகவும் - மக்கள்
யாவரும் மன்னர்கள் என்றாகவும்
யாசகம் கேட்டுவரும் தெருப்பாடகன் - நான்
யாதொரு பந்தமும் இல்லாதவன்

நேசமுடன் என்றும் வாழ்வதற்கே
நிம்மதி யேநம்மைச்
சூழ்வதற்கே
நேரமெல்லாம் நான் பாடுகிறேன் - அன்பு
நெஞ்சமொன்றே நான் தேடுகிறேன் - நான்
யாசகம் கேட்டுவரும்
தெருப்பாடகன் - நான்
தெருப்பாடகன்

யாரையும் பாடிப் புகழ்வதில்லை - நான்
யாருட னும்பகை கொள்வதில்லை
ஏருழும் விவசாயி
ஆலையில் தொழிலாளி
மூலையில் அமர்ந்தபடிச்
சிரிக்கும் மூதாட்டி
பாலகர் பெண்களுடன்
நல்லவர் யாவருமே
நான்வணங் கும்தெய்வ
வடிவங்களே - என்னைப்
பாடவைக்கும் புது
வள்ளல்களே - நான்
யாசகம் கேட்டுவரும்
தெருப்பாடகன்

*17-05-2017*

## 127. நம்ம தேசங்க

கஷ்மீரு பள்ளத்தாக்கு நம்ம தேசங்க
அசாம்
அருணாச்சலப் பிரதேசம் நம்ம ஊருங்க
பிரிக்கச் சொல்லிக் கூச்சலிடும் நாசக்காரங்க - அவுங்க
பின்னாலே இருப்பவங்க தேசத்துரோகிங்க

இந்து முஸ்லிம் கிரித்தவனும்
இந்தியன்தாங்க
இந்தி தெலுங்கு மலையாளம்
நம்ம பாஷைங்க
சிந்து பஞ்சாப் வங்காளத்தைத்
துண்டு போட்டவன் - நம்ம
வீரர்களைத் துண்டாக்கிக்
கொண்டு போட்டவன்
தீட்டுகிறான் சதித்திட்டம் ஏமாறாதீங்க
தீர்மானமா நில்லுங்க - இது
ஒரே நாடுங்க

தமிழ் நாட்டைக் கூடப் பேய்
புடிச்சாச்சுங்க
தடுக்காம வுட்டா தலை
விரிச்சாடுங்க
இந்தியாவ மண்ணென்று நெனக்காதீங்க
தாய்நாடே தெய்வம் அதை மறக்காதீங்க
கஷ்மீரு பள்ளத்தாக்கு நம்ம தேசங்க

தேசப்பிதா கனவெல்லாம் சிதறிடலாமா - சர்தார்
பட்டேல்தந்த வீரத்தை உதறிடலாமா
பாரதியின் வரிகளுக்கு உயிரில்லையா - நம்
கண்ணீரில் வளர்ந்ததிந்தப் பயிரில்லையா

கஷ்மீரு பள்ளத்தாக்கு நம்ம தேசங்க
அசாம்
அருணாச்சலப் பிரதேசம் நம்ம ஊருங்க
பிரிக்கச் சொல்லிக் கூச்சலிடும் நாசக்காரங்க - அவுங்க
பின்னாலே இருப்பவங்க தேசத்துரோகிங்க - நீங்க
தீர்மானமா நில்லுங்க - இது
ஒரே நாடுங்க - இது
ஒரே நாடுங்க - இது
ஒரே நாடுங்க

*21.05.2017*

## 128. என் பாட்டு முடியாது!

கிளியாட்டம் போட்டுவிட்டுப்
போனஎலை இன்னுமொரு
துளியாட்டம் போடுதுபார் துந்தனா
இலையுண்டு இலையில்பனித் துளியுண்டு துளியில் வான
வெளியுண்டு வேடிக்கை பார் துந்தனா

அலைவீசும் கடலோரம் நிக்கும்சிறு படகோரம்
அமர்ந்துள்ள ஜோடியப்பார் துந்தனா
அவன்முத்தம் முடிஞ்சகதை தெரியாம கண்மயங்கி
அவமுனகும் சத்தத்தக் கேள் துந்தனா

ரவிவர்மன் ஓவியத்தில் ஊஞ்சலாடும் மோகினிபார்
ஆடிக்கொண்டே இருப்பாளே துந்தனா
அவளாட்டம் ஓயாது
அவபாதம் அதைநிறுத்த
யாராலும் முடியாது துந்தனா

எங்காத்து நின்னாலும் என்பாட்டு முடியாது
என்னோட நிக்காது துந்தனா
எங்கெல்லாம் மனசுண்டு
எங்கெல்லாம் இசையுண்டு
அங்கெல்லாம் பாட்டாவேன் துந்தனா

*03.06.2017*

## 129. அட்றா சக்கே

அட்றா சக்கே மெட்ராசு பாஷை
கும்பகோணம் கோயமுத்தூரு
எந்தூரு போனாலும் யார் பேசினாலும்
இனிக்கும் தமிழ் இனிக்கும் - அதில்
மண்வாசனை மணக்கும்

நெஞ்சுல ஏதும் வஞ்சமில் லாம
கொஞ்சமும் கோவம் கொள்ளாம
படிச்சவனும் படிக்காதவனும்
பேசுற பாஷை தமிழ் தானே

வள்ளுவர் இளங்கோ கம்பருடன்
மீசைக் கவிஞன் பேசிய பாஷை
கள்ளூறும் பூவாச் சொல்லூறும் பாஷை
கவிதையும் கலையும் கலந்த பாஷை
கடவுளும் கேட்டு மயங்கும் பாஷை

*16.07.2017*

## 130. மாதா சரஸ்வதியே!

மணிவாக் குதவும் மகராணி - தா
மரைமேல் அமரும் கலைவாணி
பணிவார்க் கருளும் பவதாரிணி - தினம்
பயில்வார்க்கு நீயே சம்மோஹினி

மகிழ்ச்சியுடன் மன மலர்ச்சி தரும்
மஹோன்னதக் கலைகள்
- அறிவு
வளர்ச்சியுடன் அருள் முதிர்ச்சி தரும்
வரையிலாத கல்வி
நெகிழ்ச்சியுடன் உனைத் தொழுபவர்க்கே - இவை
நித்தம் தருபவள் நீ
நினைவினிலே ஒரு கணம் எழுந்தே இசை
முத்தம் தருபவள் நீ

வெண்டாமரையே சிம்மாஸனமாய்
வீற்றிருக்கும் தனிப் பேரரசி
வீணையுடன் ஜபமாலை சுவடி
ஏந்தி யிருக்கும் ஜ்வாலாமுகி
கண்டார் வியக்கும் வெண்மயிலே - பெருங்
கருணைக் கடலே ஒயிலே
கவலை அச்சம் அணுகாத - கதி
அருள்வாய் மாதா சரஸ்வதியே

*29.09.2017*

## 131. வானம் நீ, நான் பறவை

வானம் நீ நான் பறவை
கானம் நீ நான் கவிதை

அருகில் இருப்பவள் நீ - என்னுள்
அமிழ்ந்து கிடப்பவள் நீ -
மிகவும்
தொலைவில் சிரிப்பவள் நீ - எங்கும்
தோன்றி மறைபவள் நீ நீ

வானம் நீ நான் பறவை
கானம் நீ நான் கவிதை

நான்
ஏதிலி வெறும் ஏழைதான் - உயிர்க்
காதலி என் கனவு நீ - கை
ஏந்தும் கலசம் நான் அதிலே
இனிய மதுரசம் நீ - திரு
வோடு தேகம் நான் -அதில்
தினம் தினம் விழும் அன்னம் நீ

வானம் நீ நான் பறவை
கானம் நீ நான் கவிதை

ஜென்ம பந்தம் இல்லை - இது
ஜனன மரணச் சுழலின் எல்லை
பிரிந்ததே இல்லை - நாம்
பிரிந்ததே இல்லை
பிரிந்தது போல் - ப்ரதி
பிம்பநிலை
ஒற்றைப் புள்ளி நான் - உள்ளே
முற்றுப்புள்ளி நீ - உலகம்
அற்றுப் போகும் தருணம் உயிரில்
முளைத்தெழும் முதல் வெள்ளி நீ

வானம் நீ நான் பறவை
கானம் நீ நான் கவிதை

*12.10.2017*

## 132. எல்லாருக்கும் மார்கழி!

பொங்கலுக்கு மார்கழி
பூசனிப்பூ மார்கழி
எங்களுக்கு மார்கழி
எல்லாருக்கும் மார்கழி

மப்ளர் குல்லா சால்வையோட
மாட வீதி பஜனைகள்
மாதவனை ஈசனையொன்
றாகப் பாடும் ரசனைகள்
துப்புரவாத் தெருவெல்லாம்
அரிசிமாவுக் கோலங்கள்
சுருதியோடு கோயில்களில்
நாதஸ்வர மேளங்கள் (பொங்கலுக்கு)

சங்கீத சீசனிலே சபையெல்லாம் ஜனக்கூட்டம்
சரிகை வேட்டி பட்டுப் புடவை
சரசரக்கும் ஆர்ப்பாட்டம்
மாதா கோயில் மணியோசை
ஐயப்பசாமி களின்பூசை
வரப்போகும் புதுவருஷம்
வரவேற்புக் கோலாகலம் (பொங்கலுக்கு)

ஆண்டாளின் பாசுரமும்
ஞானமணி வாசகமும்
அப்புறமா கூட்டுக்களி
ஆனந்தக் கூடாரவல்லி
ஆண்டவனே தானாக
ஆனதுதான் மார்கழி
உடுக்கடிச்சுக் கொளுத்தினாலும்
ஓடிவரும் மறுபடி (பொங்கலுக்கு)

*20.12.2017*

## 133. வாக்காளரே, வாக்காளரே!

வாக்காளரே வாக்காளரே - தரம்
பாக்காம யாருக்கும் போடாதீங்க - ஓட்டுப்
போடாதீங்க
வாயால பொய்பேசி மயக்குகிற
வஞ்சகரின் பேச்சுக்கு ஆடாதீங்க - கூட
ஓடாதீங்க (வாக்காளரே)

ஆஸ்பத்ரி பள்ளிக்கூடம் கட்ட வேணாமா - சில
ஆயிரத்தால் உங்க வாழ்க்கை முன்னேறுமா
- இவங்க
ஆட்சிக்கு வந்தவுடன் லட்ச லட்சமா - கொள்ளை
அடிக்கத்தான் நீங்க ஓட்டுப் போட வேணுமா
(வாக்காளரே)

நெசமான எசமானர் நீங்க தானுங்க - இத
நெனச்சுக்கிட்டு சாவடிக்குப் போக வேணுங்க
வேலக்காரன் கிட்டே கைய ஏந்தாதீங்க - அவன்
வேஷத்தை மாத்துவான் - ஏ
மாறாதீங்க (வாக்காளரே)

யோசிச்சுப் பாக்கத்தான் நேரமில்லையா - பணம்
வேணாமுனு சொல்லக் கூட வீரமில்லையா
காசுக்கு ஓட்டளிச்சா சோரமில்லையா - வருங்
காலமெல்லாம் நெஞ்சுக்கு பாரமில்லையா (வாக்காளரே)

*21.12.2017*

## 134. வேட்பாளரே, வேட்பாளரே!

வேட்பாளரே வேட்பாளரே - நோட்டை
வீசி வீசி ஓட்டுக் கேக்கும் வேட்பாளரே
வெக்கம் மானம் இல்லாத வேட்பாளரே
(வேட்பாளரே)

ஓட்டுப் பிச்சை கேக்கும் போது கும்பிடுறீங்க
செயிச்சுப்புட்டா வானத்துக்கே எம்பிடுறீங்க - நாங்க
ஆட்டு மந்தைக் கூட்டமுனு கணக்கிடுறீங்க - நீங்க
ஆளவந்த கூட்டமுனு நம்பிடுறீங்க
(வேட்பாளரே)

லஞ்சம் தரும் கைய இப்ப வெட்டியாகணும் - லஞ்சம்
வாங்காத மன உறுதி கெட்டியாகணும்
அஞ்சியது போதும் நாம செஞ்சு காட்டணும் - நல்ல
தேர்தல் முறை கொண்டு வரத் திட்டம் தீட்டணும்
(வேட்பாளரே)

*21.12.2017*

## 135. மன்னன் பிறந்து விட்டான்!

மாட்டுத் தொழுவத்தை மாளிகை யாக்கி
மன்னன் பிறந்து விட்டான் - ஒரு
தொட்டியை மாணிக்கத் தொட்டிலென்றாக்கிக்
கண்ணன் பிறந்து விட்டான் - மன்னர்
மன்னன் பிறந்து விட்டான்

கன்னியையே தன் அன்னையென் றாக்கிக்
கண்ணன் பிறந்து விட்டான் - தன்
கருணையினால் நம்மை மீட்பதற்கே ஒரு
மன்னன் பிறந்து விட்டான் - சின்ன
கண்ணன் பிறந்து விட்டான்

சிலுவையிலே ரத்தம் சிந்திநம் பாவத்தைக்
கழுவிடவே கர்த்தன் பிறந்து விட்டான்
வலுவிழந்தார்க்கற வலிமையளிக்க
வள்ளல் ஏசு பிறந்து விட்டான் - இறை
மைந்தன் வந்து பிறந்து விட்டான்

கிருஸ்து என்றாலும்
கிருஷ்ணன் என்றாலும்
கடவுளிப் புவியில் அவதரித்தான்
கருடனே வந்திதை இடையருக்குக்
கட்டியம் கூறி அறிவித்தான்

கிண்கிணி ஓசை எழுப்பிடுவோம்
கிருத்துவை வரவேற்போம்
அன்பு நெறியது ஈசன்வழி
ஆண்டவன் ஒன்றே என்றுரைப்போம் - உலகில்
அமைதியை மீண்டும் வென்றெடுப்போம்

*25.12.2017*

## 136. எழுந்திராய், நிலா!

கனவு கனவாய் மேகங்கள்
துயில்வதென்ன வெண்ணிலா
கவிதை பாடும் பூந்தென்றல்
ஸ்வரங்களின் உலா
நிலா நிலா நிலா

சின்ன சின்ன வெள்ளை மலர்கள்
சிரிக்கும் ஒலியிலே
யார் குரல் அது ஏன் என - அறி
யாத இசையிலே
புல் நுனிக்கொரு மகுட மாய்வந்
தமரும் பனியிலே
இன்னுமேன் உறக்கமோ
எழுந்திராய் நிலா
நிலா நிலா நிலா

ஒருதினம் முகம் மலர்கிறாய்
ஒருதினம்நீ மறைகிறாய்
- உடல்
தேடித் தேடிக்
கடல்ச லிக்கத்
தினம்தினம் உதிக்கிறாய்
வளர்ந்து தேய்ந்து வளர்வதென்ன
ஜால வித்தையா
துயில்வதற்கு வானமென்ன
பஞ்சு மெத்தையா

*28.12.2017*

## 137. நீதியின் குரல்

நீயெந் நாளும் என்னை ஆளும்
நீதியின் குரல்
நினைவு கனவு உறக்கம் என்று
தொடர்ந்திடும் நிழல்
(நீயெந்நாளும்)

மாயத் திரைவி லக்கி என்னுள்
மடை திறந்த வெள்ளமாய்ப்
பாயும் கவிதை ஊற்று நீ
பாடும் தென்றல் காற்று நீ
(நீயெந்நாளும்)

காயும் நிலவில் கதைகள் பேசிக்
களித்திருந்த கணங்களும்
கண்கள் மூடி மௌனமாக
அமர்ந்திருந்த கணங்களும்
தீயைப் போலத் திசைக ளெட்டும்
விழுங்கத் துடித்த நொடிகளும்
முடிந்து போகும் நாள்வ ரைக்கும்
பிரிவ தில்லை கவிதையே
(நீயெந்நாளும்)

*03.01.2018*

## 138. தமிழ் தமிழ் தமிழ்...

தமிழ் தமிழ் தமிழ் மிக இனிய தமிழ்
தமிழ் தமிழ் தமிழ் ஒரு சக்தித் தமிழ்
தமிழ் தமிழ் தமிழ் என்றும் புதிய தமிழ்
தமிழ் தமிழ் தமிழ் இது பக்தித் தமிழ்

முச்சங்கத் தில்வளர்ந்த முன்னைத் தமிழ்
முழுமுதலும் கேட்டுவந்த அன்னைத் தமிழ்
வள்ளுவனால் வான்புகழே கொண்ட தமிழ்
வரலாற்றில் பொன்னேடு கண்ட தமிழ் (தமிழ் தமிழ்)

இளங்கோவின் காப்பியத்தில் இசையோடு நாடகமும்
பயின்ற தமிழ்
வளமான பாசுரமும் வாசகமும் மந்திரமும்
மலர்ந்த தமிழ்
கம்பனுடைய சொல்லெல்லாம் கவிதைத் தமிழ்
கன்னல்தேன் பாகுகற் கண்டு தமிழ் (தமிழ் தமிழ்)

அச்சமில்லை அச்சமில்லை என்ற தமிழ்
அனுபவத்தைக் கண்ணதாசன் சொன்ன தமிழ்
நித்தநித்தம் என்நெஞ்சில் முத்தம் தமிழ்
நீதி தமிழ் அறம் தமிழ் வெற்றித் தமிழ்
வக்கிரத்தை வஞ்சனையை வீழ்த்தும் தமிழ்
வாளாகி வெம்பகையைச் சாடும் தமிழ் - இசை
பாடும் தமிழ் - என்னை
ஆளும் தமிழ் - எந்
நாளும் தமிழ் - எந் நாளும் தமிழ்
(தமிழ் தமிழ்)

*11.01.2018*

## 139. இனிமையான தமிழிலே...

இனிமையான தமிழிலே
எளிமையான சொற்களில்
இதயம் குளிரப் பேசலாம்
எழுதலாம் பழகலாம்
மனிதர் நோகப் பேசும் வழக்கம்
மறக்க வேண்டும் மானுடா (இனிமையான)

வேசி தாசி யாவரும் நம்
அன்னை, தங்கை, பிள்ளையே
வேறு தொழில்கள் போலவே - இதில்
மேன்மை கீழ்மை இல்லையே
யோசிக்காமல் பேசிவிட்டுக்
கலங்கும் நெஞ்சம் ஏனடா
யாவரையும் மதிக்கும் வழக்கம்
பழக வேண்டும் மானுடா (இனிமையான)

தூசி படிந்த சிந்தையைத்
தூய்மை செய்து கொள்ளடா
துளசி மாடச் சுடரை நெஞ்சில்
கோலம் போட்டு வையடா
மாசில்லாத எண்ணங்கள்
மலர வேண்டும் தோழனே
மனமெலாம் ஒரு புதிய சக்தி
நிறைய வேண்டும் தோழியே (இனிமையான)

*12.01.2018*

## 140. எல்லாரும் நண்பர்களே!

எல்லாரும் நண்பர்களே எல்லாரும் நல்லவரே
ஏனிந்தப் பிரிவுகளோ சிந்தனையில் பிளவுகளோ

சிந்திக்க முடியாமல்
சிக்குண்ட ஏழைகளும்
சிந்திக்கத் தெரிந்தவரால்
சிதறுண்டு கிடக்கின்றார்
என்ஜாதி என்மொழியென்
மதமென்று சண்டையிட
எப்போதும் துடிக்கின்றார்
எப்படியோ நடிக்கின்றார் (எல்லாரும்)

நானென்ற ஆணவத்தால்
நாவடக்கம் இல்லாமல்
நச்சுவிதை தூவுகிறார்
போருக்குத் தூண்டுகிறார்
ஞானத்தைக் கூடயிவர்
எள்ளிநகை யாடுகிறார்
ஆஹாவென் றிவர்பின்னே
அறிவிலிகள் ஓடுகிறார் (எல்லாரும்)

திட்டுவதும் தேளாகக்
கொட்டுவதும் விட்டுவிட்டுச்
சேர்ந்தமர்ந்து பேசுவதே
சரியான தீர்வாகும்
உண்மையெது என்பதற்கே
ஓராயிரம் பூசல்
நன்மையெது என்பதுதான்
நமக்கெல்லாம் தலைவாசல் (எல்லாரும்)

*13.01.2018*

## 141. களவாட வந்தாயோ கதிரேசா?

இரவெல்லாம் ஏதேதோ சேமித்து வைத்தோமே
களவாட வந்தாயோ கதிரேசா
இலையெல்லாம் வைரங்கள்
புல்லெல்லாம் முத்துக்கள்
இதயம் முழுதும் கனவுகள் கனவுகள்
களவாட வந்தாயோ கதிரேசா - கடவுள்
வடிவாக வந்தாயோ கதிரேசா (இரவெல்லாம்)

செடியெல்லாம் பூப்பூக்க
விழியெல்லாம் சுடரேற்றச்
சிறகடித்து வந்தாயே ஆதவனே
செவ்வானம் அடைகாத்த இருட்டைப் பிளந்துகொண்டு
பறந்துவந்தாய் இறை
தூதுவனே - எங்கும்
ஜீவ இசைபொழியும்
திவாகரனே (இரவெல்லாம்)

தினமுன்னை பூமித்தாய் பக்தியுடன் சுற்றுகிறாள்
தீபாரா தனையிங்கு யாருக்கோ
தெய்வத்துக்கோ அதன் தேருக்கோ
மேகத்தின் கருவாகி
வேருக்கு நீராகி
உயிர்க்கூட்டம் பயிர்செய்யும் ஒளிவிளக்கே
உழவன்நீ தலைவன்நீ
உலகுக்கே (இரவெல்லாம்)

*15.01.2018*

## 142. தேசம் இந்த தேசம்

தேசம் இந்த தேசம் - அதை
தெய்வம் என்று போற்று
தேகத்துக்குள் அதுவே - உயிர்
சேர்க்கும் மூச்சுக் காற்று (தேசம்)

கஷ்மீர் பாஞ்சாலம் குஜராத் வங்காளம் - தமிழ்க்
குமரி மலையாளம் இவை யாவும் ஒரே தேசம் (தேசம்)

மொழிகள் வேறு வேறு - இறை
நெறியும் வேறு வேறு
கலைகள் வேறு வேறு - சொல்லும்
கவிதை வேறு வேறு
அழியும் உடலில் ஆன்மா என்றும் அழியாதிருந்து சென்று -
மீண்டும்
பிறக்கும் என்ற உணர்வே - பொது வாகும் பாலமாகும் (தேசம்)

பிரியத் துடிக்கும் உலகை - ஒன்றாய்
இணையச் செய்யும் வலிமை
பிளவு படாமல் கருத்துப் போர்கள்
நடத்திக் காட்டும் திறமை
விரிய விரிய மேலும் விரியும்
உலகைப் போன்ற புதுமை
விளங்கிக் கொள்ள முடியாத எழில்
பூத்துக் குலுங்கும் இளமை (தேசம்)

*26.01.2018*

## 143. நெஞ்சின் நிழல்

நெஞ்சின் நிழல் - என் -
நெஞ்சின் நிழல்
நிகழ்காலம் உருவாக விரியும் திடல் (நெஞ்சின்)

அஞ்சில் அகப்படும் அச்சம் தவிர்த்திடக்
கொஞ்சம் ஒளிதரும் சின்னஞ் சிறுசுடர் (நெஞ்சின்)

விரிய விரிய விரிந்த தெல்லாம்
விழுங்கிக் கொண்ட காலமோ
சிறிய புள்ளி பெரிய வடிவில்
வளரத் துடித்த மாயமோ
துரியமோ அதீதமோ தூல மான நீலமோ
முடிந்து போகும் கணத்தி லேநிர்
மூலமாகும் கோலமோ (நெஞ்சின்)

எல்லையற்ற ஆழமோ - மனம்
என்று சுழலும் தோற்றமோ
எல்லாமாகி எதுவுமின்றி
எக்களிக்கும் கூற்றமோ
சொல்லெலாம் ஒரு சூனியத்தில்
தொலைத்து விட்ட தாபமோ
மௌனமாய் என் உள்ளிருந்து
வழிநடத்தும் வேதமோ (நெஞ்சின்)

*31.01.2018*

## 144. மனம், யாரை மிகத் தேடுமோ

மனம்
யாரை மிகத் தேடுமோ - அது
யாரைத் தினம் பாடுமோ
மனம்
யாரை மிகத் தேடுமோ

நீரில் நிலாநனைத்து
நீல விதானத்தில்
தூவும் மழை மேகமோ - பனித்
துளியாக விழக் கூடுமோ

மனம்
யாரை மிகத் தேடுமோ

நெஞ்சின் அலைகளில் கொஞ்சும் சலங்கைகள்
புரள நடந்திடும் பாதமோ
நெற்றித் திலகம் நெருப்பு மலராய்
இதழ்விரிக்கும் சுடர்த் தீபமோ

மனம்
யாரை மிகத் தேடுமோ

தேடும் இலக்கும் தேட உதவும்
சின்ன விளக்கும் அது அது
பாடும் குரலில் இசையாகவும் - என்னைப்
பாட வைக்கும் விசையாகவும்
பழகும் அனுபவமோ - இது
பழைய அதிசயமோ

மனம்
யாரை மிகத் தேடுமோ

*05.03.2018*

## 145. உனக்காகவே...

உனக்காகவே உனக்காகவே
ஒவ்வொரு நாளும்
பாடுகிறேன் - நான்
உனக்காகவே

மனக்காதலை மௌனத்தில் வைத்து
அடைகாக்கும் நிமிடங்கள் கனக்கின்றன
அடையாளமாய்க் கண்கள் பனிக்கின்றன
அந்நேரம் கவிதைகள் ஜனிக்கின்றன
(உனக்காகவே)

கனவுக்கும் நினைவுக்கும் ஊஞ்சல் கட்டிக்
களைப்பின்றி ஆடுகிறேன்
கணநேரம் ஸ்வர்கத்தைக் கண்டு வந்து
களிப்போடு பாடுகிறேன்
(உனக்காகவே)

கல்லுக்குள் கடவுள் இருப்பதையும்
காண்பவன் தானொரு கலைஞனடி - என்
சொல்லுக்குள்ளே நீ சுகநடனம்
செய்வதனால் நான் கவிஞனடி
ஒவ்வோர் அணுவும் இசைத்துடிப்பு - இந்த
உலகமெல்லாம் உன் புன்சிரிப்பு
(உனக்காகவே)

*01.04.2018*

## 146. ந்யாயத்தப் பேசு புள்ளே!

ந்யாயத்தப் பேசு புள்ளே - அதுக்குத்
தைரியம் வேணுமில்லே

சாயத்தைப் பூசிப் - பல
சாயத்தைப் பூசிக்கிட்டுத் திரியிறியே - இந்த
தேசத்தைப் பாழாக்கத் துடிக்கிறியே - நீ

ந்யாயத்தப் பேசு புள்ளே - அதுக்குத்
தைரியம் வேணுமில்லே

சாதிச் சண்டை வீதிச் சண்டை
சமயச் சண்டை - ச
மாதிச் சண்டை பாஷைச் சண்டை
தண்ணிச் சண்டை - செலை
யாலும் தின்னுமுண வாலும் சண்டை - எங்
கெங்கும் சண்டை எதுக்கிந்த வம்புச் சண்டை

ந்யாயத்தப் பேசு புள்ளே - அதுக்குத்
தைரியம் வேணுமில்லே

ஆள்வது யாரென்ற கேள்வியி னாலே
அக்குவே றாணிவே றாகப் பிரிஞ்சோம்
ஆள்பவர் மக்கள் என்பதை மறந்து
ஆளுக்கொரு பக்கம் திரும்பிக் கிட்டோம்
யார் தோற்றாலும் தோற்பவன் இந்தியன்
உண்மையை மறந்து குழம்புகிறோம்

ந்யாயத்தப் பேசு புள்ளே - அதுக்குத்
தைரியம் வேணுமில்லே

பொம்மனை நாச்சியை நெனச்சுக்கணும் - கட்ட
பொம்மனை நாச்சியை நெனச்சுக்கணும் - ஜான்ஸி
ராணியின் வீரத்தைத் தெரிஞ்சுக்கணும் - பகத்
சிங்கத்தை மறக்காம - நே

தாஜியை மறக்காம - நம்ம
தேவரை நெஞ்சுல பதிச்சுக்கணும்
சத்தியமே நம் ஆயுதமாம் - தேசத்
தந்தையின் வாழ்வே காவியமாம்

ந்யாயத்தப் பேசு புள்ளே - அதுக்குத்
தைரியம் வேணுமில்லே

*02.04.2018*

## 147. கூடுவிட்டுப் போன பின்னும்...

கூடு விட்டுப் போன பின்னும்
கூவுமோ இந்தக் குயில்
ஏடு தொட்டுப் பாத்து பதில் சொல்லையா
நாடு கெட்டுப் போன நிலை நானெழுப்பும் ஓசைகளை
நாளைக்கும் கேட்கவழி யில்லையா

பணத்துக்கும் பகட்டுக்கும்
பதவிக்கும் எல்லாரும்
பேயாக அலைகின்ற உலகத்தில் - வாய்
ஓயாமல் பாடுமொரு சின்னகுயில்
கனக்கின்ற நெஞ்சோடு
காதலையும் மோதலையும்
கவிதைக்குள் இசைக்கின்ற தெருப்பாடகன் -சொல்லில்
கனல்மூட்டி எரிகின்ற நெருப்பானவன் (கூடு விட்டுப்)

நான்சொல்லும் சொல்லெல்லாம்
நாளைய உலகத்தின்
நம்பிக்கை விதையாகுமா - வெறும்
நாடகக் கதையாகுமா
வானுக்கும் பூமிக்கும்
வண்ணங்கள் தந்தவளே
வார்த்தைக்குள் சுடரேற்றுவாள் - உலகம்
வாழ வழிகாட்டுவாள்

கூடு விட்டுப் போன பின்னும்
கூவுமே இந்தக் குயில்
ஏடு தொட்டுப் பார்த்த தெந்தன் நெஞ்சமே - நான்
இதுவரை சொன்னதெல்லாம் கொஞ்சமே

*05.04.2018*

## 148. தெக்கத்திக் காத்துல....

**(மருமகளை நொந்து மாமியார் பாடுவதாகக் கண்ணதாசன் எழுதிய வளமான செட்டிநாட்டுத் தமிழ் மணம் வீசும் கவிதையொன்றை முகநூலில் கண்டேன். அதில் லயித்த கணமே என் நெஞ்சில் உதித்த கவிதை இது. அவருக்கு அந்த மொழி இயல்பானது. நானோ கூடு விட்டுக் கூடு பாய்ந்து வரவழைத்தது.)**

அப்புறமா வாரேன்னு அக்கரைச் சீமைக்குக்
கப்பலேறிப் போனவரு கடுதாசி போடலியே
போன எடத்துல புதுச்சிறுக்கி கெடச்சாளோ
மானங்கெட்டுப் போயியவ முந்தி விரிச்சாளோ

சேத்த பணமெல்லாம் செலவு பண்ணிப்புட்டுக்
கூத்தியா வீட்டுலபோய் கொட்டி யளந்துப்புட்டுச்
செய்வ தறியாம செட்டியார் மனசொடிஞ்சிக்
கைகட்டி யாருக்கோ சேவுகம் செய்வாரோ

சிறுவாட்டுப் பணமிருக்கு சீக்கிரமா வருவீரே
கருவாட்டு மீன்குழம்பு கஞ்சிச் சோறு ஆக்கிருவேன்
வருவாய்க்குக் கடைகண்ணி வச்சிப் பொழச்சிடலாம்
வருவேன்னு ஒருவார்த்தை மறக்காம எழுதுவிரோ

கண்ணாத்தா கோவிலிலே பொங்கல்வச்சுக் கும்பிடுறேன்
கண்டனூரு மீனாச்சிக்கு வளவி செஞ்சுதரேன்

கண்ணீரைத் தொடச்சயெந்தன் சேலையின்னும் காயலியே
துண்ணூறு குங்குமத்தைத் தொடவும் மனசில்லையே

செட்டியாரு காதுலபோய் யென்குரல் சேந்திருமோ
தெக்கத்திக் காத்துலயென் சேதி கலந்திருமோ

*12.04.2018*

## 149. நடந்தாய் வாழி காவேரி

நடந்தாய் வாழி காவேரி - நீ
நடந்தாய் வாழி காவேரி

செந்நெல் தலையசையக் - கொடி
மின்னல் ஒளிபடரக் - கடல்
சேரும் வழி தேடி இடை
ஆடி இசை பாடி - நீ

நடந்தாய் வாழி காவேரி - நீ
நடந்தாய் வாழி காவேரி

முன்னம் உனதங்கம் - அது
முழுதும் நுரை பொங்கும்
அன்னம் குரு கெல்லாம் - அதில்
தங்கும் கரை யெங்கும் - மூ
வேந்தர் பொது மாந்தர் - என
யாரும் உனை வாழ்த்த
வேயும் தலை சாயும் - செங்
கரும்பும் வரவேற்க

நடந்தாய் வாழி காவேரி - நீ
நடந்தாய் வாழி காவேரி

இன்றேன் நீ இளைத்தாய் - நீர்
இன்றி உடல்களைத்தாய்
வான்பொய்ப்பினும் தான்பொய்யா மலைத்தலையள் நீயென்ற
வாக்கும் பொய்க்கலாமா - நீ
வாடி நிற்கலாமா

நடந்தாய் வாழி காவேரி - நீ
நடந்தாய் வாழி காவேரி

யாரால் இந்தப் பஞ்சம் - உன்
பேரால் என்ன வஞ்சம்
நீரால் மூளும் போரால் எங்கும்

கலவரம் தானே மிஞ்சும் - கண்
திறப்பாயே நீ கொஞ்சம்
அணையா உனக்கு - நீ
அணையா விளக்கு
தடைகள் உடைத்து - உன்
தலையை நிமிர்த்து
மேகம் பொழியச் செழித்து - அர
சாட்சிநீ நடத்து

நடப்பாய் வாழி காவேரி
நாட்டில் எங்கும் பூதூவி

*14.04.2018*

## 150. பாட்டுக் கேக்க நேரமில்லையா?

பாட்டுக் கேக்க நேரமில்லையா தோழர்களே தோழிகளே
பாட்டுக் கேக்க நேரமில்லையா

வாட்ஸ் ஆப்பைத் தட்டிக்கிட்டு
குட்மார்னிங் போட்டுக்கிட்டு
காப்பி டீயை உறிஞ்சுக்கிட்டுப்
பேப்பரையும் புரட்டிக்கிட்டுப்
பரபரக்கும் மனசுக்கொரு
செறகு தரேன் - அது
பறந்துசெல்லும் போதுநானும்
கூட வரேன் - என்

பாட்டைக் கேக்க நேரமில்லையா தோழர்களே தோழிகளே
பாட்டுக் கேக்க நேரமில்லையா

மொட்டு மொட்டாத் தொட்டுத் தொட்டுத்
தெறந்து பாக்கலாம் - ஒரு
மேகத்துல ஏறி சவாரி செய்யலாம் - தோடை
விட்டெறிஞ்சு முழுநெலவைக் காட்டினவ கோயிலிலே
அகல்விளக்காக் குந்திக்கிட்டு அமைதியாகலாம்
அண்டமெல்லாம் நமக்குள்ளே கண்டு கொள்ளலாம்

பாட்டுக் கேக்க நேரமில்லையா தோழர்களே தோழிகளே
பாட்டுக் கேக்க நேரமில்லையா

அக்கிரமம் அநியாயம்
வக்கிரமம் வன்கொடுமை
அதிகாரம் கையூட்டு
அத்தனையும் எதுத்துநிக்கத்
தைரியத்தைக் கொடுப்பதுதான் பாட்டு - தீயசக்தி
தலையெடுக்கும் போதுவைக்கும் வேட்டு

பாட்டுக் கேக்க நேரமில்லையா தோழர்களே தோழிகளே
பாட்டுக் கேக்க நேரமில்லையா

பாடும்போது பாட்டாவே
மாறிப் பாருங்க - உங்க
பயமெல்லாம் தூளாகிக்
கலஞ்சு போவுங்க
கூடுவிட்டுப் போவதற்குக்
கொஞ்சமிது ஒத்திகையாம்
கோபுரத்து மேலநின்னு
கூவுகிறேன் பாடுகிறேன்

பாட்டுக் கேக்க நேரமில்லையா தோழர்களே தோழிகளே
பாட்டுக் கேக்க நேரமில்லையா

*14.04.2018*

## 151. ரசம் போன கண்ணாடி

ரசம் போன கண்ணாடி பூதம் காட்டும் கண்ணாடி
நெசம் போல மாயவித்தை
நிகழ்த்திக் காட்டும் கண்ணாடி

ராணிமகா ராணியையும் ரவுசாக்கும் கண்ணாடி
குடிசையக் கோபுரமா உசத்திக் காட்டும் கண்ணாடி

மகமாயி காளியவ மாய்மாலக் கண்ணாடி
ஜகஜாலக் கண்ணாடி ஜனன மரணக் கண்ணாடி

கண்ணாடி வேறில்லே பிம்பமும் வேறில்லே
முன்னாடி நின்னபடிப் பார்ப்பவனும் வேறில்லே
வண்ணான் தொவச்சதுமே அழுக்கு நீங்கிப் போனது போல்
ஒண்ணாத் தெரிஞ்சதுமே ஒடஞ்சு போகும் கண்ணாடி

*15.04.2018*

## 152. மனக் கதவைத் தட்டும் விரல் நான்

தினமுமுன் மனக்கதவைத் தட்டும் விரல்நான்- அது
திறக்கும் வரையிசை கொட்டும்
குரல்நான்
உனக்குள் மலர்தூவி மகிழ்ந்திடுவேன் - நீ
உறக்கம் கலைந்தவுடன் கரைந்திடுவேன்

எனக்கொரு பெயரில்லையே - எனக்
கெந்நாளும் துயரில்லையே

கனவென் றென்னைப் புறக்கணிக் காதே
கனலாய் நின்றெரிவேன் - ஓடும்
புனலாய் நடைபயில்வேன் - உன்
கனவிலிருந்தே நான்மலர்வேன் - பின்
நினைவெல்லாம் நிறைவேன் - உன்
நிழலாய் உடன்வருவேன்

எனக்கொரு பெயரில்லையே - எனக்
கெந்நாளும் துயரில்லையே

மலர்விளிம்பில் வண்டுறங்கிடுமோ - தேன்
மதுவுண்டதாலே கிறங்கிடுமோ
நிலவொளியில் குடம் தளும்பிடுமோ - என்
நெஞ்சின் இசையும் அடங்கிடுமோ
நமக்கிடையே ஒரு தடையில்லையே - கவிதை
மழைக்கென இங்கொரு குடையில்லையே

தினமுமுன் மனக்கதவைத் தட்டும் விரல்நான் - அது
திறக்கும் வரையிசை கொட்டும்
குரல்நான்
வானும் பூமியும் போல் - என்றும்
நானும் நீயும் சுழன்றிடலாம்

*18.04.2018*

## 153. புதுப்புதுப் பொழுதுகள் புலர்ந்திடுமாம்

உன்னையும் என்னையும் ஆக்கியவள் - முதல்
அன்னையவள் பேரழகும் அவள்
ஒவ்வாரு துளியும் ஒரு கடலாய் - இவ்
வுலகை நடத்தும் சக்தியவள் (உன்னையும்)

முன்னையும் பின்னையும் முடிவுமில்லாமல்
முழு முதலாக விரிபவளாம்
தன்னையும் அந்தச் சாகரத்தில்
புள்ளிகளாக்கி மகிழ்பவளாம் (உன்னையும்)

விண்ணையும் மண்ணையும் படைக்க வில்லை - அவள்
விரிவதனால் அவை வளைந்தனவாம்
கண்ணையும் அறிவையும் கொடுக்கவில்லை - அவள்
கருணையினா லவை விளைந்தனவாம்
எண்ணிலடங்கா விண்மீன்கள் - அவள்
புன்னகைக் குளத்தில் மலர்ந்தனவாம்
எத்தனை யுகங்கள் ஆனபின்னும்
புதுப்புது பொழுதுகள் புலர்ந்திடுமாம் (உன்னையும்)

*13.05.2018*

## 154. நடந்து செல்கிறோம்...

நேரம் இந்த நேரம்
நெஞ்சக் கடலின் ஓரம்
நிழல்களாகவே நீயும் நானும்
நடந்து செல்கிறோம் - ஒரு
கவிதை சொல்கிறோம்

யாருமில்லை என்ற நினைப்பில்
நெருங்க முயன்றதும் - ஒரு
நண்டு வந்து நம்மைக் கண்டு
பதுங்கிக் கொண்டதும்
சீரும் சிறப்புமாக வானில்
நிலா ஊர்வலம்
கன்னம் சிவந்த வானம் நமது
கருப்பு நிழலில் சங்கமம்
(நேரம் இந்த நேரம்)

சொல்வதற்குச் செய்தி எதுவும்
இல்லை என்னிடம்
சொல்லாமல் இருப்பதற்கும்
மறுத்திடும் மனம் - இதில்
புரிந்து கொள்ள எதுவுமில்லை
விரிந்து பரந்திடு
புதிய அலையில் பூக்கும் நுரையில்
நடனம் பயின்றிடு - அரை
நொடியில் கரைந்திடு
(நேரம் இந்த நேரம்)

*14.05.2018*

## 155. என் குருநாதன்

என்னை எனக்கே அறிமுகம் செய்தவன் - என்
எண்ணத் தறியில் தன்னை நெய்தவன்
என்னுள் கவிதை அமுதம் பெய்தவன்
என் குருநாதன் என் குருநாதன்

ஷீரடி வாசன் எளியவன் இனியவன்
ஊழியிலும் அணையாத துனியவன்
அல்லா ஹரிஹரன் பரம பிதாவென
எல்லா மாக இருந்தும் தனியவன்

என் குருநாதன் என் குருநாதன்

வெள்ளை ஆடை மட்டும் தரிப்பவன்
உள்ளம் தோறும் உள்ள நெருப்பவன்
பள்ளம் மேடு பாயும் நதியவன்
பழகப் பழக என்றும் புதியவன்

சத் குருநாதன் சத் குருநாதன்

*17.05.2018*

## 156. கவிதையாக வா!

நெஞ்சில் இசை கொஞ்சும் வரை
நீயும் நானும் வேறில்லை
எண்ணங்களில் வண்ணங்களை
எழுதும் வரைகண் நீரில்லை
காதலே ஓ காதலே
கவிதையாக வா - ஒரு
பாடலாகப் பயணம் செல்லப்
பாதை செய்து தா

பனித்திரை விலக்கி ஒளிக்கரங்கள்
உயிர்
ஊடுருவும் இளங்காலையிலே
தனித்தனியாய்த் தலையசைக்கும் மலர்கள்
தாளமிடும் மனச்சோலையிலே
சதங்கை யணிந்து நடப்பவளே
சாட்சி சொல்ல வா

காதலே ஓ காதலே
கவிதையாக வா - ஒரு
பாடலாகப் பயணம் செல்லப்
பாதை செய்து தா

காலன் அழைக்க வரும் போதும்
கவனமாக வரவேண்டும் - உன்
காலடி ஓசையில் கண் மலரும் - இசைப்
பாடலில் மயங்கி விழ வேண்டும்
நீல விழிகளிலே - எழிற்
கோலம் வரைபவளே

காதலே ஓ காதலே
கவிதையாக வா - ஒரு
பாடலாகப் பயணம் செல்லப்
பாதை செய்து தா

நெஞ்சில் இசை கொஞ்சும் வரை
நீயும் நானும் வேறில்லை
எண்ணங்களில் வண்ணங்களை
எழுதும் வரைகண் நீரில்லை
காதலே ஓ காதலே
கவிதையாக வா - ஒரு
பாடலாகப் பயணம் செல்லப்
பாதை செய்து தா

*21.05.2018*

## 157. அமர கவிதை

இது
வினோதமான கதை - நெஞ்சில்
விழுந்ததோர் அமர விதை

எத்தனைச் செடி, கொடி, மரங்களிதில்
எழுந்து சிரித்தாலும்
அத்தனைக் கும்பின் ஓரணு வாய்நெஞ்சில்
அமர்ந்திருக்கும் விதை - மீண்டும்
அவதரிக்கும் கவிதை
(இது வினோதமான)

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் முன்பு
நடந்து முடிந்ததெல்லாம்
கண்டு வரத்தேர் கொண்டுவரும் - ஒரு
பாதையும் ஆகும் கலை
பயின்றதே இந்த விதை
(இது வினோதமான)

புதுயுகம் ஒன்று புதைந்திருக்கும் - அதை
மலரச் செய்யும் கணம் மறைந்திருக்கும்
எதுவந்த போதும் நிலை குலையாமல்
எதிர்த்து நிற்கும் வரை - என்
றென்றும் துளிர்க்கும் விதை
(இது வினோதமான)

நீயும் நானும் இதிலிருந்தே
நேற்றுப் பிறந்தோம் நினைவிழந்தோம்
மாயும் போது மீண்டுமிதில்
சங்கமிப்போம் இது சத்தியமே
நம்
சரிதங்கள் எல்லாம் நித்தியமே
(இது வினோதமான)

*31.05.2018*

## 158. நானா வைத்தேன் இந்த நெருப்பை

நானா வைத்தேன் இந்த நெருப்பை
தானாய் எழுந்த தழலிது
கண்ணும் கண்ணும் சந்தித்த
ஒற்றைக் கணத்தில் பற்றியது

மானா டுவதால் மயிலாட
மயிலா டுவதால் குயில்பாட
குயில்பா டுவதால் கானகமே
பற்றிக் கொண்டு தழலாட - அட
நானா வைத்தேன் இந்த நெருப்பை
தானாய் எழுந்த தழலிது

வானா மண்ணா எதுமூலம்
வளியா ஒளியா வர்ணஜாலம்
மனமாய் இருந்த என்னை - நந்த
வனமாய் மாற்றிச் சூடேற்றி
வளரும் நெருப்பிது
கனவில் இருந்து கண்மலர்ந்து
கவிதையாகப் பண்சுமந்து
கலகலக்கும் மொழியிது
மொழியில் நெருப்பை மூட்டியவர் யார்
முன்னொரு பிறவியில் தேடுகிறேன்
விழியில் சுடரை ஏற்றியவர் யார்
வியந்து கொண்டே பாடுகிறேன்

*04.06.2018*

## 159. நான் பாட்டாளி

படைப்புத் தொழிலில் பங்கேற்பதால் நான் பாட்டாளி
உலகம் படைக்கும் ஒருதனி முதல்வன் கூட்டாளி

வார்த்தைகளாம் பல செங்கல் அடுக்கி
மாளிகை எழுப்புகிறேன்
கற்பனையால் பல சிற்பம் செதுக்கி
உள்ளே நிரப்புகிறேன்
வருபவர்க் கெல்லாம் பன்னீர் தெளித்துச்
சந்தனம் பூசிவிடச்
சூரிய சந்திர சோதரரை நான்
வாசல் அமர்த்துகிறேன்

படைப்புத் தொழிலில் பங்கேற்பதால் நான் பாட்டாளி
உலகம் படைக்கும் ஒருதனி முதல்வன் கூட்டாளி

காக்கும் தொழிலிற் கைகொடுப் பதனால் காவல்காரன்
உலகு புரக்கும் கடவுளுக் கேநான் உற்ற தோழன்

கனவு நெருப்பை அணைய விடாமல்
ஊதி வளர்க்கின்றேன்
களவு பொய் கர (வு) அண்டவிடாமல்
காவல் இருக்கின்றேன்
உணர்வுக் கூர்மை மழுங்கி விடாமல்
சாணை தீட்டுகிறேன்
உள்ளொளி யேயென் சொல்லொலி யாயுரு
மாற்றிக் காட்டுகிறேன்

காக்கும் தொழிலிற் கைகொடுப் பதனால் காவல்காரன்
உலகு புரக்கும் கடவுளுக் கேநான்
உற்ற தோழன்

அழிக்கும் தொழிலின் ஆவேசத்தில்
பங்காளி - நான்

உருத்திரனோடு தாண்டவமாடும்
கங்காளி

தீய சக்திகள் எழும் போதவற்றை
எரிக்கும் தீப்பந்தம்
அச்சத் திரையைத் தீக்கிரையாக்கும்
பாடல்களின் சந்தம்
மாயையழித்துத் தெளிவிக்கும்
மகோன்னதக் கவிதை
வாசலில் வந்தெதிர் பார்த்திருக்கும்
மகிழ்வுடன் உன்வரவை

அழிக்கும் தொழிலின் ஆவேசத்தில்
பங்காளி - நான்
உருத்திரனோடு தாண்டவமாடும்
கங்காளி

மூன்று தொழிலும் எனக்குண்டு
முழுமுதற் கடவுள்போல்
சான்று தேவை என்றால் பாட்டுத்
தேரில் ஏறிக்கொள்

*04.06.2018*

## 160. எல்லாம் அவனே

மூச்சிலும் பேச்சிலும்
ஒவ்வொரு செயலிலும்
முன்னின் றழைப்பவன் ஸ்ரீராமன் - புன்
முறுவல் இழைப்பவன் ஸ்ரீராமன்

ஆச்சர்ய மானவன் அற்புத மானவன்
அதிசய மானவன் ஸ்ரீராமன்
அருளின் வடிவம் ஸ்ரீராமன் - பே
ரருளின் வடிவம் ஸ்ரீராமன் (மூச்சிலும்)

ஆதிப் பரம்பொருள் ஜோதியும் அவனே
அரசர்க்கெலாம் அரச நீதியும் அவனே
வீதியில் நடந்த விநயம் அவனே
விதிதவ றாத அமைதியும் அவனே (மூச்சிலும்)

கல்லணையிலும் பாம்பணையிலும் கம்பன்
சொல்லணையிலும் துயில் கொண்டவன் அவனே
எல்லாம் அவனே எதிலும் அவனே
நில்லா உலகின் நிலைக்களம் அவனே
கல்லால மரத்தின் கீழமர்ந்தெதுவும்
சொல்லாமல் உணர்த்திய சூட்சுமம் அவனே
காண்டீபன் நெஞ்சில் பேரொளி கூட்டிச்
சொல்லால் உணர்த்திய சாரதி அவனே (மூச்சிலும்)

*04.07.2018*

## 161. தெய்வத்தில் பேதம் இல்லை

பொட்டல் புதூருல அல்லாவின் புகழைப்
பாடினவன் என் பாட்டனடா - அந்த
எட்டயபுரத்தான் வழியினிலே
வந்தவன் தானிந்தப் பேரனடா

மக்தலேனாவை மொதமொதலா
சக்தியென்றான் அந்த மாக்கவிஞன் - நான்
மத்தவர் மனசைப் புண்படுத்தாம
பாடுற வீதிப் பாடகன்

கோவிந்த சிங்கின் கால்சாவைக்
கொண்டாடினான் அவன் பாட்டாக
தெய்வத்தில் பேதம் இல்லையென்ற
தெளிவுடன் வாழ்வோம் கூட்டாக

*26.07.2018*

## 162. காதலியே ஓ காதலியே

காதலியே உயிர்க் காதலியே - உன்
காதருகே என் பாடல் வரும்
சத்தமில்லாமல் முத்தம் தரும்- உன்
கன்னங்களில் ஒரு கோலமிடும்
(காதலியே உயிர்க் காதலியே)

காற்றும் சொல்லும் கலந்துவரும் - ஒரு
கணம் அதில் மௌனம் மிதந்துவரும்
தோற்றங்களாய்ப் பல கற்பனைகள்
தொடர்ந்துவரும் ஒளி படர்ந்துவிடும்
(காதலியே உயிர்க் காதலியே)

தேகமில்லாமல் சங்கமிக்கும்
யோகமிது வைபோகமிது
தேவதைகள் வந்து நீராடும்
சலனமில்லாத ஓடையிது
ஏகாந்தத்தின் மேடையிது
(காதலியே உயிர்க் காதலியே)

*05.08.2018*

## 163. நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்!

நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்
நன்மையும் தீமையும் யார் செயலோ
இந்த
நாடகமே வெறும் ஒளி நிழலோ

நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்

வானும் புவியும் வளரும் வெளியும்
காணும் கனவும் கற்பனையும்
ஏனோ எதுவும் நிலையில்லை - ஓடும்
எண்ணங்களாலே நெய்த வலை

நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்

தேடும் பொழுதோ வெளிச்சமில்லை
திரையோ சிறையோ தெரியவில்லை
பாடும் பொழுதே பரவசம் ஆகும்
பாவனைக் கெதுவும் குறைவில்லை
தெளியும் தருணம் நானில்லை - அதில்
தெளிவைத் தவிர வேறில்லை

நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்

*01.09.2018*

## 164. என்னையள்ளித் தின்றவள்

அவனுமாகி அவளுமாகி நின்றவள் - பின்
அதுவுமாகி இதுவுமாகிச் சென்றவள்
கவணுமாகிக் கல்லுமாகி வென்றவள் - ஒரு
கவிதையாகி என்னையள்ளித் தின்றவள்
(அவனுமாகி)

உச்சிவானை அலங்கரிக்கும் ஒளியின் ஊற்றவள்
உலகு முழுதும் சுற்றி வந்து
சுழலும் காற்றவள்
அச்சமென்ற நோயகற்றும் மருத்துவச்சியாம்
அறிவுக்குப் புலப்படாமல்
ஆடும் பிச்சியாம்
(அவனுமாகி)

ஜாதியில்லை சமயமில்லை சத்தியத்திலே
ஆணும் பெண்ணும் சரிசமம் சமத்துவத்திலே
ஓதும் மந்திரங்களை
மனம் கடந்ததே
உண்மை யாக மட்டும் நெஞ்சில்
ஒளி படர்ந்ததே
(அவனுமாகி) *07-09-2018*

## 165. மலரட்டும் கவியே

செந்தாமரையில் பொன்னோவியமாய்
அமர்ந்திருப்பவளே
சிந்தா மணியே உன் தாளிணையே
சரணம் திருமகளே
என்நா விலுமொரு செந்தாமரையாய்
மலரட்டும் கவியே

(செந்தாமரையில்)

என்றோ பிறந்தேன் எங்கோ வளர்ந்தேன்
என்றாலும் மறவேன் - நான்
என்றும் உன்மகனே

(செந்தாமரையில்)

மாலவனின் மணி மார்பினிலே - அணி
யாக விளங்கிடும் பேரெழிலே
மங்கையர் முகங்களில் மங்கலமாகக்
காட்சி தரும்சுடர்ப் பேரொளியே
ஆரமுதாய் வருவாயெனவே - உயிர்
ஆழியைக் கடைகின்றேன்
அனுபவமாய் நீ எழுந்துவந் தால்நான்
அதிலே கரைகின்றேன்

என்நா விலுமொரு செந்தாமரையாய்
மலரட்டும் கவியே

(செந்தாமரையில்)

*08.09.2018*

## 166. பாரில் அதிசயம் பாரதி

பாரில் அதிசயம் பாரதி
பாட்டிலும் ஏட்டிலும் வீட்டிலும் நாட்டிலும்
பற்ற வைத்தாயொரு கோபத்தீ
பாட்டாளிகளின் தலைவன் நீ - நல்ல
பண்பாட் டுக்கொரு புலவன் நீ
பாரில் அதிசயம் நீ

நெருப்பை அள்ளிப் பருகியதும் - ஏழை
மக்களுக் காகநீ உருகியதும்
ஒவ்வொரு சொல்லிலும் உணர்ச்சியை ஏற்றிக்
கவிதைக ளாக எழுதியதும்
அன்றறியாத உலகம் இன்றோ - உன்னை
அமர கவியென்று போற்றிடும் அன்றோ

பாரில் அதிசயம் நீ

பசிநெருப்போ உன் வயிற்றினிலே - பல
பரிகசிப் போவுன் செவிகளிலே
அதையும் மீறி உலகை யாளும்
புது நெருப்போவுன் விழிகளிலே - உன்
சதையெலும் பெல்லாம் தீயுண்ட பின்னும்
சுடர்கின் றாயெம் இதயத்திலே
பாரில் அதிசயம் நீ

பாரில் அதிசயம் பாரதி
பண்ணிலும் கண்ணிலும்
மண்ணிலும் விண்ணிலும்
படரும் ஒளியுன் ஞானத்தீ
பாரில் அதிசயம் பாரதி

*11.09.2018*

## 167. நீயாகி மறைகின்றேன்

தினம்தோறும் இசையாக வருகின்றேன் - உன்
கனவுக்குள் கனவாக
நுழைகின்றேன்
நானாக நானின்றிக்
கரைகின்றேன் - ஒரு
கணமேனும் நீயாகி
மறைகின்றேன்
(தினம்தோறும்)

பனிசிந்தும் துளியாகப் படர்கின்றேன் - புல்
நுனிமீதும் இலைமீதும் அமர்கின்றேன்
நீரோடை யில்நீந்தி
நனைகின்றேன் - சுடு
நெருப்புக்குள் பொறியாகச்
சுடர்கின்றேன்
(தினம்தோறும்)

மனம்வேறு பட்டாலும் உணர்வொன்றுதான் - சில
மாற்றங்கள் இருந்தாலும்
நாமொன்றுதான்
வண்ணங்கள் பலகூடும்
திரையொன்றுதான்
சொற்கோலம் வரைந்தாலும்
ஸ்ருதியொன்றுதான்
(தினம்தோறும்)

*16.09.2018*

## 168. பாட்டிசைத்தால்...

காற்றடித்தால் கருமேகம் கலையும்
பாட்டிசைத்தால் மன பாரம் குறையும்
நேற்றைய துயரங்கள் நீர்த்துளிகள் - இன்று
நெஞ்சிசைக்கும் நல்ல வாழ்த்தொலிகள் (காற்றடித்தால்)

சேற்றில் மலரும் செந்தாமரை போல் - மனச்
சிதிலத்தில் அமைதி மலர்ந்திடலாம்
ஆற்று மணலில் கட்டிய வீடு
ஆனாலும் சுகம் உண்டு நீ பாடு (காற்றடித்தால்)

தோட்டத்தில் உள்ள பூக்களெல்லாம்
தோழமையோடு வரவேற்கக்
கூட்டிலிருந்து வெளியேகிப்
பறவைக் கூட்டம் குரல்கொடுக்கப்
பாட்டிசைப் பாயென்று பனித்துளிகள்
பரவசத்தோடு காத்திருக்க
வாட்டம் எதற்கு வார்த்தைகளால் - ஒரு
வாகனம் செய்துநீ பறந்திடலாம்
வானும் கடலும் வழிவிடலாம் (காற்றடித்தால்)

*12.10.2018*

## 169. மதுராபுரித் தாய்

முத்தம் தந்தாய் முறுவலித்தாய்
முத்தமிழாயென் சித்தம் கலந்தாய்
தத்தும் கிளியாய்த் தோளமர - இடம்
தருவாய் நீ மதுராபுரித்தாய்
(முத்தம் தந்தாய்)

பற்றித் தொடரும் பழவினைகள்
இற்று விழஉன் விழிச்சுனைகள்
சற்றே கருணை பொழியட்டுமே
சங்கமம் இன்றே நிகழட்டுமே
(முத்தம் தந்தாய்)

முத்துமாலை கேட்கவில்லை
முக்தியில் கூட வேட்கையில்லை
முன்னை வினையால் உன்னைப் பிரிந்து
மூழ்கிக் கொண்டே முனகுகிறேன்
மீட்சி பெறவே பாடுகிறேன்
குத்துவிளக்கின் திரிமேலே
குந்தியிருக்கும் சுடர்போலே
தத்தும் கிளியாய்த் தோளமரும் - வரம்
தருவாய் நீ மதுராபுரித்தாய்

என்
நாவையசைத்துச் சுழற்றுகிறாய்
நானும் கவிதை மிழற்றுகிறேன் - எந்
நாளும் கவிதை மிழற்றுகிறேன்

*13.10.2018*

## 170. கேட்காத பாடல்

இதுவரை யாரும் கேட்காத பாடல்
விழியிலிருந்தொரு நீர்த்துளி பிறந்து
விழுந்திடும் முன் தன் இதயம் திறந்து
மௌனத்தில் இசைக்கின்ற கீதம் - மன
வெளியெங்கும் அலைமோதும் ராகம்

கனவும் நினைவும் கலந்தொரு சிமிழில்
உருவானவனா நான்
கனமானவனா கனம்தாங்காமல்
கணத்தில் உடையும் வெறுமை தானா
(இதுவரை)

சுகமென்றாலும் துயரென்றாலும்
முகமலரில் ஒரு பனித்துளியாய்
அகத்தில் உள்ள அனைத்தையுமே - ப்ரதி
பலிக்கின்ற பேரொளியாய்
ஒரு கணமே நான் வாழ்கின்றேன்
உண்மையை நெஞ்சில் சுமக்கின்றேன்
உண்மையை நெஞ்சில் சுமந்தபடி
மறுபடி மறுபடிப் பிறக்கின்றேன் - ஆழ்
மனத்தின் கதவைத் திறக்கின்றேன் (இதுவரை)

*19-10-2018*

## 171. பல்லக்கில் பாரதி

கருப்புக் கோட்டு முறுக்கு மீசை
செவப்புப் பொட்டு நெத்தியில
நெருப்புப் போல ஜொலிக்கும் பார்வை
நெலச்சு போச்சென் புத்தியில
எட்டயபுரத்து மவராசன்
எழுந்து வராண்டா - நாம
எடுத்துச் சொமக்கும் பல்லாக்குல பவனி வராண்டா

பாட்டுப் படிக்கும் கூட்டத்துக் கெல்லாம்
தலைவன் எங்க குலச்சாமி
பறையடிச்சு சொல்வோம் - இது
பாரதி பொறந்த பூமி
(எட்டயபுரத்து மவராசன்)

வெடிமருந்த பதுக்கி வச்சு விதவிதமா பாட்டுக்கட்டி
வெள்ளையன எதுத்து நின்னான் கருப்புச்சாமி
துடிதுடிக்கும் தோள்களுக்குத் தோதாக மெட்டுப் போட்டுத்
தந்தவனின் வார்த்தையெல்லாம் நெருப்புச் சாமி - அதைப்
பரவச் செய்ய வேணும் நம்ம பொறுப்புச் சாமி
(எட்டயபுரத்து மவராசன்)

*05-11-2018*

## 172. நம் தெய்வங்கள்

மதுரைவீரன் மதுரைவீரன்
மதுரைவீரன் வந்தாரு
மணியாச்சி டேசனிலே
வாஞ்சிநாதன் என்றாரு

குதுரை மேல ஏறி வீர
சாமுண்டி வந்தாளே
குழந்தையத்தன் முதுகில்கட்டி
ஜான்ஸி ராணி என்றாளே

கையில் சூலம் ஏந்தும் நம்ம
ஐயனாரு வந்தாரு
கயத்தாறு தூக்கு மேடை
கட்டபொம்மன் என்றாரு

கோல விழி மாரியம்மா
கோவமாக வந்தாளே
வேலு நாச்சியாக வந்து
வாளெடுத்து நின்னாளே

தண்டபாணி பழனிமலை
திருக்குமரன் வந்தாரே
தடியடியத் தாங்கிக்கிட்டும்
கொடிபுடிச்சு நின்னாரே

தலைவருன்னா தலைவர் இந்த
வீரர் தானுங்க -
இவங்க
எல்லாரும் தெய்வங்களின்
வடிவு தானுங்க - நாம
கும்பிட்டா நாட்டுக்கே
விடிவு காலங்க *05.11.2018*

## 173. தீபாவளி உரையாடல்

ஏ மச்சான்!
லச்சணமா புத்தாடை
உடுத்திக்கிட்டோமே
பச்சணம் பலகாரம்
அடுக்கி வச்சோமே
சரவெடிகள் மத்தாப்பு
கொளுத்திப் புட்டோமே
பரபரன்னு தீபாவளி
நடத்திப்புட்டோமே
.......

ஏ புள்ளே!

புத்துணர்வை நெஞ்சுக்குள்ள உடுத்திக்கிட்டோமா
பாட்டு கதை காவியங்கள்
படிச்சுக்கிட்டோமா
தீய குணக் குப்பையெல்லாம்
கொளுத்திப்புட்டோமா
தீவாளியால மனசு
திருந்திப் புட்டோமா
......

ஏ மச்சான்!

புத்தம் புது சினிமாவைப்
பாக்கப் போனோமே - வெல
கூட தந்து டிக்கெட்டு வாங்கிப்
பாத்து வந்தோமே
குழந்தை குட்டியோட மாலு
சுத்தி வந்தோமே
கொழுந்தன் வீட்டில் விருந்து முடிச்சி
வீடு வந்தோமே
.....

ஏ புள்ளே !

அக்கம் பக்கம் ஒத்துமையா
பழகிப்புட்டோமா
அத்தை மாமி உறவை எல்லாம்
அனுசரிச்சோமா
உள்ளத்துல கள்ளமின்றி
நடந்துக்கிறோமா
ஊரு ஜனம் வாழ உப
காரம் செஞ்சோமா...

*07.11.2018*

## 174. தீபம் நீதானே!

தேடும்
நெஞ்சில் தீபம் நீதானே - எழில்
கொஞ்சும் சிலையும் நீதானே - எந்
நாளும் என்னை ஆளும் தெய்வம்
நான் வணங்கும் மீனாட்சி - உன்
னாலென் நாவில் ஒவ்வொரு கணமும்
பாடல் பாடல் தேனாட்சி
கூடல் நகரின் மீனாட்சி

பிள்ளைத் தமிழின் கொள்ளை அழகே
கிள்ளை தத்தும் தோளுடையாய்
மிச்சம் மீதி யாசிக்கும்
உச்சிஷ்டை எனும் பேருடையாய்
வெள்ளப் பெருக்கைப் போலே கலைகள்
மேவச் செய்யும் மாதங்கி
வீணையேந்தும் ஷ்யாமளை - கவி
விளையுமா உன் அருளின்றி
(தேடும்)

பாடுபொருள் நீ பாடும் குரல் நீ
பாதை நீ வழித்துணையும் நீ
பார்வை நீ விழி நீ ஒளி நீ
ஒவ்வொரு கணமும் ஜனனீ
ஏடு தந்தாய் எழுதச் செய்தாய்
எழுதுகோல் நீ எழுத்தும் நீ
இடையொ சிந்து நிற்கும் வடிவே
இறைவன் எழுதும் உயிரோவியமே
(தேடும்)

*16.12.2018*

## 175. சுப்பு போட்ட பொங்கல்

(1940–களில் பொங்கல் திருநாளுக்காகக் கொத்தமங்கலம் சுப்பு ஆனந்த விகடனில் எழுதிய அருமையான பாடலைப் படித்ததும் நான் பாடிய பாடலிது.)

உப்புப் போட்ட பொங்கல் மறு நாள் புளிக்குமே - எங்க
சுப்பு போட்ட பொங்கல் - எந்
நாளும் மணக்குமே

கல்லும் மண்ணும் கலக்காத - நல்ல பொங்கலாம்
சொல்லும் பொருளும் சேர்ந்து சொக்க
வைக்கும் பொங்கலாம்
(உப்புப் போட்ட)

தப்புத் தாளம் தட்டாத
தேசபக்தியும்
தமிழ்மணக்கும் வெள்ளித்தாம்
பூலப் பெட்டியும் - சேரி
குப்பத்திலும் உணர்ச்சி வரப்
பாடும் சக்தியும் - நம்ம
சுப்பு வாக வந்த ஊரு
கொத்த மங்கலம் - அவர்
நாட்டுப்புறப் பாட்டுணர்ச்சி
யூட்டும் மந்திரம்
(உப்புப் போட்ட)

*16.01.2019*

## 176. செல்பேசி என் தோழி

என்னோடு நான்பேச
நேரமின்றிப் போனதே
எப்போதும் செல்பேசி
என்தோழி யானதே

விண்ணோடு விளையாடும் வெண்ணிலவைக் கூடநான்
கண்ணோகக் கைத்திரையில் கண்டு களிக்கின்றேன்
(என்னோடு)

காலை எழுந்தவுடன் நட்பு - பின்பு
கலகலப்பாய்க் கொஞ்சம் அரட்டை
மாலை முழுதும் பழிச்சண்டை - என்று
வழக்கப் படுத்திக் கொண்டோமே
(என்னோடு)

காதல் மனைவியோ மழலைச் செல்வமோ
காண வரும் விருந்தாளிகளோ
எதுவும் வேண்டேன் வேறெதையும் தீண்டேன்
எப்பொழுதும் என்கையில் செல்பேசி
உலகு முழுதும் நான் உலவி வருகையில்
(என்னோடு)

நில் தோழி ஒரு நிமிடம்
நேற்றைய வாழ்வை மாற்றியவள் நீ
செல் தோழி விட்டுச் செல் தோழி
உன்னையும் புறக்கணிக்க இன்னாருத்தி வருவாளே.
(என்னோடு)

*23.01.2019*

## 177. எத்தனை நாட்கள் காத்திருப்பானோ?

**(நடிகர் பிரபு அனுப்பியிருந்த Tobby Keith's "Don't let the olde man in") என்ற ஆங்கிலப் பாடல் வீடியோவைப் பார்த்தேன். அந்தப் பாடலைக் கேட்டதும் என்னுள் எழுந்த ஒரு பாடல்)**

எத்தனை நாட்கள் காத்திருப்பானோ
அழைத்துச் செல்ல - என்னை
அழைத்துச் செல்ல - ஒரு
பித்தனைப் போன்ற அவன் பிடிவாதத்தை
என்ன சொல்ல - நான்
என்ன சொல்ல

வார்த்தைகள் நெஞ்சில் ஊறும் வரை - கதை
வகை வகை யாகக் கூறும் வரை - விழித்
திரையில் வண்ணங்கள் சேரும் வரை - இந்த
தீபத்தில் எண்ணை தீரும் வரை
எப்படிச் செல்வேன் இது தெரியாதா - என்ன
எடுத்துச் சொன்னாலும் புரியாதா
(எத்தனை நாட்கள்)

அவன்நிழல் நெஞ்சில் விழும்பொழு தெல்லாம்
அச்சம் எழுந்தது நேற்றுவரை
அது சற்று நீண்டு செல்கிறதே
இன்றென் மூச்சுக் காற்று வரை
அச்சமில்லை இன்(று) அவனுடன் செல்ல - ஓர்
அவசரம் இல்லையினி
அவனுடன் சற்றுரையாடத் துணிந்தேன் - பின்
தொடர்வேன் எனது பணி
(எத்தனை நாட்கள்)

*19.02.2019*

## 178. வீதிக்கு வீதி பாடுவோமே

வீதிக்கு வீதி பாடுவோமே
இது பாரத தேசமென்று
வீரத்து டன்மெய் ஞானம் கலந்து
விளைந்த பூமியென்று
(வீதிக்கு வீதி)

வஞ்சகத் தால் நம் மக்களை மாய்க்கும்
வன்கொடுமைப்பேயை
வதம்செய்யத் துணிந்தோம்
வலிமையை உணர்ந்தோம்
வாழ்க பாரதமே
(வீதிக்கு வீதி)

நீதிக்காகத் தன் மகனைத்
தானே கொன்ற மன்னவனும்
பறவைக்காகத் தன் தசையைத்
தானே அறுத்துத் தந்தவனும்
வேதக் கனலின் வீச்சினிலே
வியன் உலகெல்லாம் அளந்தவனும்
வாழ்ந்த நாடெனவே - இன்று
வணங்கிப் பாடுவோமே
(வீதிக்கு வீதி)

ஏகன் அனேகனைத் தொழுவோர் நெற்றியில்
திருமண் ஆவதிந் நாடு
எரித்தாலும் அன்றிப் புதைத்தாலும் நம்மை
ஏற்றுக்கொள்ளும் மண்கூடு
தேகபலத்துடன் ஆன்ம பலத்தையும்
சேர்த்து வளர்த்திடுவோம் - இந்த
தேசத்துக்கே நம் உடல் பொருள் ஆவி
அத்தனையும் தருவோம்.
(வீதிக்கு வீதி) *27.02.2019*

## 179. நானேதான் அவளோ!

நட்சத்ர மாலை புரளும் தோள்கள்
நயனங்களாய்ப் பல்லாயிரம் கோள்கள்
நீலச் சேலை நிலவு முகம்
பெருமழை பொழியும் கருணை மனம்
யாரிவள் மோகினியோ - என்
வானம் ஆனவளோ - இங்கு
நானே தானவளோ

ஒவ்வொரு சொல்லிலும் ஒரு சுடரேற்றி
வெவ்வேறாக வடிவங்கள் மாற்றி
ஆயிரம் பெயரில் அழைத்துப் போற்றி
ஆலத்தி ஏந்திய பின்னும் - கண்ணில்
அகப்படாமல் இன்னும்
போக்குக் காட்டிக் கொண்டே யிருக்கும்
புதிரா பெருவெளியா - என்றும்
உதிரா மலர்ச்சரமா

இரவகலாத வைகறைப் போதில்
இதயத்துள் மிக நெருங்கி வந்து
குழந்தை போலமர்ந்து கொண்டு - ஊம்
கொட்டிக் கொண்டே கவிதை கேட்கும்
சுட்டிப் பெண்ணா சுந்தரியா
மேகப் போர்வை மெல்ல நீக்கி
எட்டிப் பார்க்கும் எழிலோவியமா - என்னை
அருந்தி அருந்தி வளர்பவளா
என்னுள் தினமும் மலர்பவளா
அட
தேவி, சக்தி, தெய்வம் இவளா

(நட்சத்ர மாலை) *08.03.2019*

## 180. தேசிகன் யாரோ!

கார்முகில் கேசம் - விண்
பூக்களின் வாசம்
யார்முகம் தோன்றி
நிலாவொளி வீசும்

யாத்திரை போகிற
தேசிகன் யாரோ
ராத்திரி நேரத்து
யாசகன் தானோ
யாழிசையோ அவன் வாசிப்பதோ - என்
ஓருயிர்தான் அவன் யாசிப்பதோ
(கார்முகில்)

நேற்றைய கனவின் நீட்சியிதோ - உயிர்
நித்திரையில் வரும் காட்சியிதோ
பனித்திரை விலக்கிப் பகலவன் வருமுன்
பாவனையாய் வந்த ஒளிச்சுடரோ

கண் மயக்கம் தரும் காதலனோ
பண் மயக்கம் தரும் பாவலனோ
(கார்முகில்)

அஞ்சன வண்ணன் - பால்
ஆழியில் துயில்வோன்
திருக்கரமேந்தும் சக்கரமோ
சிந்தா நதியின் கதியைச் சீர்மை
செய்ய வரும் ஒளிப்புஷ்கரமோ

கள்பொழியும் வெள்ளிப் பாற்குடமோ
கவிதைத் துளியின் வார்ப்படமோ
(கார்முகில்)

*17.03.2019*

## 181. நேரமில்லையோ?

நேரமில்லையோ - என்
நினைவலைகளைக் கொஞ்சம் நிறுத்தி வைத்து - உன்
நிலவு முகம்நடுவில்
மலர அருள்புரிய
நேரமில்லையோ

பாரமில்லையோ
பழவினைகளும் பந்த பாசமும் ஆசையும்
பாரமில்லையோ - நான்
சோர்ந்து விழுமுன்
தோள்களில் தாங்கிக் கொள்ள
நேரமில்லையோ

சாரமற்ற வார்த்தைகள் பேசி
சடங்குகளாகவே காலத்தைப் போக்கிச்
சதையெலும்பாய் நட மாடி ஓய்ந்து
சாய்வதற்கா இந்தப் பிறவி தந்தாய்
ஆன மட்டும் உன்னை அழைத்து விட்டேன்
அம்மா அம்மா என்றரற்றுகிறேன்
ஏனின்னும் தாமதம் ஏற்றுக் கொள்ள
ஏழிசையாய் என்னை
மீட்டி ஒளிமுகம் காட்டி அருளமு
தூட்டி அரவணைக்க
நேரமில்லையோ *23.03.2019*

## 182. என்னென்னவோ சொல்லிப் பார்த்தேன்...

என்னென்னவோ சொல்லிப் பார்த்தேன் - அவள்
கேட்கவில்லை
என்முகத்தை ஏறெடுத்தும் பார்க்கவில்லை
(என்னென்னவோ)

புன்முறுவல் எதற்கென்றும் புரியவில்லை
- என்னைப்
புண்படுத்தக் காரணமும் தெரியவில்லை
(என்னென்னவோ)

மேகங்க ளேகூந்த லாய்விரிக்கும்
மேனகை தானிவளோ
மின்னலி லேதுகில் அணிந்துகொண்டு
மினுக்கும் மோகினியோ
ராகங்கள் எல்லாம் நட்சத் திரங்களாய்
மலரும் தோட்டத்திலே
ரஞ்சனி யாயு லாவரு வாளிவள்
ராத்திரி நேரத்திலே
(என்னென்னவோ) *26.03.2019*

## 183. என்றும் முட்டாளுங்க...

இன்று மட்டுமா - நாம்
என்றும் முட்டாளுங்க

அடுக்கு மொழிப் பேச்சக் கேட்டு
அசந்து நின்ன முட்டாளுங்க
சினிமா பாட்டைக் கேட்டுப்புட்டு
ஓட்டுப் போட்ட முட்டாளுங்க (இன்று மட்டுமா)

அண்ணன் தம்பி அம்மா அப்பா
சித்தி வரைக்கும் ஒறவு சொல்லிக்
கண்கட்டு வித்தை காட்டி
புத்தியெல்லாம் மழுங்கடிச்சு
ஓட்டு வாங்கிப் பதவி பெற்றுச்
சொத்து சேர்த்துக் கொள்ளையடிச்ச
கூட்டத்தையே ஆளவிட்ட முட்டாளுங்க - சுய
கௌரவத்தைக் கோட்டை விட்ட முட்டாளுங்க முட்டாளுங்க
முட்டாளுங்க (இன்று மட்டுமா)

இலவசங்கள் வீசினாங்க பல்லிளிச்சோம்
இனமானம் பேசினாங்க சிலிர்த்துக்கிட்டோம்
சாதி சண்டை மூட்டினாங்க சிக்கிக்கிட்டோம் - மதச்
சாயத்தையும் பூசினாங்க அப்பிக்கிட்டோம்
(இன்று மட்டுமா)

சாராயம் பிரியாணிக் காசைப்பட்டு
யார்யாரோ தலைவருன்னு கோஷமிட்டு
இருநூறு முந்நூறு வாங்கிக்கிட்டு
இருந்ததெல்லாம் போதுமென்று ஒதுக்கித் தள்ளு
இனிமேலும் முட்டாளா ஆக மாட்டோம்
எஜமானர் நாங்களென்று புரிஞ்சுக்கிட்டோம்
அடிமைகளா இருந்த காலம் மாறிப்போச்சு - எங்க
அறிவுக்கும் புத்துணர்வு சேரலாச்சு
வேலை கேட்டு மனுப் போட்டு
வருபவனைக்
கேள்வி கேட்கத் துணிஞ்சுப் புட்டோம்
நிமுந்து நிப்போம்

*01.04.2019*

## 184. கோஷத்தை நம்பாதே!

கோஷத்தை நம்பாதே - இவுங்க
வேஷத்தை நம்பாதே
கோடிக்கணக்கில் செலவழிச்சு
வீடு வீடாப் போய்ப் பிச்சையெடுத்து
ஓட்டுக் கேட்டு ரவுசு பண்ணும்
கூட்டம் இந்தக் கூட்டம்
ஜெயிச்சுப்புட்டா எக்கச்சக்கமா
போடுவாங்க ஆட்டம்

தேசத்தையே நாசமாக்கத் துணிஞ்ச கூட்டமாம்
சொத்து சுகம் சேர்ப்பதில் தான்
இவுங்க நாட்டமாம்
காசு தர நீட்டும் கையை
வெட்டிப் போடுடா - பலி
ஆடு போல அடங்கிடாம
முட்டி மோதுடா
(கோஷத்தை)

ஜாதி மதம் பாஷை என்று
பிரிஞ்சு நிக்காதே - தன்
மானத்தையும் வாக்கையும் நீ
அடகு வைக்காதே
தலைவனுன்னு யாருமிங்கே
பொறந்து வர வில்லே
வேல கேட்டு வாரான் கேள்வி
கேட்டுப் பாருடா

ஜெயிச்சா என்ன செய்வே உன் தொகுதிக்கு
வாராவாரம் வருவியா
எங்க பகுதிக்கு
நாங்க தான் தலைவருங்க - நீ
வேலக்காரன்னு - கை
நாட்டு வச்சு எழுதிக் கொடு
அப்புறம் பாக்கலாம்

*01.04.2019*

## 185. தமிழில் வாழ்த்துகிறேன்

தமிழில் வாழ்த்துகிறேன் - உலகம்
தழைக்க வாழ்த்துகிறேன்
அமிழ்தின் இனியமொழி - உயிர்
அளாவும் பரிதியொளி
தமிழில் வாழ்த்துகிறேன் - உலகம்
தழைக்க வாழ்த்துகிறேன்

யாதும் ஊரென்(று) ஒலித்த குரல் - அலை
மோதும் தமிழில் வாழ்த்துகிறேன்
வாடும் பயிர்க்கு வாடிய உள்ளம்
பாடிய தமிழில் வாழ்த்துகிறேன்
தமிழில் வாழ்த்துகிறேன் - உலகம்
தழைக்க வாழ்த்துகிறேன்

ஆதி பகவன் முதலென் (று) உரைத்த
வேதத் தமிழில் வாழ்த்துகிறேன்
ஜாதிகள் இல்லை பாப்பா என்று
சாற்றிய தமிழில் வாழ்த்துகிறேன்

தமிழில் வாழ்த்துகிறேன் - உலகம்
தழைக்க வாழ்த்துகிறேன்
ஒவ்வொரு கணமும் புதிதாய்ப் பிறக்கும்
உயிரின் மொழியில் வாழ்த்துகிறேன்

*14.04.2019*

## 186. ப்ரேமையின் வடிவம்

[இசை மேதை ஓ.பி. நய்யரின் இசையில், “கல்பனா” என்ற படத்தில், முகமது ரஃபியும், மன்னாடாவும் சேர்ந்து பாடிய பாடல், “து ஹி மேரா ப்ரேம் தேவ்தா “. லலித் ராகத்தில், சிவன் பெயரில் ஓர் அற்புதமான பாடல், அது. என் இனிய நண்பன் ராஜு கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அப்பாடலைத் தமிழாக்கிய முயற்சி இது.]

நீயே எனது ப்ரேமையின் வடிவம்
நெஞ்சில் என்றும் ஆனந்த நடனம்
மலர் சிலம்படி வணங்குகிறேனே
மதிநதி விளங்கும் விரிசடையோனே (நீயே)

மான்மழு வொருகரம் காயழல் மறுகரம்
கடை விழி நோக்கில்மும் மலங்களும் திரிபுரம்
நானோ சிறுதுகள் உன்பதம் தேடி
அலைகின்றேனே ஜென்மங்கள் கோடி (நீயே)

டமடம டமருக ஒசையினாலே
சகல உலகையும் ஆள்பவன் நீயே
யமபயம் நீங்கத் தவநெறி ஓங்க
அரவணைக்கும் கருணாகரனே (நீயே)

*27.05.2019*

## 187. யாருக்கு யார் சொந்தம்?

யாருக்கு யார் சொந்தம்
யார் சொல்வது
நீருக்கும் நெருப்புக்கும் நெருங்கிய உறவு
நிலவும் கதிரும் சுழலும் உலகு - இதில்
யாருக்கு யார் சொந்தம்
யார் சொல்வது

பனித்துளி பூவுக்குக் கதவாகுமா - சின்ன
பனித்துளி பூவுக்குக் கதவாகுமா -
வண்டு
புகுந்திடத் தேன் அருந்திடத் தடையாகுமா
தனித்தனித் தீவுகள்
கடலொன்றுதான்
கோடிக்கோடி யண்டக்
கோள்களுலாவும்
திடலொன்றுதான் -
இதில்
யாருக்கு யார் சொந்தம்
யார் சொல்வது

மௌனமென் றொருகுகை
அதற்குள் ஏதுபகை
மனங்கள் பலவகை
என்றாலும் அடிப்படை
ஆதார ஸ்ருதியொன்றுதான்
அன்பே சிவம் என்ப தனுபவம்
ஆகிவிட்டால் நம்
கதியொன்று தான் - மத
மாச்சர்யம் இல்லாத
வழியொன்று தான்

இதில்
யாருக்கு யார் சொந்தம்
யார் சொல்வது
நீருக்கும் நெருப்புக்கும் நெருங்கிய உறவு
நிலவும் கதிரும் சுழலும் உலகு - இதில்
யாருக்கு யார் சொந்தம்
யார் சொல்வது

*22.06.2019*

## 188. டிஸ்னி உலகம்!

எங்கே மாயக் காலணிகள் ஓ
சின்ட்ரெலா - நீ
ஏறிச் செல்லும் தேருக்குப் பேர்
தென்றலா - ஓ
சின்டரேலா -
ஏழு
குள்ளர்கள் சேர்ந்து காவலிருக்கும்
வெண்பனியே
தூங்கும் எழிலே தரையைத் தொட்டுப்
புரளும் குழலே ரெப்பொன்ஸெல் - நீ
யாரோ எந்த ஊரோ வந்தென் எதிரில் நில்

டிஸ்னி உலகம் டிஸ்னி உலகம்
மெய்சிலிர்க்கிறதே- மன
பாரமெல்லாம் கரைந்து போக
வழியமைக்கிறதே

ஆலிஸ் கண்ட விந்தை உலகம் கண்ணில் தெரிகிறதே
மிக்கி மௌஸின் அட்டகாசம்
நெஞ்சில் நிறைகிறதே - சின்ன
மச்சக் கன்னியின் காதல் கண்ணீர்
வரவழைக்கிறதே - நனையும்
அச்சமில்லை மேரி பாப்பின்ஸ்
குடை விரிகிறதே

டிஸ்னி உலகம் டிஸ்னி உலகம்
மெய்சிலிர்க்கிறதே - மன
பாரமெல்லாம் கரைந்து போக
வழியமைக்கிறதே

மேக வாகனம் மின்னல் தோரணம்
விலங்குகளோடு தோழமை
அன்பே வெல்லும் என்றுணர்த்தும்
ஆண்டவனுடைய ஆளுமை
குழந்தைகள் எல்லாம் கொண்டாடும்
குதூகலம் இது - முதுமை
தொலைய வைக்கும் ஜாலம் - காலம்
கடந்து நிற்கிறது

டிஸ்னி உலகம் டிஸ்னி உலகம்
மெய்சிலிர்க்கிறதே - மன
பாரமெல்லாம் கரைந்து போக
வழியமைக்கிறதே *04.07.2019*

## 189. எங்கும் கண்ணன்

எங்கும் கண்ணன் எதிலும் கண்ணன்
ஏகாந்தம் கண்ணன்
என்னுள் ஓடும் எண்ணப் புனலில்
ஆகாயம் கண்ணன்
ஏகாந்தம் கண்ணன்
ஆகாயம் கண்ணன்

பொங்கும் அமுதக் குடமாய் நிலவுப்
பூரணமும் கண்ணன்
பூத மைந்தாய்ப் பிரிந்திருக்கும்
காரணமும் கண்ணன் - பரி
பூரணமும் கண்ணன் - முதற்
காரணமும் கண்ணன்

வேரும் மரமும் மலரும் கனியும்
வெகுமாயக் கண்ணன்
ராதா கண்ணன் பாமா கண்ணன்
ரகுமாயி கண்ணன் - அவன்
வெகுமாயக் கண்ணன் - ஹரி
ரகுமாயி கண்ணன்

தேரும் தடமும் சகடச் சுழலும்
சாரதியும் கண்ணன் - வெவ்
வேறாய்த் தோன்றி விளையாடியவன்
பாரதியின் கண்ணன் - பார்த்த
சாரதியும் கண்ணன் - எங்கள்
பாரதியின் கண்ணன் *23.08.2019*

## 190. செல்ஃபோனால்

('பெண்போனால்' என்ற திரைப்பாடல் மெட்டுப் போல...)

செல்ஃபோனால் - இந்த செல்ஃபோனால் - உல
கெங்கெங்கும் என் சொல் போகும்
செல் போனால் - இந்த
செல் போனால்
- செயல்
இல்லாத மௌனம் உருவாகும்

பாதி நேரமென் கையில் வைத்து
மீதி நேரமென் பையில் வைத்து
பையில் வைத்ததும் பைத்தி
யத்தைப்போல்
கையில் எடுப்பேன் - அதைத்
தட்டிக் கொடுப்பேன்
(இந்த செல்ஃபோனால்)

தன்னைத் தானே படமெடுத்து
லைக்குகள் ஆயிரம் எதிர்பார்த்துப்
போட்டவுடனே நோட்டம் விட்டுக்கண்
பூத்திருப்பேன் - நான்
காத்திருப்பேன்

நண்பர்கள் என்று சொல்லிக் கொண்டு
நாலாயிரம் பேர் வருவதுண்டு - அவர்
வந்த உடனே என் சொந்த பந்தங்கள்
கண்ணில் தெரியாமல் போவதுண்டு
(இந்த செல்ஃபோனால்) *25.08.2019*

## 191. முற்றும் இழக்கும் மனத்துணிவு

கதிமாறாமல் சுழலும் - இந்தப்
புவியால் தானே இரவும் பகலும்
விதியின் கதியில் பயணம் - செய்தால்
எதுவும் இங்கே மிகவும் சுலபம்
(கதி மாறாமல்)

நதியின் ஓட்டம் போலே - வாழ்க்கை
நடக்கும் மேடு பள்ளங்களாலே
எதிர்த்துச் செல்வது கடினம் - இறைவன்
தூதர்களால் மட்டும் அது முடியும்
(கதி மாறாமல்)

பக்தி யென்றொரு புணையிருந்தால் - ஒரு
பயமிலாமல் கரை சேர்ந்திடலாம் - வெறும்
புத்தியை நம்பி மூழ்கிட வேண்டாம் - ஐம்
புலன் வழியோடி அயர்வுற வேண்டாம்
முக்தி என்பது ஒரு முனைப்பு - தன்னை
முற்றும் இழக்கும் மனத்துணிவு
(கதி மாறாமல்)

*27.08.2019*

## 192. ஆசிரியர்க்கே நம் முதல் வணக்கம்

ஆசிரியர்க்கே நம் முதல்வணக்கம் - நம்மை
ஆளாக்கி அறிவை ஒருசுடர்
வாளாக்கி ஆணவத்தைத்
தூளாக்கிப் பண்பாடு துளிர்க்கச் செய்யும் - நல்
ஆசிரியர்க்கே நம் முதல்வணக்கம்

வாசிக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி - நம்
வாழ்க்கைப் பயணத்தை நெறிப்படுத்தி - எதையும்
நேசிக்கும் பண்பை நிலைநிறுத்தி
- நெஞ்சின்
நிழலாய் உடன் வரும் குருபரராம்
(நல் ஆசிரியர்க்கே நம் முதல்வணக்கம்)

மாணவர்கள் மென்மேலும் உயர்ந்து செல்ல
ஏணிகள் ஆனவராம்
இன்பதுன்பக் கடல்கடந்து கரை சேரத்
தோணிகள் ஆனவராம்
ஈசனுக்கும் உபதேசம் தர மகன்
ஆசான் ஆன துண்டு
யாவருக்கும் இங்கு ஆசிரியர் தேவை - அவர்
செய்வது தான் தொண்டு
(நல் ஆசிரியர்க்கே நம் முதல்வணக்கம்)

*29.08.2019*

## 193. வாடகை தருவாயா?

என் மனக் குடில் நீ வசிப்பதற்கே - உன்
இயற்கையை நீயே ரசிப்பதற்கே
இறைவா இறைவா இறைவா ஓ!
(என் மனக்குடில்)

வாசலில் நீர் தெளித்துக் கோலமிட்டு
- நீ
வர வேண்டும் எனப் பந்தலிட்டுக்
காத்திருக்கின்றன மேகங்களும்
காற்றும் நிலவும் விண்மீன்களும்
(என் மனக்குடில்)

உணர்வுகள் ஒவ்வொன்றும் உயிரணுவாகி
உன்னை எதிரொலிக்க
உள்ளமெனும் நதியோட்டத்தை உன்
நினைவே திசைதிருப்ப
கணம் தோறும் உன் பேரெழிலை - என்
கனவுகள் பிரதிபலிக்கக்
காலடி வைத்து நீ வர வேண்டும் - நான்
காலமெல்லாம் உன்னைக் காதலிக்க -
நீ
வாடகை யாகத் தினமொரு கவிதை
வழங்கிடுவாயா பரம்பொருளே

(என் மனக்குடில்)

*15.09.2019*

## 194. சிவப்பு முக்காடு...

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே - உடல்
கருத்த ஒருத்தி துரத்தி வரத் - தலை
கவிழ்கின்றாயோ மேற்கினிலே

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

அந்தக்
கருப்பி கூடக் கொள்ளையழகு
கோடிப் பூக்கள் கார்குழலில்
நிரப்பி வைத்து நடுவில்தன்
நிலாமுகத்தைக் காட்டுகிறாள்

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

உறக்கம் என்ற போர்வையை
உதறி எறிந்தொரே நொடியில்
பரவும் சின்ன ஒளிக்கீற்றுன்
பவள இதழின் புன்னகையே

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

கருப்பு சிவப்பு வெள்ளியெல்லாம் - நீ
கலைக்கும் வேடம் பொன்மகளே - இது
கணக்குப் பார்க்கும் நேரமில்லை - வா
கவிதை பேசிக் களித்திடலாம்

சிவப்பு முக்கா டணிந்து கொண்டு
செல்வதெங்கே பொன்மகளே

*24.09.2019*

## 195. ஏழு பிறவிகளும் மராமரம்

ஒரே தரம் உன் வசீகரம் என்
கண்ணிற் படும் அதே கணம்
உள்ளமெனும் களேபரம் - ஒரு
கதியினிலே நிலைபெறும்
தயாநிதே ரமாபதே - என்னைத்
தடுத்தாட்கொள் ஸ்ரீ தாஸரதே
ஓ! தாஸரதே (ஒரே தரம்)

தென்னிலங்கைக் கொற்றவனைச் செற்றவனே ஜயராமா
கோசலைத்தாய் தவமிருந்து பெற்றவனே ரகுராமா
பராபரம் அண்ட சராசரம் எங்கும்
நிறைந்திருக்கும் உன் நிலாமுகம் (ஒரே தரம்)

ஓரில் ஒருவில் ஒருசொல் என்றே
உலகில் நடந்த பரம்பொருளே
போரில் கூட நிலை மாறாமல் - அருள்
பொழிய நின்ற பேரருளே.
மனோலயம் தரும் மகோன்னதம் - ஏழு
பிறவிகளும் மராமரம் (ஒரே தரம்)

*05.10.2019*

## 196. பழைய சுவடியில்

பழைய சுவடியில் புதிய கவிதைகள்
கணம்தோறும் நீ எழுதுகிறாய் - நீ
எழுத எழுத இச்சுவடியிலே
விழுபவை வெறும் சொற்களா - இல்லை
விரியும் வெளியிலே விளங்கும் விண்மீன்
கற்களா
(பழைய சுவடியில்)

தொலைவில் இருந்து வரும் கானமா - வெகு
தொலைவில் இருந்து வரும் கானமா - என்றோ
தொலைந்து போன அனுமானமா
தொடரத் தொடர விட்டு
விலகிச் செல்லும் தொடு வானமா - அட,
ஒளியை விட மிக வேகமா
(பழைய சுவடியில்)

சிற்பி நீயென்று சொல்லவா- உன்
சிற்பங்களும் நீயல்லவா
சிற்பமும் அதன் சிற்பியும் ஒன்
றிணைந்திருப்பதே அற்புதம் - அதை
நினைந்து நினைந்து மனம் நெகிழ்ந்து மகிழ்ந்து விழி
நனைந்திருப்பதே என்தவம்
(பழைய சுவடியில்)

*18.10.2019*

## 197. ஞானத் தோணி

எத்தனை வேதனை
என்னென்ன சோதனை
அத்தனையும் கடக்கும் சாதனை - புரிய
அருள்தரும் சாயி நாதனை - நீ
எப்பொழுதும் நினை என்றுமவன் துணை
வள்ளலவன் அன்பில் தினம்நனை - அது
எந்நாளும் வற்றாத தீஞ்சுனை

ஐந்து பொறிகளும் ஆசாபாசமும்
அல்லற்படும் மனமும் - உன்னை
அலைக்கழிக்கும் தினமும்
நைந்து போகவா மானிடப் பிறவி - கடல்
கடக்க உதவுமா அறிவெனும் புரவி
சிந்தையில் ஜப மாலையுடன் வந்து
சிரிக்கின்றான் ஒரு துறவி - வினைச்
சுமைகளை எல்லாம் ஊடுருவி
வள்ளலவன் அன்பில் தினம்நனை - அது
எந்நாளும் வற்றாத தீஞ்சுனை

ஷீரடி என்பது கூப்பிடு தூரம்
ஓரடி நீ வைத்தாலும் போதும்
ஓடோடி வருவான் உள்நுழைவான் - அந்த
நாடோடி பரதேசி ஞானி -
ஞானக் கடலில் நமக்குத் தோணி

(எத்தனை வேதனை) *30.10.2019*

## 198. சித்திரப் பெண்ணே

சித்திரப் பெண்ணே - ஓ
சித்திரப் பெண்ணே - நீ
சிறகு விரித்துப் பறக்க வேண்டும்
சிவந்த வானம் திறக்க வேண்டும்

சித்திரப் பெண்ணே - ஓ
சித்திரப் பெண்ணே

வாடைக் காற்றில் ஆடை கொஞ்சம்
விலக வேண்டுமே - கை
வளையல் ஓசைக் கேற்பக் கண்கள்
சுழல வேண்டுமே

சித்திரப் பெண்ணே - ஓ
சித்திரப் பெண்ணே

கொலுசுச் சத்தம் கேட்டுக் - குரல்
கொடுக்கும் நீலக் குயிலின் பாட்டு - நீ
கண்ணிமைக்கும் பண்ணிசைக்குக்
கவிதை செய்யும் வண்டு - உன்
புன்னகை வனத்தில் கோடிப்
பூக்கள் மலரக் கண்டு

சித்திரப் பெண்ணே - ஓ
சித்திரப் பெண்ணே

*06.11.2019*

## 199. பாரதி தேசம்

பாரதி தேசம் இது பாரத தேசம்
பாரெல்லாம் வியக்கும் மிகப் பழமையான தேசம் - என்றும்
புதுமையான தேசம்

வள்ளுவரை உலகுக்கே தந்துயர்ந்த தேசம்
வான்மிகரும் வியாசரும் வந்த
ஆன்மிக தேசம்

பாரதி தேசம் இது பாரத தேசம்

கம்பன் காளிதாசன் கவிதை
பாடி மகிழ்ந்த தேசம்
கங்கை யமுனை நதிகள் பல
ஓடி வளர்ந்த தேசம்
மங்கையர் மைத்ரேயி கார்க்கி
மறைகள் சொன்ன தேசம்
சிங்க குரு கோவிந்தர்
சீறி எழுந்த தேசம்

பாரதி தேசம் இது பாரத தேசம்

இமயம் முதல் குமரி வரை
இணங்கி வாழும் தேசம்
எங்கெங்கும் பக்தி மணம்
பரவுகின்ற தேசம்
சமயங்களைக் கடந்து பல
தரிசனங்க ளாக
சத்ய தர்ம நெறியுணர்த்தும்
சான்றோர்கள் தேசம்

பாரதி தேசம் இது பாரத தேசம்

பலமொழிகள் பலவழிகள்
பயணம் ஒன்று தான்
பல பெயர்கள் பல வடிவம்

பகவன் ஒன்று தான்
கலகம் செய்யும் அரக்கர் சிலர்
கருத்தினுள்ளே நுழைந்திடாமல்
காவல் செய்ய வேண்டும் பெரிய
கடவுள் இன்று தான்

பாரதி தேசம் இது பாரத தேசம்
பாரெல்லாம் வியக்கும் மிகப் பழமையான தேசம் - என்றும்
புதுமையான தேசம்

*07.11.2019*

## 200. நான் என்றும் குழந்தை

என்றும் குழந்தை - நான்
என்றென்றும் குழந்தை
இசைக்கின்ற கவியெல்லாம் தேன்சிந்தும் மழலை
(என்றும் குழந்தை)

என்று பிறந்தவள் எனத் தெரியாதவள்
கன்றுக்குத் தரும் பால் கற்கண்டுக் கவிதை
(என்றும் குழந்தை)

தொட்டில் நிலாப்பிறை - மின்னல்
தூளியாய் ஆடும் - கை
கொட்டி விளையாடக் குவிகின்ற மேகம்
எட்டுத் திக்கும் நான் விளையாடும் கூடம்
எனக்காகவேயவள்
படைத்ததிவ் வுலகம்
(என்றும் குழந்தை)

அடம் பிடிப்பேன் அழுது
காரியம் முடிப்பேன் - அன்(பு)
அரவணைப்பில் மயங்கிக்
கண்வளர்வேன்
உம்மாச்சி என்றதும்
உட்கார்ந்து விடுவேன்
அம்மாவின் பிள்ளை - நான்
அவள்தோளில் கிள்ளை
(என்றும் குழந்தை)

*14.11.2019*

## 201. முகில்வண்ணம்

முகில்வண்ணம் கடல்வண்ணம் உடல்வண்ணம் நீலம் - பூ
முகத்தில்புன் னகையென்றும் அணையாத தீபம்
அகிலத்தின் வடிவாக வளர்கின்ற கோலம்
அழியாத அழகாகத் திகழ்கின்ற ரூபம்
ரகுநந்தனம் ஸ்ரீராமச் சந்த்ரம்
தினமென்றன் மனமொன்றி இசைக்கின்ற மந்த்ரம்
(முகில்வண்ணம்)

வில்லேந்தி நிற்கின்ற வீரம் கம்பீரம்
விநயம் விசித்ரம்சம் பூர்ணாவ தாரம்
சொல்லேந்தி வரும் கவிதை தோற்கும் வினோதம்
சொல்லில் அடங்காமல் பொங்கும் ப்ரவாகம்
எழிற் கொள்ளை எழிற் கொள்ளை
என்றுள்ளம் பாடும்
எல்லார்க்கும் எந்நாளும்
நலமே உண்டாகும்
(முகில்வண்ணம்)

இல்லாத இடையாளும் இளையோனும் கூடச்
செல்கின்ற வழியெங்கும் ஒளியே திண்டாடக்
கருநீல ஒளியாகி உலகையளாவ
பரப்ரும்மம் என்றே மாமுனிவர் பராவ
ராமா ஸ்ரீ ராமாவென்
றென்னுள்ளம் பாடும்
எல்லார்க்கும் எந்நாளும்
நலமே உண்டாகும்
(முகில்வண்ணம்)

*15.11.2019*

## 202. வட்ட நிலாத் தோசை

சுட்டுத் தருகிறாள் - தோசை
சுட்டுத் தருகிறாள்
வட்ட நிலாத் தோசையவள்
சுட்டுத் தருகிறாள்
பட்டுப் பட்டா தோசையவள்
சுட்டுத் தருகிறாள்
(சுட்டுத் தருகிறாள்)

தகதகக்கும் நெருப்பை மெல்ல
தழல் குறைப்புச் செய்து - பின்
நீலக் கல்லில் வெள்ளி தோசை
சுட்டுத் தருகிறாள்
தட்டில் எண்ணை கொப்பளிக்கக்
கோடிக் கோடிக் கண்சிமிட்ட
நட்ட நடுவில் தோசை - அவள்
சுட்டுத் தருகிறாள்
(சுட்டுத் தருகிறாள்)

தோசை ஒன்று சுட்டுத் தரப் பாதி மாச மாகும் - அதை
விண்டு சுவைத்துத் தின்பதற்குள்
மீதி மாசம் போகும்
ஆயிரம் தோசையருந்தி அனைவருமே வாழ வேண்டும்-
ஆயி மகமாயி யருள்
கூட வேண்டும் - அவள்
ஆக்கினையால் நான்தினமும்
பாட வேண்டும் *16.11.2019*

## 203. தந்தமுத்தம் ஒவ்வொன்றும் தாமரைப்பூ

நீ
தந்த முத்தம் ஒவ்வொன்றும் தாமரைப் பூ
எந்தத் தடாகத்தில் மலர்ந்ததது - உன்
வட்ட விழிப் பார்வை
மாணிக்கக் கல் - எந்த
மகுடத்திலிருந்து சுடர்வதது
(நீ தந்த முத்தம்)

எத்தனை எத்தனைக் கவிதைகளால் நான்
உன்னை அலங்கரித்தேன்
அத்தனையும் ஒளி நட்சத்திரங்களாய்
அமைந்தன வானத்திலே - இன்று
பித்தனைப் போல் நான் பாடுகிறேன்
உன்சந்நி தானத்திலே
(நீ தந்த முத்தம்)

உனக்கும் எனக்கும் உள்ள உறவு - அதை
உரக்கச் சொன்னால் தாங்கிக் கொள்ளுமா உலகு
கனக்கும் சுமையா இனிக்கும் சுவையா
கலையாதது நம் மாயக் கனவு - என்றும்
கலையாதது நம் மாயக் கனவு
(நீ தந்த முத்தம்)

*22.12.2019*

## 204. நான் அழைத்தா நீ வரவேண்டும்?

நானழைத்தா நீ வரவேண்டும் - பயிர்
வான் மழைக்கா குரல் தர வேண்டும் - இங்கு
நானழைத்தா நீ வரவேண்டும்

தேன்தெளித்தா வண்டுகளை வண்ணமலர் வரவேற்கும் - நான்
கானமிசைத்த பிறகா
கவிதைகள் மலரும்
நானழைத்தா நீ வரவேண்டும்

என் பணி என் பிணி நீயறி வாய்
என் தவம் உன் வரம் நீ தருவாய்
என்னுடனா நீ வாதம் புரிவாய்
எதற்கின்னும் பிடிவாதம் - என்
இரு விழி பருகிட நேர் வந்தருள்வாய்

*27-12-2019*

## 205. பாரதி வீரம்!

(வல்லபரின் மதுராஷ்டகமான “அதரம் மதுரம்“ என்ற பாடல் தந்த உள்ளூக்கத்தில் பிறந்த பாடலிது.)

மீசை வீரம் மிடுக்கும் வீரம் -
முண்
டாசும் வீரம் முழுதும் வீரம்
தேசம் என்றும் தெய்வம் என்றும்
பேசும் போதும் வீரம் வீரம்

கண்ணம் மாவிடம் காதல் வீரம்
காலனைக் கண்டஞ் சாத வீரம்
பெண்மை வாழ்கெனக் கூத்திட்டு - ஜய
பேரிகை கொட்டிய புரட்சி வீரம்

நிலைகெட்ட மனிதரை நினைந்து நெஞ்சம்
பொருமிக் குமுறிய போதும் வீரம்
நெகிழும் போதும் மகிழும் போதும்
நிலைகொள்ளாமல் ததும்பும் வீரம்

கோட்டும் வீரம் கொள்கை வீரம்
கோல்கைக் கொண்டு வாழும் வீரம்
பாட்டும் வீரம் அத் திறத்தால் வையம்
பாலிக்க வேண்டும் பக்குவம் வீரம்

பாஞ்சாலி சபதம் பாரத வீரம்
ஞான ரதத்தை ஓட்டிய வீரம்
ஞான ஆகாசத்தில் நிற்கும் வீரம்
பாரதி வீரம் பராசக்தி வீரம்.

*30.12.2019*

## 206. மற்றும் ஓர் ஆண்டா?

சென்றதென்ன மற்றுமோர் ஆண்டா - உன்
சிந்தை, செயல், பேச்சு, மூச்சு எல்லாம் தாண்டா
வருவதென்ன புதிய வருடமா
- உன்னைப்
பருக வரும் பூதம் இதைத்
தள்ள முடியுமா

நேற்றிருந்த உயிரணுக்கள் இன்றில்லை உன்னுடலில்
மாற்றமின்றித் தொடர்பவனும் நீயா - வெறும்
காற்றடித்து வாழுகின்ற கூட்டிலென்ன கூச்சல், ஆட்டம்
கூத்தாடிப் போட்டுடைப் பாயா - கூத்தாடிக்
கூத்தாடிப் போட்டுடைப் பாயா
(சென்றதென்ன)

மயக்கமெந்தக் கோப்பையில்
மனம், மொழி, உடல், புத்தி,
எதில் என்று பதில் சொல்லடா
சுயமாக நிற்பதற்கும்
இயலாமல் தள்ளாடும்
தோழாநீ யேஉன்னை எதிர்கொள்ளடா
(சென்றதென்ன)

*31.12.2019*

## 207. த்யானம்

த்யானம் ஓம் சாயி த்யானம்

உள்ளெது வெளியெது
கள்ளெது மலரெது
புள்ளெது கருவெது முட்டையெது
உண்மையும் பொய்மையும் உருவமும் அருவமும்
இரண்டற இணைந்திடும் நிட்டையது

த்யானம் ஓம் சாயி த்யானம்

ஒருமையின் விரிவது
ஒளியென நிறைவது
கரும்பொருள் எனும்திரள் கடலுமது
திறமைகள் இற்று விழுந்திடும் நிலையது
சிறகுகள் இன்றிப் பறப்பதது

த்யானம் ஓம் சாயி த்யானம்

ஓங்கார நாத மாகி - ஒரு
ரீங்கார மாக மாறி - உயிர்
நீங்காத கீதமாக வழி காட்டுவது
ஏகாக்ரஹத்தில் லயித்து - வெளி
ஏகாத படிக்கு மறித்து - நிலை
மாறாத களியில் இணைய ஒளி
கூட்டுவது

த்யானம் ஓம் சாயி த்யானம்

*13.01.2020*

## 208. தினம்தோறும் படைக்கின்றேன்

தினம்தோறும் படைக்கின்றேன் சொற்பொங்கல் - இன்றும்
தருகின்றேன் திகட்டாத நற்பொங்கல்

மனம்தோறும் வண்டாக வந்தமர்ந்து
மகரந்தம் சேர்க்கின்ற பாடகன் நான்
கணம்தோறும் கவிதைக்கே காத்திருந்து
கனவுகளைச் சேமித்து வைப்பவன் நான்
எனக்கென்றும் உனக்கென்றும் பேதமின்றி
நமக்கென்றே உழைக்கின்ற நண்பன் தான்நான்
தணலாகக் கொதிக்கின்ற நெஞ்சுக்குள்ளும்
தமிழாகத் தேன்பொழியும் தேவனும் நான்

தினம்தோறும் படைக்கின்றேன் சொற்பொங்கல் - இன்றும்
தருகின்றேன் திகட்டாத நற்பொங்கல்

இன்றுவரும் காற்றுக்கோர் இனிய கீதம்
இசைக்கின்றேன் “நல்வாழ்த்துத் தந்து செல்க”
இன்றுதிக்கும் கதிரவனை வரவேற்கின்றேன்
“எங்களுக்கோர் மந்திரமே
தினமும் சொல்க”
இன்றெரியும் அடுப்பைநான்
வணங்குகின்றேன்
“ஏழைகளின் வீடெல்லாம்
அமுதம் பெய்க”
இன்றொருநாள் நாம்சொல்லும் சொல்லொவ் வொன்றும்
என்றென்றும் ஒலித்துலகைத் தூய்மை செய்க!

*15.01.2020*

## 209. மந்திரத் தமிழ்

கோபுரம் மீது நின்று கொண்டு
கோடி முறை சொல்வேன் - நம்
தமிழ் தமிழ் தமிழ் அது மந்திரத் தமிழ் - பிர
மாபுரம் மேவிய பெம்மான் நமக்குத்
தந்த தமிழ் என்றும் அது சுந்தரத் தமிழ்
மந்திரத் தமிழ்

கங்குல் கலங்கக் கரங்கள் வணங்கக்
குடங்கள் தளும்பவே நீரூற்றுவோம்
கங்காதரன் சிவ சம்போஹரன்
அருள்
பொங்கட்டும் என்றே விளக்கேற்றுவோம்
தமிழோடு மெய்ஞான மறையோதப் பெருங்கோயில்
கும்பாபிடேகத்தில் ஒளிரட்டுமே

அமிழ்தினி ததனினுமித் தமிழினிதெ னச்சொல்லி
சிவனார் மனமிகக் குளிரட்டுமே
பஞ்சாட்சரத்திலைம் பூதங்களும் ஒன்றி
நெஞ்சார வாழ்த்தட்டுமே
பணியரவு தவழுமிரு தோள்புரளு சடைமுடியில்
பலகுடங் கவிழ்ந்து நீரூற்றட்டுமே

சி -
சிரசில் சிலதுளி சிவோஹம்
வா -
வான மழையெனப் பொழியும் ப்ரவாஹம்
ய -
யமனை உதைத்தவனை அபயம் என
நயந்தோம்
ந -

நமக்குத் துணைநடராசன் பதம் எனமகிழ்ந்தோம்
ம-
மரணபயமழிந்(து) அமரத்துவம் அடைந்து மலர்ந்தோம்

சிவாய நம ஓம் சிவாய நம ஓம் சிவாயா நம
அந்தாதியாகி நமசிவாய வென்று
நாளும் வணங்க நவகோளும் பணிந்து நல்
வாழ்வளிக்கும் வரம் வேண்டுமே
தமிழ்
பாடிக் களிக்கும் திறம் வேண்டுமே

கங்காளி மாகாளி பங்காளி பேர்பாடிச்
சங்கம் முழங்கட்டுமே - நால்வர் தமிழமுதம்
எங்கும் வழங்கட்டுமே
சாலையெல்லாம் இனி
எம்பிரான் சன்னிதிக்கே
பெருவுடையார் திருக்கோயில்
தரிசனம் காணவே
வருகமால் புள்மீதிலே - அயன்
அன்னத்தின் மீதேறியே
மேகவாகனமூர்ந்து முப்பத்து முக்கோடி
தேவர்குழாம் வருகவே - ஈசன்
அருளமுதம் பருகவே
நால்வர் வருகவே - நந்த
னாரும் வருகவே - திரு
மூலர் வருகவே - சித்தர்
கூட்டம் வருகவே
பக்த கோடிகள் பாடியாடி வருகவே
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய
ஓம் நமசிவாய ஓம் நமசிவாய *30.01.2020*

## 210. கணநேர அமைதி

மலர்பூக்கும் கணநேர அமைதி
கவிதைக்கும் உண்டந்த நியதி
பலர்பார்க்க மலராது
பொதுவாகப் புலராது
அதுவாக அவிழ்கின்ற யுவதி
- அது
அதுவாக அவிழ்கின்ற யுவதி

கடலுக்குள் நுழைகின்ற நதி போல் நடுங்கி
உடலுக்குள் சுடர்வீசும் உயிர் போல் விளங்கி
காலத்தின் மூலத்தைக் கைக்கொண்ட புரவி
கட்டுக்குள் அடங்காமல் நடக்கின்ற துறவி

அதுவாக அவிழ்கின்ற யுவதி
- அது
அதுவாக அவிழ்கின்ற யுவதி

என்னோடு சில வார்த்தை என்றேனும் பேசும்
எகத்தாளமாய் ஒரு சிரிப்பள்ளி வீசும்
உன்னோடு நானவள் பின்னோடு செல்ல
விண்மீன்கள் ஒவ்வொன்றும் சிரிக்கின்றதே மெல்ல

அதுவாக அவிழ்கின்ற யுவதி
அவளே என் காதலி
கடவுள் கலாவதி

*02.02.2020*

## 211. பெருவுடையார்

தருவுடையாரவர் காஞ்சியிலே - சங்கத்
தமிழுடையார் தென் மதுரையிலே
உருவுடையாரவர் தில்லையிலே - பே(ர்)
ஒளியுடையாரவர் அருணையிலே
மருவுடையார் அவர் கண்டத்திலே - திரு
மயிலுடையாரவர் மயிலையிலே
பெருவுடையாரவர் தஞ்சையிலே - பெரும்
பேறுடையார் பக்தர் நெஞ்சினிலே

மாடுடையார் செவித் தோடுடையார் - பிறை
மதியுடையார் கங்கை நதியுடையார்
ஆடுடையார் புலித் தோலுடையார்
ஐந்தெழுத்தாகிய வீடுடையார்
காடுடையார் மூன்று
கண்ணுடையார்
காயழல் மான்மழு
கையுடையார்
தேடற் கரியவர் பிறவா யாக்கை
பெரியவராம் எங்கள் பெருவுடையார்

நிழல் வீழாத கோபுரமும் - என்றும்
நிழல்தரும் பாத நூபுரமும்
அழல் தீராத கனல்விழியும் - சங்கம்
அமர்ந்து கேட்ட தமிழ் மொழியும்
அழகே வடிவாய் அறுமுகனும்
ஞான முதல்வன் கணபதியும்
குழைகா தணிசேர் மலைமகளும்
கூடியிருக்கும் போதினிலே
மந்திரம் சொல்லி வந்தமரும் - தேவர்
கூட்டமெல்லாம் புவி மீதினிலே

*05.02.2020*

## 212. ஆலாபனை எதற்கு?

(பிரபலமான பாடகர் ஒருவர் பாடலை, நண்பர் ஒருவர் வாட்ஸ் ஆப் மூலம் அனுப்பியிருந்தார். கேட்டேன். ஷண்முகப்ரியா ராக ஆலாபனை தொடங்கியது. ஒரு நிமிடம் ஆயிற்று, இரண்டு நிமிடம் ஆயிற்று, தனனன, ததரின என்று ஆலாபனையே தொடர்ந்தது. பாடல் தொடங்கவே இல்லை. ரவீந்திரநாத் டகூரின் வரிகள் என் நெஞ்சில் அலைமோதின.
"நான் கொண்டு வந்த பாடலை இன்னும் பாடத் தொடங்கவில்லை. சுருதி கூட்டுவதிலேயே என் காலம் கழிகிறது.")

ஆலாபனை எதற்கு - இன்னும்
ஆலாபனை எதற்கு
ஆருயிர் மேவும் பாடலிசைக்கும் முன்
ஆலாபனை எதற்கு

மூலாதாரத்தில் மூளும் கனலும்
படிப்படியாய் மேலெழுவதற்கு - முன்

ஆலாபனை எதற்கு - இன்னும்
ஆலாபனை எதற்கு

தன்னன தானன
தனதனனா
தன்னென நானெனத் தன்முனைப்பு
ததரீ ரீரிரி
ததரிரி ரீ
பதறிக் கதறி
யமும்தவிப்பு

தன்னென நானெனத் தன்முனைப்பு
பதறிக் கதறி
யமும்தவிப்பு
பொன்னெனப் பொருளெனப்
புகழென அலைக்கும்
பூதவுடல் நீங்கிப் போகும் வரைக்கும்

ஆலாபனை எதற்கு - இன்னும்
ஆலாபனை எதற்கு

எத்தனைக் காலம் பித்தனைப் போலோலம்
எழுப்புவது
சித்தம் ஒடுங்கும் சாதகம் என்றுகைக்
கூடுவது
பக்தியென்றுருகி அடுத்த கணம்
பற்றில் விழுந்து புரளுவது
சக்தியில்லாமல் சரணடைந்தேன் - நான்
பல்லவி என்று பாடுவது
முக்தி தரும் ஞான சபரீசா - உன்
மோனத்தில் என்று கூடுவது
உன்
மோனத்தில் என்று கூடுவது

ஆலாபனை எதற்கு - இன்னும்
ஆலாபனை எதற்கு *08.02.2020*

## 213. சனங்க பேசும் பாஷை

சனங்க பேசும் பாஷையில
மனம்தொறந்து பேசறேன்
கனம் குறைய வேணுமென்று
கலகலப்பாப் பேசறேன்

காலையிலே கதவைத் தட்டிக்
கவிதை சொல்லிப் போகுறேன்
கனவுல நான் பறிச்சு வந்த
பூக்களைத்தான் தூவுறேன்
சாலையிலே நடப்பவரைச் சரிசமமா பாக்குறேன்
"சௌக்கியமா?" என்றவரைக் கண்ணாலே கேக்குறேன்

சனங்க பேசும் பாஷையில
மனம்தொறந்து பேசறேன்

சூரியனும் சந்திரனும்
வந்துபோவ தில்லையா
சுகமான காத்து வந்து
தொட்டுப் போவ தில்லையா
மாரியம்மன் கோயிலிலே
மாவிளக்கு வாசனை
மனங் குளிர வாங்கிக்கிட்டா
மறைஞ்சு போகும் வேதனை

சனங்க பேசும் பாஷையில
மனம்தொறந்து பேசறேன்
கனம் குறைய வேணுமென்று
கலகலப்பாப் பேசறேன்

*21.02.2020*

## 214. மக்கள் பாடும் பாட்டு

வயல்வெளியில் நதிக்கரையில்
மலைச்சரிவில் நிலவொளியில்
மக்கள் பாடும் பாட்டு - கேட்டு
மயங்கும் அந்தக் காத்து

மன்னர்களைப் பாடாமல் மரஞ்செடிக்குப் பாட்டு
பொன்முடிப்புக் கேட்காமல் பொழுதுக்கொரு பாட்டு
மக்கள் பாடும் பாட்டு - கேட்டு
மயங்கும் அந்தக் காத்து

வண்டியிழுக்கும் போது வரும்
வேர்வைக்கொரு பாட்டு
மண் சுமக்கும் கைகளுக்கு
வளவியிடும் பாட்டு
மக்கள் பாடும் பாட்டு - கேட்டு
மயங்கும் அந்தக் காத்து

உனக்கும் எனக்கும் உற்சாகம்
கொடுக்குமொரு பாட்டு
கனக்கும் நெஞ்சை லேசாக்கி
உறங்கவொரு பாட்டு - அது
கொடுமை கண்டு கொதித்தெழுந்து
பேசுகின்ற போது
தொடுவதற்கும் பயந்து கொண்டு
தொலைவில் நிற்கும் காத்து
மக்கள் பாடும் பாட்டு - உலகை
மலைக்க வைக்கும் பாட்டு - இது
மக்கள் பாடும் பாட்டு - உலகை
மலைக்க வைக்கும் பாட்டு

*18.02.2020*

## 215. கலையட்டும் உன்மௌனம்

இது வேண்டும் அது வேண்டும்
எனக்கென்று கேட்காமல்
பொதுவாக உலகத்தின்
நலம் வேண்டினேன் - நீ
எதுவான போதும் - எப்
பெயர்கொண்ட போதும்
விரைவாயென் குரலுந்தன்
செவியேற வேண்டும் - இப்
புவிவாழ வேண்டும்

நதியாக வந்தால் - நான்
நதியாக வந்தால் - நீ
கடலாக வேண்டும் - பிறை
மதியாக வந்தால் - சடை
முடியாக வேண்டும்
விதியாக வந்தால் - சிறு
விளக்காக வேண்டும்
கதிவேறிலை உலகுன்
காற்சிலம் புப்பரல்
கருணாகரா உனைச்
சேருமோ என் குரல்
(இது வேண்டும்)

பசுபாசத் துடன் நீ பதியானவன்
சுதன் ஆவியுடன் நீ பிதா ஆனவன்
நபியானவர்க்கு நல்ல மறையானவன் - எங்கும்
நம்பிக்கை ஒளியாய் நிறைகின்றவன் - என்
குரல்வந்து சேராத தொலைதூரமா- உன்
குடிலெந்தன் உள்ளத்தில் மிக ஆழமா
எனதுமனம் உனதுவசம்
என்கவலை எதுவுமிலை
உனதுலகம் உன்நடனம்
கலையட்டும் உன்மௌனம்
(இது வேண்டும்)

*03-04-2020*

## 216. உள்ளம் மலராகத் தொழுவேன்

உன்னை
ஒரு நாளும் மறவேன் - உள்ளம்
மலராகத் தொழுவேன்
உண்மை நீ அறிவேன்
என்னை
விலகாத ஒளியே - என்றும்
மாறாத களியே
நானுன் சிறுதுளியே

கண்ணன் என்றும் கர்த்தர் என்றும்
அல்லா என்றும் ஜோதி என்றும்
இன்னும் கோடிப் பெயர்கள் சொல்லி
அழைக்கும் போதும் அருள்பவன் நீ
சிம்மம் ஏறிச் சூலமேந்திச்
சீறி வருபவள் நீ
சின்னம் இன்றி பின்னம் இன்றி
முழுமை யாவதும் நீ
(உன்னை)

துக்கத்தால் வரும் கண்ணீர்த் துளியைத்
துடைக்கும் விரலும் நீ
தவறு செய்யும் போதுள் ளிருந்து
தடுக்கும் குரலும் நீ
தக்க தருணம் பார்த்தி ருந்தாட்
கொள்ளும் தர்மம் நீ
நடித்துக் கொண்டே நாடகத்தை
நடத்தும் மர்மம் நீ
(உன்னை)

*07-04-2020*

## 217. தச்சன் மகனே

தச்சன் மகனே - அகிலத்(து)
அச்சன் மகனே
தர்மம் என்ற பாதை காட்ட
வந்த நாதனே
தேவ தூதனே

அச்சம் களைந்து நிமிர்ந்து நின்றாய் -
புவியிலில்லை உன் ராஜ்ஜியம் என்றாய்
அன்பை விதைக்க ஆகுதி ஆனாய் - நீ
அப்படி யேவா மறைந்தாய் - எங்கள்
ஆவியுள் எல்லாம் நிறைந்தாய்
(தச்சன்)

முள்முடியோ சில பாவிகள் தந்தார்- நீ
கொள்முடியோ உன் தந்தை தந்தார்
சிலுவையிலே நீ சிந்திய தெல்லாம்
ரத்தமில்லை அருட் புஷ்பங்களே - எங்கள்
ரட்சகனே உன் சரணங்களே
- வழி
காட்ட வேண்டும் பொற்கிரணங்களே
(தச்சன்)

*11.04.2020*

## 218. கரைப்பதுதான் கவிதை

உனக்கும் எனக்கும் நடுவில் பாலம்
அமைப்பதுதான் கவிதை
கனக்கும் நெஞ்சை மாற்றி மெல்ல
கரைப்பது தான் கவிதை
பாலம்
அமைப்பதுதான் கவிதை
மனத்தைக்
கரைப்பது தான் கவிதை

உண்டுறங்கி உழலும் வாழ்வில்
ஒதுங்க நிழல் தந்து
விண்டுரைக்க முடியாத விந்தையாக வந்து - சோர்வைப்
போக்குவதும் கவிதை - வெற்றி
ஆக்குவதும் கவிதை

தேன்சுமக்கும் பூவும் தேனைத்
தான் சுவைப்பதில்லை என்ற
ஞானம் ஒன்று போதும் - வாழ்வில்
யோக நிலை கூடும்
மான் மகிழ்ந்து துள்ளி ஓட
வேங்கை அதன் மீது பாய
யார் பசிக்கு யார் விருந்து
கேள்விகளைச் செல்கடந்து
சொல்கடந்து சூக்குமத்தைப் பாரு - உள்ளே
சுடராக முளைப்பவளைச் சேரு

*15-04-2020*

## 219. மனுசங்களா மாறணும்

ஆளுக்கொரு கட்சி இங்க
அம்புட்டுப் பேரும் அறிவாளி
போஸ்டர் போடக் காசிருந்தா
பூச்சி கூடப் போராளி
தலைவர்களாம்
தொண்டர்களாம்
தடியெடுத்தா
குண்டர்களாம்
சிண்டு பிடி சண்டை தெனம்
போடுறாங்களாம் - இதில்
சிக்கிக்கிட்டு மக்கள் - ஏ
மாறுறாங்களாம்

நோயெடுத்து மக்கள் பலர் சாவுறாங்களாம் - போனை
நோண்டிக்கிட்டே இவுங்க சண்டை போடுறாங்களாம்
வாயில் வரக் கூடாத வார்த்தையெல்லாம் பேசிக்கிட்டு
வாச்சால மாவம்பை வளக்குறாங்களாம்

சிண்டு பிடி சண்டை தெனம்
போடுறாங்களாம் - இதில்
சிக்கிக்கிட்டு மக்கள் - ஏ
மாறுறாங்களாம்

தெனக்கூலி மக்களெல்லாம் சோத்துக்காக ஓடுறச்ச
பிணக்கூலி தந்து நோயோடு போராடுறச்ச
சாதி மதக் கூச்சலிடும் சூரர்களாம் - டி.வி.
வாட்ஸ்ஆப்பு முகநூலு வீரர்களாம்

சிண்டு பிடி சண்டை தெனம்
போடுறாங்களாம் - இதில்
சிக்கிக்கிட்டு மக்கள் - ஏ
மாறுறாங்களாம்

வாயடங்கிப் போனாத்தான் நோயடங்கிப் போகும்
நோய்பரவி னாபூமி யேமுடங்கிப் போகும்

கருத்துச் சண்டை கட்சிச் சண்டை
கடவுள் சண்டை தீரணும்
கையெடுத்துக் கும்பிடுறேன் மனுசங்களா மாறணும் - நாம
மனுசங்களா மாறணும்

*20-04-2020*

## 220. இணைந்து வசிக்கிறேன்

இளமைக் கேது பிறந்தநாள் - அது
என்றும் இருப்பது
எழிலை எப்படி வாழ்த்துவது - அது
நெஞ்சில் உதிப்பது

நீல வானில் சிரிக்கும் நிலவைக்
குடத்தில் ஏந்துகிறேன் - என்
நிழலுக்கே நான் வண்ணம் தீட்டிப்
பார்த்து மகிழ்கின்றேன்

தேரில் வரும்பல தெய்வம் உண்டு - நான்
சென்று வணங்குகிறேன் - என்
நேரில் வந்து நிற்பவளை - நான்
என்றும் ரசிக்கின்றேன் - கூட
இணைந்து வசிக்கின்றேன்

*02-05-2020*

## 221. சங்கீத சாம்ராஜ்ய மன்னவராம்

தம்பூரு சொமந்த தோளு - இவரு
சங்கீதம் தெரிஞ்ச ஆளு - ஒரே
அம்பால ஏழுமரம் தப்பாம சாச்சவனைத்
தம்பாட்டில் படம்பிடிச்சாரு. - நம்ம
நெஞ்செல்லாம் இடம் புடிச்சாரு

நம்பாத நெஞ்சுக்குள்ளும் நாதம் பொழிஞ்சு - ரகு
நாதான்னு சொல்ல வச்சாரு - பக்தி
வேதாந்தம் சொல்லிக் கொடுத்தாரு
காசு பணத்தால சுகம் ஏதுமில்லையாம்
இதிகாச ராமபிரான் - சந்
நிதிசால சுகம் தருமாம்
(தம்பூரு)

பக்தியென்னும் ராஜபாட்டை
விட்டு விலகாம போனா
முக்தியென்னும் கோட்டை வருமாம் - சொன்ன
தத்துவம் ரொம்ப எளிதாம்
பாட்டுக் கனல்மூட்டி நல்ல
பக்தி வழிகாட்டி - இவர்
நாத ப்ரும்மம் ஆனவராம் - சங்கீத
சாம்ராஜ்ய மன்னவராம்
(தம்பூரு)

*25-04-1993*

## 222. சாராய பரணி

சாரிசாரியா போறீங்களே
சாராயக் கடை நோக்கிப் போறீங்களே - அட
சம்சாரி சந்யாசி கட்டை பிரம்மச்சாரி
நாதாரி ஊதாரி நாடோடி பரதேசி
(சாரி)

குடிச்சுப்புட்டுப் பிளாட்டுபாரம் ஓரத்துல படுத்துக்கிட்டுக்
குறட்டைவிட்டுத் தூங்கிப்புட்டு எந்திரிச்சு மறுபடியும்
சாராயக் கடை நோக்கிப் போறீங்களே
சாவு நோவுக் கஞ்சாத வீரர்களே
(சாரி)

உங்க துட்டை நம்பித்தான் ஆட்சி நடக்குது - உங்க
புள்ள குட்டி பொண்டாட்டி அது கெடக்குது
ராத்திரிக்கு ஊத்திக்கணும் உங்க லச்சியம் - அட
பகலமட்டும் வுட்டுவச்சா புடிக்கும் பைத்தியம்
(சாரி)

நாட்டப்பத்திக் கவலையெல்லாம் வுட்டுத் தள்ளுங்க
நடுரோட்டில் குந்திக்கிட்டு ஊத்திக் குடிங்க
நாட்டாமை செய்யுறவன் கோமாளிங்க - ஓட்டு
போட்டோமே நாங்கெல்லாம் ஏமாளிங்க
நடக்கட்டுங்க நடக்கட்டுங்க உங்க ராஜ்ஜியம்
நான் கெடக்கேன் முட்டாப்பய அறிவு பூஜ்ஜியம்
(சாரி)

*05-05-2020*

## 223. நங்கையுன் கன்னங்களில்

நங்கையுன் கன்னங்களில்
பொன்னந்தி வண்ணங்களில்
நாணவில்லை வரைந்த பின்னே
வானவில்லைக் காணவில்லையடி ஹோ!

தங்கத் தடாகத்தில் தாமரைபோல் என்
நெஞ்சத் தடாகத்தில் அழகுமுகம்
பேரொளியாக மலர்ந்த பின்னே
வேறொளி இங்கே தேவையில்லையடி ஹோ!
(நங்கை உன் கன்னங்களில்)

கங்கையைப் போலுன் அங்கமெலாம் ஒரு
காதல் நதிபுரள - என்
கண்ணசைவில் ஒரு மின்விசையாய் உன்
சின்ன இடைதுவள - உன்
தோள்களிலே ஒரு தூளியமைத்துத்
தூங்கட்டுமா அழகே - உன்
வேல்விழிகள் என் மேல்படும் போதின்ப
வேதனைதான் உயிரே
(நங்கை உன் கன்னங்களில்)

*03.12.1993*

## 224. தொடர்கதையாய் வளர்நிழலா

காற்றுவந்து கைப்பிடித்துக் கூட்டிச் செல்வ தெவ்விடம்
காதல் கவிதை  பாடல் நெஞ்சில்
கண்சிமிட்டும் ஓவியம்
தோற்றம் என்பதா
தொடர்கதையாய் வளர்நிழலா

நேற்றும் இன்றும் நாளை யென்றும்
மாற்ற மின்றி ஒருசுழல்
நினைவு கனவு மலரு முறவு அனைத்திலும் அதேநிழல்
தோற்றம் என்பதா
தொடர்கதையாய் வளர்நிழலா

நிலாமுகில் தொடாதது
தொலைவில் உள்ளது - என்
றாலும் போர்வை நாடகம் - கண்
வளைவில் உள்ளது
தோற்றம் என்பதா
தொடர்கதையாய் வளர்நிழலா

மீட்டு கின்ற வீணையின்
விளிம்பிலே இசைப்பொறி
காட்டு கின்ற பாதை யெங்கும்
கற்பனைத் திரள்
கேட்ட பின்னும் பாட லுக்குள்
கோடிக் கோடி நெளிவுகள்
தேடித் தேடி வந்தழைக்கும்
தேவதைக் குரல் - அந்தக்

காற்றுவந்து கைப்பிடித்துக் கூட்டிச் செல்வ தெவ்விடம்
காதல் கவிதை  பாடல் நெஞ்சில்
கண்சிமிட்டும் ஓவியம்
தோற்றம் என்பதா
தொடர்கதையாய் வளர்நிழலா

*23-09-2002*

## 225. நீயா, நீல வானமா!

(1980-களில் எழுதிய இந்தப் பாடல் பிறந்த சூழல் வினோதமானது. மாலை, நான் ஏகாந்த கதியில் லயித்து, நீல வானத்தை, இல்லை, மெல்ல மெல்ல நீலம் கரைந்து கொண்டிருந்த வானத்தைப் பார்த்தபடி வீட்டில் அமர்ந்திருந்தேன். ஷோபனா, செய்தி வாசிப்பதற்குச் சென்றிருந்தாள். வர இன்னும் இரண்டு மணி நேரமாவது ஆகும். இப்படி நான் நினைத்துக் கொண்டிருந்த போதே என் பின்னால் யாரோ வந்து நிற்பதை உணர்ந்து திரும்பிப் பார்த்தால், ஷோபனா. "நீயா?" என்று கூவினேன். "ஆம், இன்று என் செய்தி வாசிப்புப் பணி இல்லை. தெரியாமல் சென்று விட்டு வந்தேன்" என்று அவள் சொன்னதெல்லாம் என் மனத்தில் ஏறவில்லை. அந்த "நீயா" என்ற இரட்டை நெடிலோசையில் அப்படியே விக்கித்துப் போய், என் மனம், நிலைகொண்டு நின்றுவிட்டது.)

*நீயா நீல வானமா - இது*
*மாயா ரூபமா*
*தீயா சுடர்த் தீபமா - தொடக்*
*குழையும் தென்றல் தேகமா*
*( நீயா)*

*தாயா சின்ன தங்கையா - உயிர்*
*தழுவும் மங்கையா*
*ஓயாதலையும் கடலில் இருந்து*
*உதித்த அமுதமா*
*(நீயா)*

*பாயாய் விரிந்து தாலாட்டிப் - பனி*
*நிலவாய்க் கவிதைப் பாலூட்டிச்*
*சேயாய் என்னைச் சேர்த்தணைத்தாய்*
*சிறகா கருணையா - அருள்*
*வடிவாய் நின்று வாழ்த்துவாய் - அற*
*வலிமை நெஞ்சில் கூட்டுவாய் - தொடு*
*வானாய் இருந்தும் தேனாய் அருந்தும்*
*உறவா உண்மையா*
*(நீயா)*

*04.07.1988*

## 226. அடக்கம் அமரருள் உய்க்கும்

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்

தொடக்கம் முடிவு என் கையில் இல்லை
இடையில் எத்தனை கேளிக்கை லீலை
(அடக்கம்)

கடக்கும் முகில்கள் போல்பல கவலைகள்
கனக்கும் இதயம் பாறாங்கல்
எதற்கும் அஞ்சி எடுத்ததற்கெல்லாம் அழுது
புரளும் புனையும் வேடங்கள்
(அடக்கம்)

நாவடக்கம் இன்றி நாகரிகம் குன்றி
நான் நான் என்றே கூவுகிறேன்
நாடக மேடையில் நடிப்பது போலே
தத்துவ வசனங்கள் பேசுகிறேன்
பாவனை சுகத்தில் மூழ்குகிறேன் - உன்
பதமலர் அடையும் வழியறியேன் - நான்
பக்தியில் பரம ஏழையப்பா - பிச்சைப்
பாத்திரம் ஏந்தி வருகின்றேன் - சிறு
பருக்கையிட்டாலும் அருந்திடுவேன்
(அடக்கம்)

*05-05-2020*

## 227. சிறுவர் இசை: 1

(இரண்டு வாரங்கள், முகநூலில் தினமும் ஒரு சிறுவர் பாடல் பாடிப் பதிவு செய்தேன்.)

சீர்வரிசை போலத் தமிழ்ப் பாடல் பல கொண்டுவரும்
சிறுவர் இசை கேட்க ஒண்ணாக் கூடுங்க - கூடிச்
சேர்ந்து நின்று இனிமையாகப் பாடுங்க

ஒருவரிசை பாட - இன்
னொரு வரிசை தாளம் போடச்
சிறுவர் இசை பாடி மகிழ்வூட்டுங்க - இது
பெரியவர்க்கும் ஏற்ற நல்ல பாட்டுங்க

குறுகுறுஎன் றோடியாடிக்
கும்மாளம் போட்ட பின்னே
சிறிது நேரம் குந்தி இளைப்பாறுங்க - பாடிக்
களித்திடுவோம் களைப்பெல்லாம்
தீருங்க

பாடம் படிப்பதுபோல்
பாட்டுப் படிக்க வேணுங்க - வாழ்க்கைப்
பாடத்தைச் சொல்லித்தரும் பாட்டுங்க - நல்ல
பயனுள்ள கருத்தை நிலை நாட்டுங்க

*14-05-2020*

## 228. சிறுவர் இசை 2

ஏடு தூக்கும் சிறுவர் நாளை
நாடு காக்கும் மறவர் என்று
பாட்டுச் சொல்லித் தந்தார் எங்கள் வள்ளியப்பா
தாய்நாடும் தாய்மொழியும்
இரண்டு கண்களாம்
தாலாட்டுப் பாட்டில் தாய்
சொல்லித் தந்ததாம்

போர்முனையும் ஏர்முனையும் ஒன்று போலவாம்
வீரர்களும் உழவர்களும் வெல்ல வேண்டுமாம்
ஜெய் ஜவான் ஜெய் கிசான்
ஜெய் கிசான் ஜெய் ஜவான்
லால்பகதூர் தந்த மந்திரத்தைச் சொல்லுவோம்
நாடும் வீடும் ஊரும் வாழ நாமும் வெல்லுவோம்
(ஏடு தூக்கும்)

சுற்றுப்புறச் சூழலை நாம்
சுத்தமாக வைத்திருப்போம்
மற்றவருக் குதவி செய்யும்
பண்பை வளர்ப்போம்
பெற்றவரை பெரியவரை
மதித்து நடப்போம்
கற்றுக் கொள்ளும் கல்வியாலே
ஊருக்குழைப்போம்
(ஏடு தூக்கும்)

*14-05-2020*

## 229. சிறுவர் இசை: 3

தோட்டத்தில் பாருங்கள் பட்டாம் பூச்சி
தொடநினைத் தாலது முடியாது
ஒவ்வொரு செடியாய் உட்காரும்
ஒருநொடி கூடத் தங்காது
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

பறக்குது பாருங்கள் தேனெடுக்கப்
படபடவென்று சிறகடிக்க
சுறுசுறுப் பாகச் சுத்திவரும் - அதைப்
பாத்தா நமக்கும் புத்திவரும்
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

கண்ணுக்கும் அழகு கருத்துக்கும் அழகு
பட்டாம் பூச்சியைப் பாருங்கள்
புழுவாய் இருந்து பூச்சியும் ஆகிப்
பறக்கும் கதையைக் கேளுங்கள்
இன்றைய சிறுவர்களே
நாளைய மன்னர்களாம்

தோட்டத்தில் பாருங்கள் பட்டாம் பூச்சி
தொடநினைத் தாலது முடியாது
ஒவ்வொரு செடியாய் உட்காரும்
ஒருநொடி கூடத் தங்காது
எத்தனை எத்தனை வண்ணங்கள்
எட்டி யிருந்தே எண்ணுங்கள்

*25.03.2015*

## 230. சிறுவர் இசை : 4

கல்வி தரும் ஆசிரியர்
கடவுள் போலவாம் - அவர்
சொல்லித்தரும் பாடம் என்றும்
துணை இருக்குமாம்
நல்லவிதம் நம்மையெல்லாம்
நடத்திச் செல்லுவார் - நாம்
வழி தவறும் போது கொஞ்சம்
புத்தி சொல்லுவார்
(கல்வி)

நாலும் மூணும் ஏழென்று
நாம் புரிந்து கொள்ள
நாலாண்டுக் காலம் பொறுமை
காத்திருந்தவர்
வீரக் கதைகள் சொல்லி நெஞ்சில்
விளக்கேற்றினார் - நாம்
தைரியமாய் வாழ நல்ல
வழி காட்டினார்
(கல்வி)

புல்நுனியில் பனித்துளியில்
வானம் தெரியலாம் - அவர்
போதனையில் உலகத்தையே
புரிந்து கொள்ளலாம்
கல்வியெனும் அழியாத
செல்வம் தருபவர் - நம்
கருத்தினிலே எப்போதும்
நிலைத்திருப்பவர்
(கல்வி)

*17-05-2020*

## 231. சிறுவர் இசை : 5

அண்ணா தங்கை அக்கா தம்பி
எங்கள் குடும்பம் பெரிசு
ஒண்ணா படிச்சு விளையாடக்
கடவுள் தந்த பரிசு - இது
கடவுள் தந்த பரிசு
(அண்ணா)

துள்ளித் திரிவோம் ஒருவருக் கொருவர்
சொல்லித் தருவோம் பாடங்கள்
பள்ளிக்கூடம் ஒரே குடும்பம்
நாங்கள் பாசப் பறவைகள்
(அண்ணா)

வெய்யிலடித்தால் பள்ளியறைக்குள்
விதவிதமான நாடகங்கள்
மழையடித்தாலது ஓய்ந்த பின்னே
விடுவோம் காகித ஓடங்கள்
முத்து முத்தாய்க் கையெழுத்தில்
பத்திரிகை நடத்திக்
கதைகள் கவிதைகள் எழுதுகிறோம்
ஓவியம் வரைகின்றோம்
(அண்ணா)

வள்ளுவர் இளங்கோ கம்பர் பாரதி
எங்களுக்குள் உண்டு
காந்தி நேரு வ.உ.சி.யும்
உருவாகின்றார் இங்கு
மருத்துவர் உண்டு ஓவியர் உண்டு
ஆசிரியர் உண்டு
நாளை உலகம் எங்கள் கையில்
நம்பிக்கை உண்டு.
(அண்ணா)

*18-05-2020*

## 232. சிறுவர் இசை: 6

இங்கே பார் ஒரு ரோஜாப் பூ
அங்கே பார் ஒரு மல்லிப்பூ
இன்னும் எத்தனை வண்ணப்பூ
சிறுவர் எங்கள் அணிவகுப்பு

எதிரே பார் ஒரு மான்குட்டி
அருகினிலே கன்றுக்குட்டி
சிங்கக் குட்டி முயல்குட்டி
சிறுவர் நாங்கள் படு சுட்டி

ஆடிப் பாடித் திரிந்தாலும்
அன்னை தந்தை சொன்னவுடன்
பாடம் படிக்க உட்காரும்
பாலர் நாங்கள் எல்லாரும்

விளையாட்டு பல வேடிக்கை
விதவித மான கேளிக்கை
இருந்தாலும் நல்லொழுக்கத்தை
விட மாட்டோம் அது வாடிக்கை

அச்சமில்லை அடக்கமுண்டு
பணிவும் உண்டு துணிவும் உண்டு
கள்ளமில்லை கவனமுண்டு
கனிவும் நெஞ்சில் உறுதியுமுண்டு
நாளை உலகம் நம்முலகம்
போரில்லாத பொன்னுலகம்
காண்போம் நாங்கள் நிச்சயமே
அதுதான் எங்கள் லட்சியமே

*18-05-2020*

## 233. சிறுவர் இசை: 7

கோவப்படப் பழகிக்கணும் தம்பி - கருப்புக்
கோட்டுப் போட்ட சாமி சொல்லிக்
கொடுத்த பாடம் தம்பி
(கோவப்பட)

தப்புக் கண்டாத் தட்டிக் கேக்கும் தைரியம் வேணும்
எப்பவுமே நியாயத்தின் பக்கம் நிக்கணும்
அக்கம்பக்கம் வம்புக்கெல்லாம் ஒதுங்கிப் போகணும் - ஆனா
அக்கிரமம் நடந்தா நீ எதுத்துப் பேசணும்
(கோவப்பட)

கோவத்துல அறிவிழந்து போகக் கூடாது - ஆனா
கோவப்பட மறந்துவிட்டா அறம் ஜெயிக்காது
கோவத்தை நீ ஆள வேணும் தம்பி
கொடுமைக் கெல்லாம் முற்றுப் புள்ளி
வைக்க வேணும் தம்பி

கோவப்படப் பழகிக்கணும் தங்கச்சி - கருப்புக்
கோட்டுப் போட்ட சாமி சொல்லிக்
கொடுத்த பாடம் தங்கச்சி
கோவப்படப் பழகிக்கணும் தங்கச்சி

*21-05-2020*

## 234. சிறுவர் இசை: 8

அன்னை பூமியிது - எங்கள்
அன்னை பூமியிது
மண்ணும் கல்லும் மட்டும் இல்லை
மனித வியர்வை கலந்தது
மலைகள் நதிகள் மட்டும் இல்லை
காவியங்கள் நிறைந்தது
(அன்னை)

முன்னர் முனிவர்
சொன்ன தெல்லாம்
இன்றைக்கும் எதிரொலிப்பது
என்ன கவிதை என்ன பாடல்
எப்படித்தான் வியப்பது
(அன்னை)

தமிழிலே திரு வள்ளுவர் - பாஞ்
சாலத்தில் குருகோவிந்தர்
மராட்டியத்தில் சிவாஜி - வங்கம்
தந்த சிங்கம் நேதாஜி
தலைநிமிர்ந்து வணங்குவோம் - நம்
தாய்நாடென்று வாழ்த்துவோம்
(அன்னை)

நடுவில் அடிமைப் பட்ட போதும்
நடுக்கம் இன்றி எதிர்த்து நின்றோம்
அண்ணல் காந்தி தலைமையில் நாம்
அணிதிரண்டோம் வெற்றி கண்டோம்
பெற்றுவிட்டோம் சுதந்திரம் - அதைப்
பேணிக் காக்கும் மந்திரம்
அன்னை பூமி என்பதே
பாரதத்தின் பண்பதே
(அன்னை)

*22.05.2020*

## 235. சிறுவர் இசை: 9

க்ரிக்கெட் ஆடுவோம் டென்னிஸ் ஆடுவோம்
கிட்டிப்புள்ளு கீச்சுக்கீச்சுத் தாம்பாளம் ஆடுவோம்
கபடி கபடி என்று பாடுவோம் - பாடம்
கவனமாகப் படித்தபின் விளையாடுவோம்

ஜிகுபுகு ஜிகுபுகு ஜிகுபுகு ஜிகுபுகு
ரயிலாட்டம் ஒயிலாட்டம் மயிலாட்டம் ஆடு- பரிட்சையில்
பெயிலாகக் கூடாது படிக்கணும் ஓடு
கொக்கொக் பாலடை கோழிக்குஞ்சு பாலடை - புதுச்
சொக்காக் கெடைக்கும்னு அக்கா சொன்னா - டேய்
ஒழுங்காப் படிச்சுப் பாஸாகாட்டா
ஒதை கெடைக்கும்னு அம்மா சொன்னா

கோலிக் குண்டு பம்பரம் தட்டாமல ஐஸ் பாய்
தாண்ட வாடா பச்சைக் குதுரை - அட
நான்தாண்டா பேட்டைக்குச் சின்னதுரை
மழை பேஞ்சாக்கா அந்தாக்ஷரி
கேரம்போர்டு செஸ்ஸு இதுமாதிரி
எத்தனை எத்தனை ஆட்டம் - நம்ம
மூளைக்கும் ஒடம்புக்கும் ஊட்டம்
புத்தகம் படிப்பு விளையாட்டு - நாங்க
புத்தம் புதுமலர்த் தோட்டம் - மகிழ்ச்சி
பொங்கும் சிறுவர் கூட்டம்

*23-05-2020*

## 236. சிறுவர் இசை: 10

அந்த நிலாவுக்கு முயல்குட்டி போனதும் எப்படியோ
ஆம்ஸ்ட்ராங் எடுத்துச் சென்றரா - இல்லை
ஆண்டவனே கொண்டு வைத்தாரா
நிலா நிலா - ஓ நிலா நிலா

வட்ட நிலாவில் சுட்ட வடைகளை
என்ன செய்தாளோ பாட்டி - நூறு
காக்கா வந்து கொத்திக் கொண்டு
போனதோ போக்குக் காட்டி
நிலா நிலா - ஓ நிலா நிலா

மலைமேல் ஏறி மல்லிகைப் பூவும்
கொண்டு வந்ததோ வெண்ணிலா- சிவன்
முடிமேல் இருந்து முல்லைச் சரமாய்
விழுந்ததும் நம் கண்ணிலா
நிலா நிலா - ஓ நிலா நிலா

*23-05-2020*

## 237. சிறுவர் இசை: 11

துள்ளிக் குதிக்கும் கன்றுகளோ தோகை விரிக்கும் மயில்களோ
பள்ளி செல்லும் பாலகரே
என்ன பாடம் படிப்பீரோ - இன்று
என்ன பாடம் படிப்பீரோ
(துள்ளிக் குதிக்கும் கன்றுகளோ)

ஆசான் சொல்லித் தரும் பாடம்
கணக்குப் பாடம் விஞ்ஞானம்
சரித்திரப் பாடம் பூகோளம்
சரியாய்ப் படித்து வருவீரோ
(துள்ளிக் குதிக்கும் கன்றுகளோ)

பாட்டு செய்யுள் நன்னடத்தை
பாடம் கற்றுக் கொள்வீரோ
வீட்டுப்பாடம் விட்டுவிடாமல் விளக்கேற்றிய பின் பயில்வீரோ
(துள்ளிக் குதிக்கும் கன்றுகளோ)

தோட்டத்தில் உள்ள பூவெல்லாம்
சொல்லித்தரும் சில பாடங்கள்
கூரையில் மேயும் கோழிகள் ஆடுகள்
பூனைகளிடமும் கேளுங்கள்
நாட்டுக்காக நல்லது செய்யும்
நாட்டம் வளர்த்துக் கொள்ளுங்கள் - நீங்கள்
ஓட்டுப் போடும் வயதுவரும் - அதை
யோசிப்பதற்கும் பழகுங்கள்
(துள்ளிக் குதிக்கும் கன்றுகளோ)

*24-05-2020*

## 238. யார் பாடும் பாடல்

யார் பாடும் பாடல் இங்குக் காற்றானது
யார் பார்வை பேரின்ப ஊற்றானது
யாரால் என் உயிர்மூச்சு சீரானது
(யார் பாடும்)

வேரின்றிப் பூ நின்று சதிராடுமா
விரலின்றி வீணையில்
இசை மேவுமா
யார் சொல்லி என் வானம் புலர்கின்றது
யார் தொட்டென் நெஞ்சில் பூ மலர்கின்றது
யாரால் என் உயிர் கீதம் வளர்கின்றது
(யார் பாடும்)

விண்ணோடு தானந்தத் தேயும் நிலா - இவள்
பண்ணோடும் என்னோடும் வாழும் நிலா
மொழி என்ற தேனூறித் திளைக்கின்றவள்
மௌனத்தில் சுடராக முளைக்கின்றவள்
தொடுவானமாய் என்னை வளைக்கின்றவள்
(யார் பாடும்)

*(1994)*

## 239. தேன்மாரி பொழியும்

தேன்மாரி பொழியும் உன் திவ்ய நாமம் - நீ
சின்முத்திரை காட்டும் தெய்வ ரூபம்
நான் மாறி நீயாகும் சித்த தேகம்
உருவாகும் நிலை கூடும் பக்தி யோகம்
(தேன்மாரி)

சரணங்கள் அலைமோதும் தவசாகரம் - மனச்
சலனங்கள் அழிக்கின்ற கருணாகரம்
அகங்காரம் என்ற ஒரு பஸ்மாசுரம் - அந்த
பஸ்மத்தில் மெய்ஞான சூர்யோதயம்
(தேன்மாரி)

விரதக் கனல் மூளும் அடர் கானகம் - அங்கு
விளையாடும் பூந்தென்றல் உந்தன் முகம்
சிறகின்றிப் பறக்கும்என் கானாம்ருதம் - கேட்டுச்
சிரக்கம்பம் செய்யும் உன் புலி வாகனம்
(தேன்மாரி)

*15.09.1985*

## 240. உயிர்ப்பூவில் ஊறும் அமுதம்

உயிர்ப் பூவில் ஊறும் அமுதம் - இசை
யாகிப் பொழியும் தருணம் புலன்
ஐந்தும் உன்வசம் அடைக்கலம் பரவசம்
நாத ப்ரம்மமே நமோ நமோ
நாத ப்ரம்மமே

தெளிந்த ஓடை நீரிலே - உன்
ஒளிமுகம் தெரியுமே
நெளிந்து செல்லும் நதிகளும் - உன்
நினைவில் தாளம் போடுமே
உள்ளும் புறமும் காற்று நீ
உலகங்கள் ஜனிக்கும் ஊற்றுநீ
நாத ப்ரம்மமே நமோ நமோ
நாத ப்ரம்மமே
(உயிர்ப்பூவில்)

சின்னக் குழந்தை சிரிக்கும் பொழுது
மின்னல் வெளிச்சம் தெறிக்கும் பொழுது
நெஞ்சில் கவிதை பிறக்கும் பொழுது
கொஞ்சிக் குலவும் விந்தை அழகு
நாத ப்ரம்மமே
நாம ரூபம் இன்றி என்னை ஆளும் தென்றலே - என்
பாடலால் இவ்வுலகில் அமைதி கூட வேண்டுமே

*1994*

## 241. தோகைமயில் ஒண்ணு

தோகைமயில் ஒண்ணு தோள்மேல சாஞ்சு தூங்குதடி
எட்ட நின்னு காத்தும்
ஏக்கப் பெருமூச்சு வாங்குதடி
பூங்குயில் கூவுது ஆராரோ
பொன்வண்டு பாடுது தாலேலோ

காத்தாச் சிலுக்குறா கண்ணைத் தொறந்தா
கனவா மொதக்குறா நெஞ்சில் சுமந்தா
ஆத்துமணல் எல்லாம்அள்ளித் தெளிச்ச
வெள்ளி நெலவா - என்
மேல படர்ந்தா
உள்ளத்துல சூரியனைப்
போல எழுந்தா
(தோகைமயில்)

ஓடை தூங்க இந்த ஊர் தூங்க
ஓசையில்லாம காத்தும் தூங்க
மானம் தூங்கப் பச்சை
வயல் தூங்க - என்
மார்பில் சாஞ்சபடி அவ தூங்க
- என்
மனசு மட்டும்தான் தூங்கலடி - அதில்
பாட்டுச் சத்தம் இன்னும் ஓயலடி
(தோகைமயில்)

*19-06-1994*

## 242. என்னை எழுதிடும் கவிதையே

உன்னை
நினைத்துக் கொள்ள நிமிடம் போதும் - அதை
நிலைக்க வைக்கும் கவிதை யோகம்
உனக்கும் எனக்கும் உள்ள பந்தம்
ஒன்று மட்டும் என்றும் சொந்தம்
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

மனைவி மக்கள் என்பதெல்லாம்
மரணம் வரையிலே
மனையும் பொருளும் தேகத்தை - நான்
மறக்கும் வரையிலே - நீ
ஏற்றி வைத்த தீபம் மட்டும்
அணைவ தில்லையே - எந்தக்
காற்று வந்து மோதினாலும்
கலைவதில்லையே
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

உன்னைப் பாடும் எண்ணம் என்னுள்
யார் விதைத்தது - அந்தப்
பாடலுக்குள் பரவசத்தை
யார் வளர்த்தது
பாடப் பாடத் திரையறுந்து
நான் விழுந்தது
பாடல் உந்தன் பேர்மறந்து
தேன் பொழிந்தது
இறைவனே இறைவனே - என்னை
எழுதிடும் கவிதையே

*07-05-1990*

## 243. எல்லாருக்கும் பாடுறேன்

உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லாருக்கும் பாடுறேன்
யாருக்கு எப்போது என்று தெரியாமல் பாடுறேன்

நீருக்கும் நிலத்துக்கும் நான்
நெருப்பை அள்ளிப் போடுறேன்
பத்திக்கட்டும் இல்லையென்றால் அணைக்கட்டும் என்று சொல்லி
நீருக்கும் நிலத்துக்கும் நான்
நெருப்பை அள்ளிப் போடுறேன்
நெசத்துக்கும் நிழலுக்கும் என்
நெஞ்சைத் தொறந்து பாடுறேன்

உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லாருக்கும் பாடுறேன்

வழக்கப் படிச்சுப்புட்டு வாதாடும் வக்கீலு தான்
கணக்கப் புரிஞ்சுக்கிட்டா கவிதை பாடுறேன் - உலகக்
கணக்கப் புரிஞ்சுகிட்டா கவிதை பாடுறேன் - மனசு
கனத்தை இறக்கிவைக்க இடம்தேடுறேன்

உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லாருக்கும் பாடுறேன்

களத்துமேட்டில் நடந்துவரும் கருப்பாயிக் கொருபாட்டு
இரும்புக்கம்பியை வளைச்சுப்போடும் இசக்கிமுத்துவுக்
கொருபாட்டு
பள்ளிக்கூட வாத்தியாரு பாத்திமாவுக்(கு) கொருபாட்டு
படிக்காம பராக் பாக்கும் பரட்டத் தலைக்கும் ஒருபாட்டு

உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லாருக்கும் பாடுறேன்
யாருக்கு எப்போது என்று தெரியாமல் பாடுறேன்
உனக்கும் எனக்கும் மட்டும் இல்லை
எல்லாருக்கும் பாடுறேன்

*30-10-2020*

# அகர வரிசை


| | |
|---|---|
| அடக்கம் அமரருள் உய்க்கும் | 265 |
| அட்றா சக்கே | 156 |
| அண்ணாச்சி பழனியிலே | 34 |
| அது, அந்தக் காலம் | 94 |
| அந்த மழைத்துளி | 83 |
| அமர கவிதை | 188 |
| அரசியல் கூத்து | 135 |
| அருந்த, அருந்த... | 23 |
| அவர் ஜெயித்து விட்டால்...? | 104 |
| ஆசிரியர்க்கே நம் முதல் வணக்கம் | 227 |
| ஆலாபனை எதற்கு? | 249 |
| இசையிலே அசையலாம் | 39 |
| இணைந்து வசிக்கிறேன் | 259 |
| இருவேறு உலகத்து இயற்கை | 114 |
| இல்லையானவன் | 82 |
| இறுதி விண்ணப்பம் - 1 | 109 |
| இறுதி விண்ணப்பம் - 2 | 111 |
| இன்றிந்தக் கணமே | 133 |
| இனிமையான தமிழிலே... | 166 |
| உங்க வக்கீல்! | 96 |
| உண்மையைப் பாடுகிறேன் | 145 |
| உயிர்ப்பூவில் ஊறும் அமுதம் | 279 |
| உள்ளம் மலராகத் தொழுவேன் | 254 |
| உறவைச் சொல்லி கேக்காதே ஓட்டு | 139 |
| உன் கண்ணுக்கு மையெழுத... | 40 |
| உனக்காகவே... | 172 |
| உனக்கும் எனக்கும் | 41 |
| உனக்கேன் ஊர் கவலை? | 112 |
| உன்னையரு மலராய் மாற்றுகிறேன் | 69 |
| ஊழல் பெருச்சாளி | 75 |
| எங்கும் கண்ணன் | 224 |
| எங்கே போனீங்க, இந்தியரே! | 140 |
| எத்தனை நாட்கள் காத்திருப்பானோ? | 210 |
| எத்தனைக் காலம்தான் ஏமாறுவோம் | 103 |
| எத்துணையும் பேதமில்லை | 124 |
| எப்படி எப்படித் தீண்டுவதோ! | 61 |
| எப்பொழுதோ கேட்ட இசை | 17 |
| எல்லாம் அவனே | 192 |
| எல்லாருக்கும் நான் நண்பனுங்க! | 134 |
| எல்லாருக்கும் பாடுறேன் | 282 |
| எல்லாருக்கும் மார்கழி! | 159 |
| எல்லாரும் நண்பர்களே! | 167 |
| எல்லாரும் மனுசங்கதான் | 122 |
| எழுந்திராய், நிலா! | 163 |
| என் குருநாதன் | 185 |
| என் பாட்டு முடியாது! | 155 |
| என்றும் முட்டாளுங்க... | 216 |
| என்னென்னவோ சொல்லிப்பார்த்தேன் | 215 |
| என்னை எழுதிடும் கவிதையே | 281 |
| என்னையள்ளித் தின்றவள் | 196 |
| ஏமாத்தாதீங்க | 99 |
| ஏழு பிறவிகளும் மராமரம் | 230 |
| ஏனிந்த மௌனம் | 68 |
| ஒருவரை ஒருவர் | 142 |
| ஒரே முத்தம் | 47 |
| ஓட்டும் நானே! | 100 |
| கடற்கரை மணலுல... | 51 |
| கடிதமும் கவிதையும் | 19 |
| கண்ணில் வளரும் சித்திரம்போல்... | 129 |
| கண்ணுல ஒத்திக்கணும் | 127 |
| கண்ணைத் தொறந்த ராசாத்தி | 92 |
| கண்ணோடு கண் என்றாலும் | 71 |
| கணநேர அமைதி | 247 |
| கரைப்பதுதான் கவிதை | 256 |
| கலையட்டும் உன்மௌனம் | 253 |
| கவிதை எழுத வா - காற்றே! | 50 |
| கவிதை வண்டி | 74 |
| கவிதையாக வா! | 186 |
| களவாட வந்தாயோ கதிரேசா? | 168 |
| கனவினிலே வந்து கவிதைப்படி | 107 |
| கனவு வாங்கலியோ, சாமீ! | 21 |
| காகிதமா, ஆயுதமா? | 76 |
| காசுக்கா ஓட்டு? | 91 |
| காணாமப் போனாரா கொத்தனாரு? | 120 |
| காத்தாயீ ஓ காத்தாயீ | 54 |
| காத்துக்கும் பூமிக்கும் கல்யாணமாம் | 49 |
| காதல், காதல், காதல் | 48 |
| காதலியே ஓ காதலியே | 194 |
| காற்றுப் பல்லக்கிலே... | 16 |
| காற்றும் - தென்னையிளங் கீற்றும் | 64 |
| கிட்டப்பாவோட கிண்கிணிக் குரல்! | 119 |
| குரு வணக்கம் | 73 |

| | |
|---|---|
| கூடச் சேர்ந்து பாட... | 15 |
| கூடுவிட்டுப் போன பின்னும்... | 175 |
| கேட்காத பாடல் | 202 |
| கேட்டு வாங்கிப் போட்ட பாட்டு | 87 |
| கோப நெருப்பு | 77 |
| கோவம் வருதா? | 88 |
| கோஷத்தை நம்பாதே! | 217 |
| சங்கீத சாம்ராஜ்ய மன்னவராம் | 260 |
| சங்கீதம் பாடுகின்றேன் | 57 |
| சனங்க பேசும் பாஷை | 251 |
| சாராய பரணி | 261 |
| சாராயப் பிரச்சினைக்குப் பேராயம்! | 116 |
| சாவி எங்கே? | 95 |
| சித்திரத்துத் தாமரை | 52 |
| சித்திரப் பெண்ணே | 233 |
| சிவப்பு முக்காடு... | 229 |
| சிறுவர் இசை : 4 | 269 |
| சிறுவர் இசை : 5 | 270 |
| சிறுவர் இசை 2 | 267 |
| சிறுவர் இசை: 1 | 266 |
| சிறுவர் இசை: 10 | 275 |
| சிறுவர் இசை: 11 | 276 |
| சிறுவர் இசை: 3 | 268 |
| சிறுவர் இசை: 6 | 271 |
| சிறுவர் இசை: 7 | 272 |
| சிறுவர் இசை: 8 | 273 |
| சிறுவர் இசை: 9 | 274 |
| சின்ன சின்ன பாதம் வைத்து... | 59 |
| சுப்பு போட்ட பொங்கல் | 208 |
| சுழலச் சுழல... | 27 |
| செந்தழலில் வீணை... | 24 |
| செல்ஃபோனால் | 225 |
| செல்பேசி என் தோழி | 209 |
| சேவிப்போர்க்கு ஆனந்த மூர்த்தி | 70 |
| ஞானத் தோணி | 232 |
| ஞானப் பெண்ணே | 32 |
| டாம் - ஜெர்ரி | 78 |
| டிஸ்னி உலகம்! | 222 |
| தச்சன் மகனே | 255 |
| தந்தமுத்தம் ஒவ்வொன்றும் தாமரைப்பூ | 239 |
| தமிழ் தமிழ் தமிழ்... | 165 |
| தமிழ்க்குமரி ஆண்டாள் | 130 |
| தமிழ்நாடு, தமிழ்நாடாம் | 138 |
| தமிழில் வாழ்த்துகிறேன் | 218 |
| த்யானம் | 243 |
| தினம்தோறும் படைக்கின்றேன் | 244 |
| தீபம் நீதானே! | 207 |
| தீபாவளி உரையாடல் | 205 |
| துட்டுக்குப் பாடலே | 117 |
| தெக்கத்திக் காத்துல.... | 176 |
| தெய்வத்தில் பேதம் இல்லை | 193 |
| தெருப்பாடகன் | 152 |
| தென்றலில்லை, உன் அன்பு முகம் | 29 |
| தேசம் இந்த தேசம் | 169 |
| தேசிகன் யாரோ! | 213 |
| தேர்தல் நேரம் | 79 |
| தேர்தலோடு முடிந்து விடாது | 106 |
| தேன்மாரி பொழியும் | 278 |
| தொடர்கதையாய் வளர்நிழலா | 263 |
| தோகைமயில் ஒண்ணு | 280 |
| தோன்றாத் துணை | 121 |
| நங்கையுன் கன்னங்களில் | 262 |
| நடந்தாய் வாழி காவேரி | 177 |
| நடந்து செல்கிறோம்... | 184 |
| நடுத்தெருவில் பாடுகிறேன் | 150 |
| நம் தெய்வங்கள் | 204 |
| நம்ம தேசங்க | 153 |
| நம்ம நாடு | 148 |
| ந்யாயத்தப் பேசு புள்ளே! | 173 |
| நாட்டைக் காக்கும் கையாலே | 80 |
| நாதசுர மன்னன் | 131 |
| நான் அந்தணன் | 128 |
| நான் அழைத்தா நீ வரவேண்டும்? | 240 |
| நான் என்றும் குழந்தை | 236 |
| நான் பாட்டாளி | 190 |
| நானா பாடுகிறேன்! | 149 |
| நானா வைத்தேன் இந்த நெருப்பை | 189 |
| நானேதான் அவளோ! | 212 |
| நானோ இந்த நாடகம் ஆடுகிறேன்! | 195 |
| நிலா, நிலா | 137 |
| நீ என்றாலும் நிஜம் | 84 |
| நீதியின் குரல் | 164 |
| நீயா, நீல வானமா! | 264 |
| நீயாகி மறைகின்றேன் | 199 |
| நெஞ்சின் நிழல் | 170 |
| நெஞ்சுக்குள்ள பாடலுண்டு | 53 |
| நெய்யபிஷேகம் ஜமாய்கிறே! | 56 |
| நெருப்பு - இன்னும் நெருங்கு | 22 |
| நேரமில்லையோ? | 214 |
| பட்டணத்துச் சாமி வந்து பற்றவைத்த தீ | 26 |
| பட்டாம்பூச்சி | 81 |
| ப்ரேமையின் வடிவம் | 219 |

பல்லக்கில் பாரதி 203
பலே ரங்கநாதா 125
பழைய சுவடியில் 231
பனிச்சரிவில் சிவப்பு ரத்தம்..! 146
பனித்துளியோ வாழ்க்கை 33
பாட்டிசைத்தால்... 200
பாட்டுக் கேக்க நேரமில்லையா? 179
பாடணும் நான் பாடணும் 37
பாடல் செய்த பாதை 44
பாடிப் பாடித் தொழுதும் 60
பாபா சேவடிகள் துணையே 25
பாரதி தேசம் 234
பாரதி வீரம்! 241
பாரில் அதிசயம் பாரதி 198
புத்தம் புது மலர் போல் 43
புதுச்சேரி வாத்தியாரு 118
புதுப்புதுப் பொழுதுகள் புலர்ந்திடுமாம் 183
புறப்படு மச்சான் 108
புன்னகைத்தாலே புவியதிரும் 62
பூ மலர்வது போல் 55
பூவுக்கொரு பாடல் 38
பெருவுடையார் 248
பேய்மழை 85
பொறுமைக்கும் எல்லையுண்டு 147
மக்கள் பாடும் பாட்டு 252
மக்களைப் பாடும் வாயால்... 98
மதுராபுரித் தாய் 201
மந்திரத் தமிழ் 245
மரப்பாச்சி பொம்மைகள் 67
மரியாதை எந்நாளும்
கொறயாதவன் 113
மலரட்டும் கவியே 197
மழை மேகமா? மலர்தூவுமா! 36
மழைக்கூத்தாடு மகமாயி 63
மழைத்தாளம் கேட்டு... 72
மற்றும் ஓர் ஆண்டா? 242
மனக் கதவைத் தட்டும் விரல் நான் 182
மனம் 18
மனம், யாரை மிகத் தேடுமோ 171
மன்னன் பிறந்து விட்டான்! 162
மனுசங்களா மாறணும் 257
மாடி மேல மாடி கட்டி 143
மாடு நம்ம சாமிடா டோய் 86
மாதா சரஸ்வதியே! 157
மானத்தோடு வாழ்ந்திடுவோம் 105
முகில்வண்ணம் 237
முற்றும் இழக்கும் மனத்துணிவு 226
முன்னோர்கள் யார்? 126
யார் செய்த ஓசைகள்.... 42
யார் பாடும் பாடல் 277
யார் பாதச் சுவடுகளோ! 20
யாரடி இந்த மாமுனி 28
யாருக்கு யார் சொந்தம்? 220
யாரோட பாட்டு? 90
ரசம் போன கண்ணாடி 181
வட்ட நிலாத் தோசை 238
வாக்காளரே, வாக்காளரே! 160
வாங்கையா, வேட்பாளர் ஐயா! 101
வாடகை தருவாயா? 228
வாழ்த்தப் பிறந்தவன் 66
வானம் நீ, நான் பறவை 158
வானமானவன் 31
விடுதி ஆட்டம் 136
விலை போக மாட்டோம் 144
வீதிக்கு வீதி பாடுவோமே 211
வெண்ணிலா மிதக்கும் வழி 65
வேட்பாளரே, வேட்பாளரே! 161
வேண்டுதல் 30
ஜதி பல்லக்கு 132
ஜனனி, ஜனனி, ஜனனி! 45



வானவில் கே.ரவி

# வானவில் கே.ரவியின் படைப்புகள்

## தமிழ் நூல்கள்

- நமக்குத்தொழில் கவிதை (கவிதையியல் கட்டுரைகள்)
- உன்னோடு நான் (முதல் கவிதைத்தொகுப்பு)
- மின்னற்சுவை (பாரதியியல் கட்டுரைகள்)
- சொற்களுக்குள் ஏறிக்கொள் (கட்டுரைத் தொகுப்பு)
- வள்ளுவரின் வாயிலில் (கட்டுரை)
- காற்று வாங்கப் போனேன் (தன் வரலாறு)
- இருபதாம் நூற்றாண்டு இயல்பியல் வரலாறு (அறிவியல் நூல்)
- சொன்னதும் சொல்லாததும் (கட்டுரைகள்)
- அணையாத சுடரேற்றுவேன் (இரண்டாவது கவிதைத் தொகுப்பு)
- மக்கள் பாடும் பாட்டு (இசைப்பாடல்கள்)

*(மேற்காணும் பட்டியலில், 1 முதல் 5 வரை உள்ள ஐந்து நூல்களும் ஒரே தொகுதியாகக் 'கானல் நீரைக் கடந்து' என்ற தலைப்பில், சமீபத்தில், வெளியிடப்பட்டது)*

## ஆங்கில நூல்கள்

- Justice Versus Natural Justice (Law)
- Law Logic and Liberty (Law)
- Verses of Wisdom (Spiritualism)
- A Spark, A Petal! (A Collection of English Poems and Songs)

புதிய இலக்கு புதிய தடம்
நிவேதிதா பதிப்பகம்